# கேரி தமிழ்ப்பள்ளி ஆண்டு மலர்

## 2019 - 2020

### கீழடி அகழ்வாராய்ச்சி சிறப்பு மலர்



## கேரி தமிழ்ப்பள்ளி

கேரி, வட கேரோலைனா,
அமெரிக்கா

https:/carytamilschool.org/

# தமிழ் வழி நாகரீகம் கீழடி

## தொடரும் பயணங்கள்...



1974-ஆம் ஆண்டு உழவிற்காகத் தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து கிடைத்த செங்கற்களை மாணவன் ஒருவன் கீழடி பள்ளியின் ஆசிரியரிடம் காண்பித்தான். அந்த செங்கல்லைப் பார்த்த ஆசிரியர் அவை சங்ககாலத்தைச் சேர்ந்தது என அறிகிறார். இது தான் கீழடி வரலாற்றின் முதல் பொறி.




அடுத்த ஆண்டு பள்ளியிலேயே ஹிஸ்டரி கார்னர் என்ற பகுதியை ஏற்படுத்தி கிடைத்த பொருட்களை அங்கு வைக்கப்பட்டன. 1976-ஆம் ஆண்டு அப்போதைய தொல்லியல் ஆய்வுத்துறையின் இயக்குநர் திரு.நாகசாமி அவர்களைச் சந்தித்துத் தகவலை தெரிவிக்க, அவர் ஆய்வாளார் வேதாசலம் அவர்களை அனுப்பி அப்பொருட்களைக் கொண்டு வந்து சென்னை அருங்காட்சியகத்தில் வைக்க ஏற்பாடு செய்தார்.




சரியாக 37 ஆண்டுகள் கடந்து 2013-இல் தொல்லியல் ஆய்வாளர்கள் திரு.வேதாசலம், திரு.அமர்நாத் மற்றும் திரு.ராஜேஷ் ஆகியோர் பண்டைய பொருட்கள் கிடைத்த அந்தக் கிணற்றின் உரிமயாளரின் துணையோடு ஆய்வு செய்தனர்.





மேலும் வைகை நதி படுகையில் நடைபெற்ற கள ஆய்வில் சுமார் 293 பல்வகைத் தொல்லியல் எச்சங்கள் கொண்ட ஊர்கள் அடையாளம் காணப்பட்டன. அவற்றில் கீழடியைத் தேர்வு செய்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தொல்லியல் ஆய்வு செய்ய மத்திய அரசிடம் அனுமதி பெற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2015ஆம் ஆண்டு 43 குழிகளும், 2016ஆம் ஆண்டு 59 குழிகளும், அமைத்து ஆய்வை மேற்கொண்டனர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த தமிழர்நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!! வாழ்த்துதுமே!!!

*- மனோன்மணியம் பெ.சுந்தரம் பிள்ளை*




கேரி தமிழ்ப்பள்ளி, கேரி, வட கேரோலைனா, அமெரிக்கா

வணக்கம்

நமது பள்ளியை சிறப்பாக நடக்க உதவி புரியும் தன்னலமற்ற தமிழ் ஆர்வலர்களான ஆசிரியர்கள், நிர்வாகத்திற்கு உதவி புரியும் பெருந்தகை தன்னார்வலர்கள் அவர்களின் தனிப்பட்ட நேரத்தைத் தமிழ்ப் பள்ளியில் தமிழைக் கற்பிப்பதற்கும், பள்ளியை வழிநடத்துவதற்கும் ஒதுக்கிச் செயல்படுவது மிகவும் போற்றுதற்குரியது. வியக்கத்தக்க ஒப்படைப்பு உணர்வுடன், தனிப்பட்ட ஈட்டல் நோக்கமின்றிப் பள்ளியை நடத்தத் துணை நின்ற குடும்பத்தார்க்கும் தலைமையாசிரியர் என்ற முறையில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நமது ஆசிரியர்கள் மாணவர்களின் மொழித்திறனை மேம்படுத்த அவர்களை ஊக்கப்படுத்தி முனைப்போடு செயல்படுகிறார்கள். மொழி கற்றல் நமது வீட்டில் இருந்து தான் ஆரம்பிக்கிறது. நீங்கள் தான் உங்கள் குழந்தைகளின் முதல் ஆசிரியர். வீட்டில் பெற்றோர்கள் தங்களுக்குள் உரையாடும் போதும் குழந்தைகளுடன் அளவளாவும் போதும் தமிழையே பயன்படுத்தினால் மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சி அடைய உதவியாக இருக்கும். அத்துடன் ஆங்கிலச் சொற்களைத் தவிர்த்து தமிழ்ச் சொற்களை பயன்படுத்தினால் மாணவர்களின் மொழி திறனை மேம்படுத்த மேலும் உதவி செய்யும்.

நம் சமூகம் இங்கு தழைத்து நம் அடையாளம் நிலைத்திருக்க நமது தமிழ் மொழி கல்வி மிகவும் அவசியம்... தாய்மொழியைப் பயில்வதால் நம் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் அறிந்து கொள்ளவும், பல்வேறு கருத்துப்பரிமாற்றங்களை திறம்பட விவாதிக்கவும் உதவியாக இருக்கும். மொழி பாதுகாப்பு என்பது மொழிகள் அழியாமல் இருக்க நாம் எடுக்கும் முயற்சி. அடுத்த தலைமுறைக்கு நாம் நம் மொழியை கற்பிக்கும் போது மொழி சரிவும் கலாச்சார இழப்பும் ஏற்படாது. தமிழ்மொழி கல்வி மூலம் நமது வருங்கால சந்ததியினர் நமது கலாச்சாரத்தின் முக்கிய பண்புகளைப் புரிந்து கொள்வார்கள். நமது மொழியைக் காத்து நமக்கு அளித்த பெருமை நமது முன்னோர்களுக்கு உண்டு. நமது கலாச்சாரத்தின் முக்கிய கூறாகிய தமிழ்மொழியை அடுத்த சந்ததியினர்க்கு கொடுப்பது நமது கடமையாகும்.

நமது ஆசிரியர்கள் அடுத்த கட்டமாக நமது மாணவர்கள் தங்களுடனும், பெற்றோர்களுடனும், உறவினர்களிடமும் தயக்கமின்றித் தமிழில் பேச ஊக்குவிக்க நாம் என்ன செய்யலாம் என்று சிந்தித்துத் திட்டமிடுகிறார்கள்.

அனைவரின் தளராத உதவி, ஒத்துழைப்பு, இணைந்து செயல்படுதல் ஆகியவற்றால் நமது பள்ளி மென்மேலும் வெற்றி அடையும் என்பது உறுதி.

**தமிழ் வாழ்க.**

செல்வன் பச்சமுத்து, தலைமை ஆசிரியர்,
கேரி தமிழ்ப்பள்ளி, கேரி, வட கரோலினா,
அமெரிக்கா.

அன்பார்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், தன்னார்வலர்கள் மற்றும் மலர் வாசகர்கள் அனைவருக்கும் அன்பு வணக்கம்.

நமது தமிழ்ப் பள்ளி மாணவர்களின் எண்ணங்களை, ஆழ்ந்த உணர்வுகளை, மனக்கனவுகளை உள்வாங்கி, அவைகளின் பிரதிபலிப்பை மற்றவர்களுக்கு பறைசாற்ற அமைந்த ஒரு சிறந்த ஊடகமாக நமது தமிழ்ப்பள்ளியின் ஆண்டு மலர் அமைவதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். தமிழ்மொழியிலும், தமிழர் கலாச்சாரத்திலும், அதன் பாரம்பரியத்திலும் நம் பள்ளி மாணவர்களின் புரிதலை, பரிணாம வளர்ச்சியை ஆண்டுக்கு ஆண்டு அளவெடுக்கும் ஒரு அளவுகோலாக ஆண்டு மலரில் பதிப்பிக்கப்படும் அவர்களின் படைப்புகள் அமைகின்றன.

நமது தமிழ்ப்பள்ளியின் நிகழ்கால ஆண்டு மலரை படைப்பதில், நமது மாணவர்கள் அளவிலா ஆர்வத்துடன் மேற்கொண்ட முயற்சிகளும், அவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக தொடர்ந்து நற்பணி செய்து வரும் ஆசிரியர் பெருந்தகைகளின் தன்னலமற்ற சேவையும், அவர்களுடன் இணைந்து மாணவர்களை நல்வழிப்படுத்தும் பெற்றோர்களின் ஈடில்லா உழைப்பும் அளப்பரியது. இவர்களுடன் இணைந்து, நமது பள்ளியின் ஆண்டு மலர் ஒரு சிறப்பான ஆவணமாக அமைவதற்கு, தன்னார்வலர்கள் பலர் நமக்கு பல்வேறு துறைகளில் ( நிழற்படம் - லோகேஷ், பிரேம், செந்தில், சுரேஷ், டுடிஷ்; படைப்பு - அசோக்குமார்; திருத்தம் - அனைத்து ஆசிரியர்கள்; அச்சேற்றம் - சேகர்), மிகச் சிறப்பான முறையில் உதவியுள்ளனர். அவர்களின் தன்னலமற்ற உதவி இல்லாமல் இந்த ஆண்டு மலர் இவ்வளவு சிறப்பாக அமைந்திருக்க முடியாது என்பது மிகவும் உண்மை. நமது பள்ளி ஆண்டு மலர் மிகச் சிறப்பாக அமைய உதவிய அனைத்து தன்னார்வலர்களுக்கும், நண்பர்களுக்கும், கேரி தமிழ்ப்பள்ளி நிர்வாகக் குழுவிற்கும், ஆண்டு மலர் படைப்புக் குழு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும் இந்த ஆண்டு மலரின் வாயிலாக, தமிழர்களின் தொன்மை, கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளை உலகிற்கு எடுத்துரைத்துக் கொண்டிருக்கும் கீழடி அகழ்வாராய்ச்சியின் சில பதிவுகளை உங்களுக்கு வழங்குவதில் பெருமை அடைகிறோம். கீழடி அகழ்வாராய்ச்சியின் சிறப்புகள் பற்றிய பல பதிவுகள் இந்த சிறப்பு ஆண்டு மலரில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவைகளைப் படித்தறிந்து பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைவீர்கள் என்று நம்புகிறோம்.

முனைவர் சக்திவேல் கார்த்திகேயன் அசோக்குமார் நாகராஜன்
ஆண்டு மலர் குழு



## பள்ளி நிர்வாகக்குழு:

வேதா வேதையன், குரு குருபரன், செல்வன் பச்சமுத்து, ராஜி சண்முகம், ரவி சண்முகம், முனைவர் தணிசேரன், முனைவர் சக்திவேல் கார்த்திகேயன்

# கேரி தமிழ்ப்பள்ளி, கேரி, வட கேரோலைனா, அமெரிக்கா



ஆசிரியர்கள் / நிர்வாகக்குழுவினர்

## ஆசிரியர்கள் / நிர்வாகக்குழுவினர்

செல்வன் பச்சமுத்து, கஸ்தூரி ரெங்கராஜன், சுவாமிபிரசாத் கோபாலன், முருகபூபதி அழகர்சாமி, உதயகுமார் செந்தில்வேலு, சிவபிரகாஷ் கண்ணன், குரு குருபரன், தீத்தாரப்பன் மந்திரமூர்த்தி, பரத் ராமமூர்த்தி, அசோகன் ராமநாதன், சரண் சரவணன், விக்னேஷ் கிருஷ்ணமூர்த்தி, அறிவுடைநம்பி துரைசாமி, வேதா வேதையன், ரவி சண்முகம்

தியாகராஜன் வல்லபன், கணேசன் மணி, பகீரதன் மகாலிங்கம், முருகையா முரளிதரன், ஜெயப்பிரகாஷ் முருகேசன், அம்பலவாணன் சுப்பையா, செந்தில்குமார் பாலசுப்ரமணியம், சங்கரலிங்கம் லோகநாதன், சுகுமார் பொன்ராம், தணி சேரன், ராம்குமார் ரவிக்குமார், ராஜீ பாலாஜி, ராமநாதன் பழனியப்பன், சக்திவேல் கார்த்திகேயன்

காயத்ரி கோசனம் மாதையன், மனோரஞ்சனி ராஜவேல், தீபா துளசி இங்கர்சால், கனிமொழி சதிஷ், மலர்விழி கேசவன், மலர்விழி கலைமணி, லட்சுமி பரமசிவன், பிரகலதா சபாபதி, உத்தமிஸ்ரீ சுரேஷ், ராஜராஜேஸ்வரி ஜனார்த்தனன், விஜயஸ்ரீ பார்த்தசாரதி, சரண்யா கார்த்திகேயன், காயத்ரி பரமசிவம், அனிதா ராமராஜ், நிவேதிதா சங்கரன்

திரிபுரசுந்தரி ராஜேந்திரன், ரேகா சிதம்பரம், நாகராணி பார்த்திபன், பொற்கொடி மகேஷ், ஏகம்மை லட்சுமணன், சுவர்ணா விஜயகுமார், ஜெயஸ்ரீ முருகேசன், பாரதி முருகேசன், அருணா சரவணன், சரோஜினி பிரபாகர், பிரசன்னா சத்யா சுரேஷ், அனுராதா வெங்கட்ராமன், சுபத்ரா முருகானந்தம், ஜெயலட்சுமி ரவிக்குமார்

இந்துமதி துரைராஜ், கவிதா அம்மையப்பன், நளினி முனிராஜ், சௌமியா இராஜாராம், கார்த்திகா சுரேந்தர், யாமினி ராஜாஜி, சங்கீதா கிருஷ்ணமூர்த்தி, காயத்திரி சாமிநாதன், பகவதி பிரியங்கா, மலர்விழி இளங்கோவன், ஆர்த்தி இமயவரம்பன், ஜெயப்பிரதா கிசன்சிங், தீப்தீ கிருஷ்ணகுமார், கவிதா கோவிந்தராஜன், சித்ரா நந்தகுமார்

கலைச்செல்வி பேச்சிமுத்து, காயத்திரி ராஜமோகன், பிரீதிவி அருண்குமார், உஷா சரவணகுமார், சுகந்தி கோபிநாத், ரேவதி கிருஷ்ணா, ராதா குப்புசாமி, ரேவதி இராஜாராம் பிரசாத், சரண்யா ஞானசுந்தரம், மைதிலி மகேஸ்வரன், ஜெயந்தி வெங்கடேசன், மாலா வேதையன், கீதா மீனாட்சிசுந்தரம், சுஜாதா முத்துச்சாமி, சியாமளா கிருஷ்ணன்

தேவகி செல்வன், பிரம்மி மீனு, சுஜாதா மோகன், புவனா பிரபு, சங்கீதா மகேந்திரன், கோல்டா மெர்லின், ராஜி சண்முகம், கிருஷ்ணவேணி ஜெயப்பிரகாஷ், இந்திராதேவி சுவாமிநாதன், மோகனா இளங்கோவன், சாருலதா குருபரன், சோனியா மோகன், மீனா இளஞ்செயன், ரேவதி இராமசாமி, சசி ஹரிதாஸ்

# கீழடி, நம் தாய்மடி – ஒரு முன்னுரை

வைகை நதியின் தென்கரையில், மதுரை மாநகரத்திற்கு சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்திருக்கும் கீழடி கிராமத்தில் 2014ஆம் ஆண்டில் மத்திய தொல்லியல் துறை நடத்திய அகழாய்வில் அங்கு, 2,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மனிதர்கள் நகர நாகரீகமாக வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

தமிழகத்தில் அமைந்துள்ள அகழாய்வுகளிலேயே இது தான் மிகப்பெரிய அளவில் நடைபெற்ற அகழாய்வாகும்.





சிந்து சமவெளி நாகரீகம் முதலாம் நகர நாகரீகம். அதன் பிறகு, கங்கைச் சமவெளியில் இரண்டாம் நகர நாகரீகம் கிட்டத்தட்ட கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றியது. ஆனால், அதற்கு இணையான காலகட்டத்தில் தமிழகத்தில் எந்த நகர நாகரீகமும் இருந்ததற்கான ஆதாரங்கள் இது வரை கிடைத்ததில்லை. முதன் முதலாக கீழடியில் அதே காலகட்டத்தில் நகர நாகரீகத்திற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆகவே, இரண்டாம் நகர நாகரீக காலத்தில் தமிழகத்திலும் நகர நாகரீகம் இருந்ததாகக் கொள்ள முடியும். கீழடியில் கிடைத்த பொருட்களை வைத்து, கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே இரண்டாவது நகர நாகரீகம் துவங்கியுள்ளது என்ற முடிவுக்கு தொல்லியல் துறை வந்துள்ளது. கங்கைச் சமவெளியிலும் இதே காலகட்டத்தில் தான் நகர நாகரீகம் உருப்பெற்றது.

கீழடி அகழ்வாராய்ச்சியின் சிறப்புகள் பற்றிய பல பதிவுகள் இந்த ஆண்டு சிறப்பு மலரில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவைகளைப் படித்தறிந்து பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைவீர்கள் என்று நம்புகிறோம்.

### கீழடி முதல் கட்டம்:

ஜூன், 2015-ம் அன்று துவங்கியது.



### கீழடி இரண்டாம் கட்டம்

ஜனவரி, 2016 அன்று இரண்டாம் கட்ட அகழாய்வு தொடங்கியது. இதில் மருத்துவ குடுவைகள், பழங்கால உறை கிணறுகள், தொழிற்சாலை, அரசு முத்திரை உள்ளிட்ட பல்வேறு ஆவணங்கள் கிடைத்தன.

இரண்டாம் கட்ட அகழாய்வின் முடிவில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருள்கள் கிடைத்தன. இவற்றை ஆய்வுக்கு உட்படுத்தியபோது 2,200 ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தவை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

### கீழடி மூன்றாம் கட்டம்

ஜனவரி, 2017 முதல் செப்டம்பர் 2017 வரை நடைபெற்றது. மூன்றாம் கட்டப் பணியில் 400 சதுர மீட்டர் அளவுக்கு 16 குழிகள் தோண்ட இடம் தேர்வு செய்யப்பட்டது.

### கீழடி நான்காம் கட்டம்

நான்காம் கட்ட அகழாய்வு பணிகள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்றது. இதற்கு முந்தைய மூன்று அகழாய்வு பணிகளையும் இந்திய தொல்லியல் துறை நடத்தியிருந்த நிலையில் நான்காம் கட்ட அகழாய்வை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நடத்தியது. இந்த அகழாய்வின் போது பெறப்பட்ட பொருட்களில் உள்ள எழுத்து வடிவங்கள் சிந்து சமவெளி நாகரிக எழுத்து வடிவம் மற்றும் தமிழ் பிராமி எழுத்து வடிவங்களுக்கு இடையில் உள்ள ஒரு குறிப்பை நமக்கு காட்டுவதாக அமைந்துள்ளன.



நான்காம் கட்ட அகழ்வாய்வின் போது பெறப்பட்ட பொருட்களை கரிமத் தேதியிடல் முறையில் பகுப்பாய்வு செய்த போது அதில் ஒரு கலைப்பொருள் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் தெரிய வந்துள்ளது.

கீழடியில் இது வரை ஒரு சிறிய பகுதியில் மட்டும் ஒரு டன் அளவிற்கு கருப்பு சிவப்பு மட்கல ஓடுகள் கிடைத்துள்ளன.




பல ஓடுகளில் 'தமிழ் பிராமி' எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மீன் உள்ளிட்ட அடையாளங்களும், சேந்தன் ஆவதி, திசன், உதிரன், ஆதன், இயனன், சராமா உள்ளிட்ட பெயர்கள், தமிழ் பிராமி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.





ஆதன்



குவிரன் ஆத[ன்]

## கீழடி ஐந்தாம் கட்டம்

ஜுன் 2019-ல் இருந்து நான்கு முதல் ஐந்து மாதங்கள் நடந்தது. ஐந்தாம் கட்ட அகழாய்வில் எலும்புகளால் செய்யப்பட்ட எழுத்தாணி, தந்தத்தில் செய்யப்பட்ட சீப்பு, அரவைக் கல், பானை ஓடுகள், சதுரங்கக் காய்கள், சூதாட்டத்தில் பயன்படுத்தப்படும் பகடைக் காய்கள், மண் குடுவை, பவள மணிகள், சுடு மண் வார்ப்பு, காளையின் தலை, மனித உடல் பாகம், மனித தலை உருவம் போன்றவைகளும் கண்டறிப்பட்டுள்ளன. கறுப்பு சிவப்பு நிறப் பானை, கூர்முனை கொண்ட எலும்பு கருவிகள், நூல் நூற்கும் தக்களிகள் (ஆபரண மணிகளைக் கோர்க்கும் கருவி). தங்க அணிகலன்கள், மணிகள் போன்றவையும் கண்டறியப்பட்டுள்ளன. விளையாட்டு பொருட்கள், சுடு மண்ணாலான மனித உருவங்கள், காதணிகள், மூன்று விலங்கு உருவங்கள், தங்கம், இரும்பு, செம்பு உலோக தொல்பொருட்கள் மற்றும் தமிழ் பிராமி எழுத்து பொறித்த பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. சன்னமான களிமண், செங்கல், சுண்ணாம்புச் சாந்து, இரும்பு ஆணிகள் பயன்படுத்தி கட்டுமானத் தொழில்நுட்பத்தில் வீடுகள் கட்டப்பட்டிருந்தது. கதிரியக்கக்கரிமக் காலக்கணிப்புப்படி இத்தொல்லியில் களம் கி.மு. 600 காலத்தவை என அறியப்பட்டுள்ளது. இந்த அகழாய்வில் 2,600 ஆண்டுகளுக்கு முந்தைய வைகைக் கரை நாகரிகம் சிறந்து விளங்கியதற்கான சான்றுகள் கீழடி அகழ்வாராய்ச்சியினங மூலம் தெரியவந்துள்ளன.

கீழடியிலிருந்து கிட்டத்தட்ட 70 எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை (53%) காளை, எருமை, ஆடு, பசு ஆகியவற்றினுடையவை. ஆகவே கீழடியில் வாழ்ந்த சமூகம் பெரும்பாலும் ஆடு, மாடுகளை வளர்த்த சமூகமாக இருந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர் ஆய்வாளர்கள்.

அழகன் குளத்தில் நடந்த அகழாய்வில் பண்டைய ரோமானிய நாட்டின் உயர்ரக ரவுலட், ஹரிடைன் மண்பாண்டங்கள் கிடைத்தது போன்று கீழடி பள்ளிச்சந்தை புதூரிலும் கிடைத்துள்ளது. அந்த வகையில் அழகன் குளம் துறைமுகப் பட்டிணத்தையும் மதுரையையும் இணைக்கும் இடமாக கீழடி பள்ளிச்சந்தை இருந்திருக்கலாம். மேலைநாடுகளுக்கு கடலில் பிரயாணம் செய்யும் வணிகர்கள் இந்த ஊரின் வழியாக சென்றிருக்கலாம். இங்கு கிடைத்துள்ள தடயங்கள், சான்றுகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

ஐந்தாம் கட்ட அகழாய்வில் சுடுமண்ணால் ஆன குழாய் போன்ற அமைப்பில் வடிகால் அமைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. சிவப்பு வண்ணத்தில் நன்றாக வடிவமைக்கப்பட்டுள்ள இரண்டு சுடுமண் குழாய்கள் ஒன்றோடு ஒன்று பொருந்திய நிலையில் கிடைத்தன. இந்தக் குழாய்கள் 60 சென்டி மீட்டர் நீளமும் 20 சென்டி மீட்டர் அகலமும் கொண்டிருந்தன. இந்தக் குழாய்கள் ஒவ்வொன்றிலும் விளிம்புகளைப் போல ஐந்து வளையங்கள் உள்ளன. இந்த இரு குழாய்களும் ஒன்றோடு ஒன்று நன்கு பொருத்தப்பட்டிருப்பதால், நீரைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்ல இவை பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என அகழாய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த சுடுமண் குழாய்க்கு கீழே, பீப்பாய் வடிவிலான மூன்று சுடுமண் குழாய்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்திய நிலையில் காணப்பட்டன. ஆகவே இந்த இரண்டு குழாய்ப் பாதைகளும் வெவ்வேறு விதமான பயன்பாட்டில் இருந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.

இந்தக் குழாயின் இறுதிப் பகுதி இரண்டடுக்குப் பானை ஒன்றில் சேர்கிறது. ஆகவே இந்தப் பீப்பாய் வடிவிலான குழாய் மூலம் அந்தப் பானையில் திரவப் பொருளைச் சேகரித்திருக்கலாம் என கள ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



பீப்பாய் வடிவிலான குழாயில் வடிகட்டி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.



கீழடியில் பல இடங்களில் இரட்டை அடுப்புகள் கிடைத்துள்ளன. அவை எதற்காக பயன்படுத்தப்பட்டன என்பது தெரியவில்லை.





சங்க காலத்தில் கட்டிடங்களே இல்லை என்ற கூற்றை இந்த அகழாய்வு மாற்றியமைத்துள்ளது. கீழடியில் கண்டறியப்பட்டுள்ளன கட்டிடங்கள் மூலம் ஒரு நகர நாகரீகம் இருந்ததற்கான அத்தனை அடிப்படை ஆதாரங்களும் கிடைத்துள்ளன. தமிழகத்தில் இது வரை நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் சுடுமண் முத்திரை கிடைத்தது இதுவே முதல் முறை.

இங்கு கிடைத்துள்ள
நூல் நூற்கும் தக்ளி,
அக்கால மக்கள் நூல் நூற்று
ஆடை நெய்து
அணிந்து வாழ்ந்திருப்பதை
உறுதி செய்கிறது.



▸ தக்ளி

கீழடியில் அதிகளவில் செங்கல் வீடுகளும் வீடுகளின் மேற்கூரையில் ஓடுகள் வேயப்பட்டிருந்ததையும் இங்கு கிடைத்துள்ள சான்றுகளின் மூலம் உணர முடிகிறது. குடிநீர் தேவைக்காகவும், வீட்டின் பிற பயன்பாடுகளுக்காகவும் உறைகிணறு தோண்டும் முறை சங்க காலம் முதல் அண்மைக் காலம் வரை இருந்துவருகிறது.சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் பட்டிணப்பாலை என்ற நூலில் பூம்புகார் நகரத்தின் ஒருபகுதியில் உறைகிணறுகள் இருந்தது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டிணப்பாலை நூலாசிரியர் உருத்திரங்கண்ணனார் "உறை கிணற்று புறச்சேரி" எனக் குறிப்பிட்டுள்ளார்.அந்த சங்க காலத்தைச் சேர்ந்த உறைகிணறுதான் கீழடி அகழாய்விலும் கண்டறியப்பட்டுள்ளது.வீடுகள் தோறும் குளியலறைகள் இருந்திருக்கின்றன.



மனித உருவம் கொண்ட பொம்மை.







கீழடியில் கிடைக்கப்பெற்ற அழகிய வேலைப்பாடுடன் அமைந்துள்ள மண்பானை.



சிலப்பதிகாரம், பரிபாடல், மதுரைக்காஞ்சி போன்ற இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் கல்மணிகள் மட்டுமே 600 கிடைத்துள்ளன. முத்துமணிகள்,பெண்களின் கொண்டை ஊசிகள், பெண்கள் விளையாடிய சில்லு,தாயக்கட்டை,சதுரங்க காய்கள்,சிறுகுழந்தைகள் விளையாடிய சுடுமண் பொம்மைகள் ஆகிய சங்க காலம் குறிப்பிடும் பல தொல்பொருட்களும் இங்கு அதிகளவில் கிடைத்திருக்கின்றன.

கீழடியில் சூது பவளம், பளிங்கு, அகேட் பச்சை, மஞ்சள், நீல நிறக் கண்ணாடி மணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. யானைத் தந்தத்தினாலான தாயக்கட்டைகள், தாமிரத்தாலான கண் மை தீட்டும் கம்பி ஆகியவையும் கிடைத்துள்ளன.

கீழடியில் கிடைக்கப்பட்ட நகை அணிகலன்கள்




கீழடியில் கிடைக்கப்பட்ட நகை அணிகலன்கள்



மூடியுடன் மட்பாண்டம்



கரி மற்றும் சாம்பல் கொண்ட உலைகளின் எச்சங்கள், படிகக் கல், கண்ணாடி, மற்றும் இரத்தினக்கல் கொண்டு மணிகள் உற்பத்தி செய்ததற்கான சான்றுகள்.



கீழடியில் பல வகையான வடிவங்களில் கிடைக்கப்பெற்ற மட்பாண்டங்கள்.







அக்கால மக்கள் பயன்படுத்திய எலும்பினாலான வரைகோல்.




கீழடியில் கிடைக்கப்பெற்ற செப்பு நாணயங்கள்.





இரும்பாலான வேல் மற்றும் அம்பு போன்ற ஆயுதங்கள்.







அரவைக் கல்



மண் குடுவை



தந்தத்தில் செய்யப்பட்ட சீப்பு



கீழடி அகழ்வாராய்ச்சியில் கண்டெடுத்த வியக்க வைக்கும் கட்டிடக்கலை.









மேலும் சில மட்பாண்டங்கள்.





புதையுண்ட மட்கலன்கள்








தன்னார்வலர்கள் (போக்குவரத்து):

விஜயகுமார் செங்கோடன் குருசாமி, லோகேஷ் ஜெயகிருஷ்ணன், பிரேம்குமார் சிவநந்தன்,
கௌதமன் கிருஷ்ணமூர்த்தி, அகிலன் ஜெயராமன், ராம்சஞ்சய் முத்துகுமாரசாமி,
தாணுமலையான் ஆலாலசுந்தரம், ராமசாமி குமாரசாமி, ஜெகதீசன் ஜெயவேல், சுப்ரமணியன் தங்கவேலு



## தன்னார்வலர்கள் (வகுப்பறை அமைப்பு):

ராஜசேகரன் கருப்பையா, தில்லைநடராஜன் கார்த்திகேயன், ராஜாராம் வெங்கடசாமி, மீனாட்சி சுந்தரம் ராமநாதன், ராகவன் ராமசுவாமி வெங்கட், சக்திவேல் கார்த்திகேயன், லோகேஷ் ஜெயகிருஷ்ணன், நந்தகுமார் பாலசுப்ரமணியன், விஜயகுமார் செங்கோடன் குருசாமி, ஹரீஷ் பாலகிருஷ்ணன், மகேந்திரன் கிருஷ்ணசுவாமி, அனந்தராமன் சேதுராமன், டுடிஷ் துரை காந்த் ரவீந்திரன்




தன்னார்வலர்கள் (தரவு பதிவு):

ராஜாராம் வெங்கடசாமி, ஹரி பாபு கிருஷ்ணன், ராஜசேகரன் கருப்பையா,
தில்லை நடராஜன் கார்த்திகேயன், ராகவன் ராமசுவாமி வெங்கட், நிரஞ்சன் கந்தசுவாமி,
அடைக்கலவன் குமரப்பன், பரத்ராஜ் ராமநாதன்,
மகேந்திரன் கிருஷ்ணசுவாமி, ஹரீஷ் பாலகிருஷ்ணன்




தன்னார்வலர்கள் (ஆசிரியர் மதிப்பாய்வு):

கா.ச.கார்த்திகேயன், தணி சேரன், ராஜி சண்முகம், அல்லி காளிதாஸ்,
லூர்து ஜெயராணி சவேரியார், ரசியா ரகுமான், சோனை தர்மர்

# தமிழ் என்னும் விதை

விதை உறங்கும் ஆனால் ஓயாது
விதை ஆக்கும் ஆனால் அழியாது
விதை செடியாகும், செடி மரமாகும்
மரம் காய் தரும், காய் கனியாகும்
கனி மீண்டும் விதையை கொடுக்கும்
ஆம். விதை ஆக்கும் ஆனால் அழியாது
விதை ஒரு அதிசயம்
அதன் தேவை நமக்கு அவசியம்
தமிழ் என்னும் விதையை
விதைத்துக் கொண்டு இருக்கிறது நம் கேரி தமிழ்பள்ளி
அதை கண்ணும் கருத்துமாக வளர்த்துவரும்
அனைத்து ஆசிரியர்களுக்கும்
ஞாயிறு உதிக்க மறந்தாலும்
ஞாயிற்றுக் கிழமை மறவாமல்
தம் பணியை செம்மையாக செய்துவரும்
தன்னலமற்ற தன்னார்வலர்களுக்கும்
தமிழின் அவசியம் அறிந்து அதை அடுத்த தலைமுறைக்கு
எடுத்து செல்ல துடிக்கும் பெற்றோர்களுக்கும்
தமிழை ஆச்சரியத்துடனும், ஆவலுடன் சில நேரம் அலுப்புடனும்
கற்றுக் கொண்டு இருக்கும் மாணவர்களுக்கும்


வாழ்த்துக்களும், நன்றி கலந்த பாராட்டுகளும்


தமிழை விதைப்போம், தமிழை வளர்ப்போம்!
தமிழ் ஆக்கும், அது அழிக்காது!


அம்பலவாணன் சுப்பையா
ஆசிரியர்



அதிதி பிரசன்னா, நித்திலா இளையராஜா, ஹர்ஷிதா அருள், கலைச்செல்வி பேச்சிமுத்து (ஆ),
சர்வேஷ் குமார், அர்ச்சித் விஜய், கோகுல் தியாகராஜன்
ஜெகதீஷ்வர் முருகேசன், வைஷ்ணவி செந்தில்குமார், அதிதி ஸ்ரீநிவாசன்,
சுஜாதா மோகன் (ஆ), சஞ்சய் கண்ணன், அர்ஜுன் மதன்ஸ்ரீ
சிவப்பிரகாஷ் கண்ணன் (ஆ), தனிஷ்வரன் மகேஷ்குமார், ஹரிநந்தன் சதீஷ் குமார் நிர்மலா,
மிஷா பாரத், வர்னிகா வர்ஷினி ரவிவர்மா, மதி பார்த்திபன், ஹரிணி நிர்மல்குமார்






தலைப்பு : ஆத்தி சூடி | நிலை : 3அ

1. தந்தை தாய்ப் பேண்.
2. செய்வன திருந்தச் செய்.
3. சோம்பித் திரியேல்.
4. தேசத்தோடு ஒத்து வாழ்.
5. நன்மை கடைப்பிடி.
6. நூல் பல கல்.
7. நோய்க்கு இடங்கொடேல்
8. மீதூண் விரும்பேல்.

மாணவர் : அ. ஹர்ஷிதா | ஆசிரியர் : திருமதி. கலை செல்வி



தலைப்பு : மாமல்லபுரம் | நிலை : 3A



மாணவர் : சர்வேஷ் | ஆசிரியர் : கலைச்செல்வி பேச்சிமுத்து

---

தலைப்பு : திருப்பதி மலை | நிலை : 3அ

2016 ஆண்டில் நான் திருப்பதி மலைக்கு போனேன். மதியம் 1:00 கோயம்புத்தூர் சந்திப்பில் இருந்து விரைவு வண்டியில் சென்றேன். அங்க இருந்து திருப்பதி அடைந்தோம். அருகில் உள்ள கோவில் தேவஸ்தானத்தில் அன்று இரவு தங்கினோம். காலையில் எழுந்து குளித்துவிட்டு, அரவண பவனில் உணவு சாப்பிட்டேன் கீழ் திருப்பதியில் உள்ள கோவில்களுக்கு சென்றேன். திருமலா திருப்பதி தேவஸ்தானத்தில் எங்கள் பெட்டியை (உடமைகளை) தந்துவிட்டு மலை ஏற ஆரம்பித்தோம். சில மணி நேரம் கழித்து ரொம்ப சோர்வாக இருந்தது. பக்கத்தில் நிறைய கடைகள் இருந்தது. அங்கு எலுமிச்சை சாறு, மோர், மற்றும் வாழைபழம் வாங்கி சாப்பிட்டோம். சில நேரம் கழித்து 5th மலைக்கு போனோம். மொத்தமாக 7 மலைகள் இருக்கிறது. போகும் வழியில் நிறைய கடைகள் இருந்தது. நள்ளிரவு 11:45 ஆகிவிட்டது. மொத்தம் 10,000 படிக்கட்டுகள் இருந்தது. மேல் திருப்பதியை அடைந்த பிறகு எங்கள் பெட்டிகளை வாங்கிகொண்டு, தேவஸ்தானம் விடுதிக்கு சென்றேன். அடுத்த நாள் நாங்கள் குளித்துவிட்டு கோவிலுக்கு சென்றேன். 3 மணி நேரம் காத்திருந்து சாமியை பார்த்தோம். கோவில் மிகவும் அழகாக இருந்தது. சாமியை பார்க்க மிகவும் அழகாக இருந்தது. மாலை நேரத்தில் பக்கத்தில் உள்ள கடைகளுக்கு சென்று சாமி படங்கள் மற்றும் மரப்பெட்டியை வாங்கினேன். எல்லாம் உடமைகளை எடுத்து கொண்டு விடுதியை காலி செய்துவிட்டு கீழ் திருப்பதிக்கு திரும்பினோம். கீழ் திருப்பதியில் இருந்து இரயில் நிலையத்துக்கு சென்று அன்று இரவு கோயம்புத்தூர் திரும்பினோம்.







மாணவர் : ஹரிநந்தன் S.N. | ஆசிரியர் : ரமேஷ்

---

தலைப்பு : பல்லாங்குழி | நிலை : 3A



1. பல்லாங்குழி என்பது, பொதுவாக பெண்கள் விளையாடும் ஒரு விளையாட்டு.

2. பல்லாங்குழி என்பது மரம் அல்லது உலோகத்தால் ஆன ஒரு விளையாட்டுச் சாதனம். அதில் இரு வரிசைகளில் ஏழு குழிகள் இருக்கும்.

3. இரு வரிசையிலும் சேர்ந்து பதினான்கு குழிகள் இருப்பதால் குழி விளையாட்டு என்பதை பன்னாங்குழி என அழைத்தனர். பின்னர் பல்லாங்குழி என அழைக்கப்பட்டது.

4. பொதுவாக புளியங்கொட்டையை வைத்தோ அல்லது ஏதாவது பெரிய விதைகளை கோ அல்லது சோழி (சோவி) களையோ ஆடுபொருளாக வைத்து இவ்விளையாட்டு ஆடப்படுகிறது.

மாணவர் : ஜோதி சுவாதி முருகேசன் | ஆசிரியர் : ரமேஷ்


---

தலைப்பு : நவீன எண்களின் மூல எண்கள் | நிலை : 3அ

| இந்து அரேபிய எண்கள் | அரேபிய எண்கள் | தமிழ் எண்கள் | சமஸ்கிருத எண்கள் | சீன எண்கள் |
|---|---|---|---|---|
| 1 | ١ | க | ९ | 一 |
| 2 | ٢ | உ | २ | 二 |
| 3 | ٣ | ங | ३ | 三 |
| 4 | ٤ | ச | ४ | 四 |
| 5 | ٥ | ரு | ५ | 五 |
| 6 | ٦ | சு | ६ | 六 |
| 7 | ٧ | எ | ७ | 七 |
| 8 | ٨ | அ | ८ | 八 |
| 9 | ٩ | கூ | ९ | 九 |
| 10 | ١٠ | ய | ० | 十 |
| 100 | ١٠٠ | m |  | 百 |
| 1000 | ٤ | கு |  | 千 |
| 10<br>100<br>1000 | 10<br>100<br>1000 | கo<br>கoo<br>கooo | ९0<br>९00<br>९000 |  |

மாணவர் : மாதினி | ஆசிரியர் : திரு. இரமேஷ்

தலைப்பு : பொங்கல் | நிலை : 3அ



பொங்கல்:

பொங்கல் என்பது தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும். ஒரு தனிப்பெரும் விழா. உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும் மற்ற உயிர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் ஒரு பண்டிகை தான் பொங்கல் திருநாள். பொங்கல் விழா நான்கு நாள் கொண்டாடப்படும் ஆகும்.

போகி

போகி பண்டிகை என்பது மார்கழி மாதம் முடிந்து தை மாதம் ஆரம்பிக்கும் தருணம் வருகிறது. பழையன கழிந்து புதியது புகும் நாளாக இது கொண்டாடப்படுகிறது.

தைப்பொங்கல்:

தை மாத முதல் நாள் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மாட்டுப் பொங்கல்:

மாட்டுப் பொங்கல் என்பது தைப்பொங்கல் நாளின் மறுநாள் கொண்டாடப்படுகிறது. மக்களின் வாழ்வின் வாழ்வின் வாழ்வில் நன்றி தெரிவிப்பதற்காக பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகக் கொண்டாடுகின்றனர்.

காணும் பொங்கல்:

காணும் பொங்கல் என்பது பொங்கல் கொண்டாட்டங்களில் நான்காவது நாள். இப்பண்டிகையில் உறவினர்கள், நண்பர்கள் காணுதல் மற்றும் பெரியோர் ஆசி பெறுதல் அடங்கும்.

மாணவர் : மிஷா பரத் | ஆசிரியர் : ரமேஷ்

தலைப்பு : திருக்குறள் - கல்வி | நிலை : 3ஆ

(குறள் 391) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

பொருள்: பிழை இல்லாதவற்றைத் தனது குறைகள் நீங்குமளவுக்குக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்ற பிறகு அதன்படி நடக்கவேண்டும்.

(குறள் 392) எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

பொருள்: எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப் படுவன ஆகிய இரு வகைக்கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

(குறள் 393) கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

பொருள்: கற்றவரே கண் உடையவர் கல்லாதவரோ முகத்தில் இரண்டு புண்ணையே உடையவர்.

(குறள் 396) தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.


பொருள்: தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.





மாணவர் : வர்ணிகா ரவிவர்மா | ஆசிரியர் : ரமேஷ் ரத்தினகுமார்

தலைப்பு : தமிழ் மாதம் மற்றும் ராசி | நிலை : 3அ



சூரிய மாதம்

சூரிய மாதங்கள் பூமியை சார்பாகக் கொண்டு சூரியனின் இயக்கத்தை குறிப்பிடும். ஒரு முழு சுற்று ஒரு வருடம் ஆகும். அதை மேடம்-மீனம் என்று 12 மாதங்களாக பிரிக்கப்படும்.

சந்திர மாதம்

ஒரு சூரிய மாதத்தில் சந்திரன் பூரணை அடையும் நாள் எந்த நட்சத்திரத்தில் வருகிறதோ அந்த நட்சத்திரத்தின் பெயரே சந்திர மாதப் பெயராகும். தமிழகத்தில் சந்திர மாதப்பெயரே பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

மாணவர் : கேட்லின் ஷிஜி | ஆசிரியர் : சிவபிரகாஷ் கண்ணன்

தலைப்பு : தைப்பொங்கல் | நிலை : 3அ

தைப்பொங்கல்

பொங்கல் ஒரு அறுவடை திருவிழா.
தைப்பொங்கல் மார்கழி, தை மாதங்களில் கொண்டாடப்படுகிறது. இந்த விழா விஷ்ணுக்கு அர்ப்பணிப்பு! முதல் நாள் போகி பண்டிகை, அது மார்கழியில் கடைசி நாள் கொண்டாடுவோம். அடுத்து வருவது சூரிய பொங்கல், அது தை மாதத்தில் முதல் நாளும், மறுநாள் மாட்டு பொங்கலும், கடைசியாகக் காணும் பொங்கலும் கொண்டாடுவோம்.




மாணவர் : சாய்சரண் கார்த்திகேயன் | ஆசிரியர் : சிவபிரகாஷ் கண்ணன்

பெயர் : சந்தோஷ் குமரன்
வகுப்பு : 3 அ
ஆசிரியர் : சிவபிரகாஷ்




எங்கள் ஊர் புதுவை இப்பொழுது புதுச்சேரி என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.
புதுச்சேரியில் அரவிந்தர் ஆசிரமம், ஆரோவில், மணக்குள விநாயகர் கோவில் மிகவும் புகழ் பெற்றது. பாரதி, பாரதிதாசன், சுப்பையா ஆகியோர் இந்த மண்ணில் வாழ்ந்தனர். இங்கு பாரதி கலைக்கூடம், பாரதிதாசன் நினைவு மண்டபம் உள்ளது.
புதுவை சுதந்திரத்திற்கு முன்னர் பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்தது அதனால் இங்கு பிரெஞ்சு கலாச்சாரம், பிரெஞ்சு நகர கட்டட அமைப்புகள் மிகவும் பிரசித்தம். இங்கு [illegible] கூட பிரெஞ்சு மொழியில் உரையாடப்படும் கடலோரம் ஒட்டிய இந்த சிறிய நகரம் எனக்கு மிகவும் பிடிக்கும்.

---

| தலைப்பு : குமரிக் கண்டம் | நிலை : 3அ |
|---|---|


குமரிக் கண்டம் என்பது இந்தியாவின் தெற்கே இருந்ததாகக் கருதப்படும் இழந்த ஒரு கண்டத்தைக் குறிக்கிறது.

இக்கண்டத்தில் குமரி, பேரு, பகருளி, கன்னி நதிகளும், மேரு மலையும் இருந்தன. இக்குறிப்புகளை சங்ககால நூல்களிலும், சில சீன நூல்களிலும் காணலாம்.

இக்கண்டத்தைப் பாண்டிய மன்னர்கள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகிறது. இக்கண்டம் இயற்கைச் சீற்றத்தால் கடலில் மூழ்கவே, பாண்டியர்கள் தென்னிந்தியாவை நோக்கி புலம்பெயர்ந்து ஆட்சி புரிந்தனர். இக்குறிப்புகளைச் சிலப்பதிகாரம் மற்றும் கந்தபுராணம் போன்ற காப்பியங்களில் காணலாம்.

லீமர் என்ற விலங்கின் புதைபடிவத்தை இந்தியா, ஆஸ்திரேலியா, மற்றும் மடகாஸ்கரில் மட்டும் கண்டுபிடித்தனர். ஆனால் இவற்றை அடுத்துள்ள ஆப்பிரிக்கா மற்றும் மத்திய ஆசியாவில் காண முடியவில்லை.


இதன் மூலம் இவை முன்பு இணைந்து இருந்ததாக அறியப்படுகிறது. இதுபோல, பல சான்றுகள் மூலம் குமரிக்கண்டம் இருந்ததை நாம் அறியலாம்.




| மாணவர் : தனிஷ் வரன் | ஆசிரியர் : சிவபிரகாஷ் கண்ணன் |
|---|---|

---


நட்சத்திர வண்ணக் கோலம் | நிலை : 3A



மாணவர் : அதிதி ஹரிநிவாசன் | ஆசிரியர் : சுஜாதா மோகன்


---


நிலை : 3அ



தலைப்பு : பொங்கல்
மாணவர் : அர்ஜுன் மதன்
ஆசிரியர் : சுஜாதா


தலைப்பு : நட்பை வலுப்படுத்துவோம்
நிலை : 3A
நாங்கள் நண்பர்களை மதிப்போம்.
நாங்கள் மனச்சோர்வு அடைந்தால் நண்பர்களிடம் கூறி ஆறுதல் பெறுவோம்.
நாங்கள் மகிழ்ச்சியான தருணங்களை ஒன்றாகச் செலவழிப்போம்.
மாணவர் : இனியா
ஆசிரியர் : திருமதி சுஜாதா


தலைப்பு: நூலகம் நேசிப்போம்
நிலை: 3அ
சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நூலகம் மிகவும் முக்கியமான ஒன்று. சான்றோர்கள் வாழ்க்கையிலும் அது முக்கியமான இடம் பெறுகிறது. நூலகம் நமக்கு ஒரு முக்கியமான பொக்கிஷம் ஆகும். நம்மை ஏமாற்றாத ஒரு சிறந்த நண்பன் புத்தகம் தான்.....! நல்ல புத்தகங்கள் படிப்பதால் அறிவு வளரும். உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும்.
முதல்வர் அறிஞர் அண்ணா சென்னை கன்னிமரா நூலகத்தில் புத்தகம் படித்தவர். தலைவர்கள் ஆப்பிரகாம் லிங்கன், ஜார்ஜ் வாஷிங்டன், ஜவஹர்லால் நேரு புத்தகங்கள் படிப்பதை வாழ்க்கையின் குறிக்கோளாக கொண்டிருந்தனர்
தமிழ்
ஆங்கிலம்
கணிதம்
அறிவியல்
புவியியல்
மாணவர்: சஞ்சய் கண்ணன்
ஆசிரியர்: சுஜாதா மோகன்


தலைப்பு : தோழிகள்
நிலை : 3a
மாணவர் : வைஷ்ணவி செந்தில்குமார்
ஆசிரியர் : சுஜாதா மோகன்





அசோகன் ராமநாதன் (ஆ), ஹர்ஷினி மோகன்ராஜா, யுவன் ஸ்ரீசீனிவாசன், கண்மணி மதன்ராஜ்,
புவன் பிரவீன், கிரிதரன் அனந்தராமன், காயத்திரி ராஜமோகன் (ஆ)

மான்சி சுதாகரன், தீக்க்ஷிதா செல்வராஜ், ஜனனி லட்சுமிநாராயணன், ஹரிணி ஸ்ரீவிஷ்ணுஹரி,
நிதீஷ் ஹரிபாபு, ஈஸ்வர் பசுபதி, கவின் இரத்னகுமார், ஜெனிகா இனிகோ

தலைப்பு : தமிழர் திருநாள் | நிலை : 3A



## பொங்கல்

தமிழர் திருநாள்... தைப் பொங்கல், அறுவடை திருநாள் என கூறப்படும் பொங்கல் பண்டிகை, தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள்


மாணவர் : தீக்‌ஷிதா செல்வராஜ் | ஆசிரியர் : அசோகன் ராம்

தலைப்பு : விவசாயி காப்போம் விவசாயம் காப்போம் | நிலை : 3அ




மாணவர் : கவின் இரத்தனகுமார் | ஆசிரியர் : அசோகன் ராமநாதன்

தலைப்பு : மயில் | நிலை : 3அ



மயில் இந்தியாவின் தேசியப்பறவை. மயில் சிறகுகளை விரித்து பறக்கும். இந்த அழகிய மயிலிற்கு பல வண்ணங்களைக் கொண்டிருக்கும். பச்சை, மஞ்சள், நீலம், கருநீலம் போன்ற பல வண்ணம் கொண்டிருக்கும். மயில் தோகை விரித்து ஆடும். இது மழை வருவதற்கான அறிகுறி ஆகும். நீண்ட தோகை பெண் மயில்களுக்கு கிடையாது. இந்து கடவுள்கள் பலரை மயிலிறகு அலங்கரிக்க பயன்படுகிறது. சீனாவில் அதிர்ஷடத்தின் சின்னமாக கருதப்படுகிறது.

மாணவர் : மான்விழி சுதாகரன் | ஆசிரியர் : அசோகன்

தலைப்பு : விளையாட்டு | நிலை : 3அ



மாணவர் : நிதீஷ் உதயகுமார் | ஆசிரியர் : அசோகன்

தலைப்பு : தஞ்சை பெரிய கோவில் | நிலை : 3அ



**தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் :**

பிரகதீஸ்வரர் கோவில், தஞ்சை பெரிய கோவில், பெருவுடை கோவில் என்றும் அழைக்கபடுகிறது. இந்த கோவில் ராஜ ராஜ சோழனால் 1003 A.D ஆம் ஆண்டு தொடங்கி 1010 A.D ஆம் ஆண்டு கட்டி முடிக்கபட்டது.

1000 ஆண்டு பழமை வாய்ந்த கோவிலின் அறிய சிறப்பு அம்சங்களை காணலாம்!

- கோவிலின் மொத்தப்பரப்பளவு சுமார் 45 ஏக்கர்.
- யுனஸ்கோ (UNESCO) அமைப்பால் உலக பாரம்பரியமாக அறிவிக்கப்பட்டு பாதுகாக்கபடுகிறது.
- கோவிலின் கட்டமைப்பானது சுமார் 130,000 டன் கருங்கற்களால் கட்டபட்டுள்ளது, ஆகவே இக்கோவில் உலகின் மிக பெரிய கருங்கல் கோபுரம் என்று அழைக்கபடுகிறது.
- 216 அடி கொண்ட விமான கோபுரம் தென் இந்தியாவின் மிக பெரிய கோபுரம் ஆகும்.
- 29 அடி கொண்ட சிவலிங்கம் கோவிலின் பிரமாண்டம் மட்டுமல்லாமல், இந்தியாவின் மிக பெரிய சிவலிங்கமாகும்.
- இக்கோவிலின் பிரமாண்ட நந்தி ஒரே கல்லில் வடிவமைக்கப் பட்டதாகும் (16 அடி நீளம், 13 அடி உயரமாகும்).
- விமான கோபுரம் கல்லானது 80 டன் எடையுள்ள ஒரே கல்லால் உருவாக்கபட்டதாகும்.
- இக்கோவிலின் நிழல் கீழே விழாதென்றும் கூறப்படுகிறது.

மாணவர் : கிரிதரன் அனந்தராமன் | ஆசிரியர் : காயத்திரி/சரஸ்வதி

---

தலைப்பு : ஜல்லிக்கட்டு | நிலை : 3A

ஜல்லிக்கட்டு, ஏறு தழுவுதல், மாடு பிடித்தல் என்று பல பெயர்களில் அழைக்கப்படும் தமிழர்களின் வீர விளையாட்டு. மாட்டை ஓட விட்டு அதன் கொம்பை பிடித்து வீழ்த்துவது அல்லது அதை மனிதர்கள் அடக்குவது தான் இந்த விளையாட்டு. இது ஆண்டுதோறும் தை மாதத்தில் பொங்கல் திருநாளையொட்டி நடத்தப்படுகிறது.

ஏறு தழுவுதல் விலங்குகளைத் துன்புறுத்துவதாகக் கருதி, ஜல்லிக்கட்டை தடை செய்யக்கோரி இந்திய நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து வருகின்றனர். ஆனால் ஜல்லிக்கட்டு காளை அன்போடு, வீடுகளில் சிறப்பாக வளர்க்கப் படுகின்றது. இது தமிழர்களின் பண்பாடு, அதை அழிய விடக் கூடாது என ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

பல கல்வெட்டுகளிலும், பண்டைய இலக்கியத்திலும் ஏறு தழுவுதல் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவ்வளவு தொன்மையான விளையாட்டு தடை செய்யப்பட்ட போது உலகெங்கும் உள்ள தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழர்களின் ஒற்றுமையை இது இன்னும் பல தலைமுறைக்கும் அறிமுகப் படுத்தி, காப்பது தமிழர்களாகிய நம் கடமை!



மாணவர் : ஹர்ஷினி மோகன்ராஜா | ஆசிரியர் : சரஸ்வதி

---

தலைப்பு : ஜவஹர்லால் நேரு | நிலை : 3A



இந்தியாவின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட மிகவும் முக்கியமான தலைவர்களில் ஜவஹர்லால் நேருவும் ஆவார். ஆகஸ்ட் 15, 1947ல் இந்தியா தனிசுதந்திர நாடாக விடுதலைப்பெற்றதும் இந்தியாவின் முதல் பிரதமராக நியமிக்கப்பட்ட நேரு அவர்கள் சுதந்திர இந்தியாவின் கொடியை ஏற்றும் தனிப்பெருமை பெற்றார். அவரது இறுதிகாலம் வரை இந்தியாவின் பிரதமராக பணியாற்றி நாட்டை முன்னேற்றப்பாதைக்கு கொண்டு சென்றார்.

ஜவஹர்லால் நேருவிற்கு குழந்தைகளை எப்போதும் பிடிக்கும். குழந்தைகளை நம்பிதான் நாட்டின் எதிர்காலம் உள்ளது என்பதை மிகவும் திடமாக நம்பினார். குழந்தைகளும் அவரை நேரு மாமா என்றே அழைத்தன. அவரின் பிறந்த நாளான நவம்பர் 14ஐ இந்தியா முழுவதும் குழந்தைகள் தினமாக கொண்டாடுகிறோம். நேருவிற்கு எப்போழுதும் ரோஜாப்பூவை சட்டையில் வைத்துக்கொள்ள பிடிக்கும். இதனால் அவர் "ரோஜாவின் ராஜா" என்று அன்போடு அழைக்கப்பட்டார்.

மாணவர் : ஜனனி லெட்சுமிநாராயணன் | ஆசிரியர் : சரஸ்வதி

---

## தாமரை மலர்

பெயர் : பூவன்நிதி சீனிவாசன்
வகுப்பு : 3 அ
ஆசிரியர் :

தாமரை மலர் இரண்டு வகைப்படும்.

1. செந்தாமரை (சிவப்பு நிறத்தில் பூக்கும்)
2. வெள்ளை தாமரை (வெள்ளை நிறத்தில் பூக்கும்).

தாமரைச் செடி மிகவும் மருத்துவ குணங்கள் உள்ள மூலிகைச் செடி.

தாமரைச் செடியின் விதை, வேர், தண்டு, இலை மற்றும் பூ ஒவ்வொன்றும் மருந்தாகும்.

பொதுவாக தாமரை, கோவில்களின் தெப்பங்களில் மற்றும் குளங்களில் வளரும்

தாமரை பூவை இந்துக்கள் வழிபாட்டு முறையில் பயன்படுத்துவார்கள்.

இந்திய நாட்டின் தேசிய மலர் "தாமரைப்பூ".







நிலை: 3அ
மாணவி: ஜெனிஷா இனிமேகா
ஆசிரியர்: ஹென்றி ஜோசப்

# பொங்கல் விழா

பொங்கல் தமிழர்களின் பண்டிகை. எல்லாரும் சூரியனுக்கும், மாடு மற்றும் பெரியவர்களுக்கு நன்றி செலுத்த கொண்டாடும் பண்டிகை. தை மாதம் முதல் நாள் கொண்டாடுவது வழக்கம். இப்பண்டிகை நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகி - அன்று பழைய பொருட்களை எரித்து வீட்டை சுத்தம் செய்வார்கள். இரண்டாவது நாள் சூரிய பொங்கல் அல்லது தை பொங்கல் - அன்று சூரியனை போற்றி பொங்கல் செய்வார்கள். மூன்றாவது நாள் மாட்டுப் பொங்கல் - அன்று மாடுகளை குளிப்பாட்டி, மஞ்சள் குங்குமம் வைத்து, கொம்புகளுக்கு வர்ணம் பூசி, வண்டியில் பூட்டி வலம் வருவார்கள். நான்காவது நாள் காணும் பொங்கல் - அன்று புத்தாடை அணிந்து பெரியவர்கள் மற்றும் உறவினர்களை சந்தித்து ஆசீர்வாதம் வாங்குவார்கள்.




தலைப்பு: வீரமங்கை வேலுநாச்சியார் | நிலை: 3A

18ம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கு நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண் வீரமங்கை வேலுநாச்சியார்.

இராமநாதபுரம் மாமன்னர் செல்லமுத்து சேதுபதி சக்கந்தி முத்தாத்தாளுக்கு 1730ம் ஆண்டு ஒரே பெண் வாரிசாக பிறந்தவர் தான் இந்த வேலுநாச்சியார்.

ஆணுக்கு நிகராக ஆயுதப் பயிற்சி பெற்றார். பல மொழிகள் கற்றார். பருவத்தில் அடியெடுத்து வைத்தார். 1746ல் சிவகங்கை மன்னன் முத்துவடுக நாதர் வேலுநாச்சியாரை தனது மனைவியாக்கிக் கொண்டார்.

மாணவர்: நிசிதா ஜெயக்குமார் | ஆசிரியர்: HENRY



ஜனனி சோலையப்பன், பிரணவ் குமரன், சித்தார்த் சரவணன்,
அதிதி லட்சுமிநாராயணன், அமிரா கான், நிரந்தரா சிவகுமார்
முருகபூபதி அழகர்சாமி (ஆ), ஜெயதேவ் ஜெயப்பிரகாஷ், இராகுல் வெங்கடேசன்,
கிருஷ்ணா குமரப்பன், காவ்யா ராஜேஷ், லாவண்யா கார்த்தி
தேவகி செல்வன் (ஆ), கவின் மீனாட்சி சுந்தரம், ஆதித்யா குமரன்,
ஹரிணி அனந்தராமன், வர்ஷா சிவகுமார், ஷேஷா ஜசீர்

தலைப்பு : திருவள்ளுவர் | நிலை : 3அ




மாணவர் : ஜெயதேவ் ஜெ. | ஆசிரியர் : அசோக்குமார்

## விடுமுறை சுற்றுலா | 3அ

நான் பள்ளி விடுமுறைக்கு கப்பலில் பகாமாசுக்கு என் குடும்பத்துடன் சென்றேன். கப்பலுக்குள் 15 மாடிகள் இருந்தது. அதில் ஏழாவது மாடி அறையில் நான் தங்கினேன். நாங்கள் அங்கே பனி சறுக்கு விளையாடினோம். நாங்கள் கப்பலில் நிறைய நிகழ்ச்சிகள் பார்த்தோம். ஒரு ஆடல் நிகழ்ச்சியும் ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியும் பார்த்தோம். நாங்கள் விடுமுறை முடிந்து, கேரிக்கு திரும்பினோம்.

கிரிணா சண்முகம் | அசோக்குமார்

தலைப்பு : பொங்கல் பண்டிகை | நிலை: 3அ



மாணவர் : கிருஷ்ணா இமையப்பன் | ஆசிரியர் : அசோக்குமார்

தலைப்பு : தமிழ் சொல் உண்டியல் | நிலை : 3A

இது கணினி உலகம்; அறிவியல் உலகம் எனவே இதைச்சார்ந்த ஆங்கில சொற்களை தமிழில் சொல் உண்டியலாக தருகிறேன்.

| ஆங்கில வார்த்தை | தமிழ் மொழி பெயர்ப்பு |
|---|---|
| 1. சிடி (CD) → | குறுந்தகடு |
| 2. பிரிண்டர் (printer) → | அச்சுப்பொறி |
| 3. ஜீபீஸ் (GPS) → | தடங்காட்டி |
| 4. தம்ப்டிரைவ் (Thumb drive) → | விரலி |
| 5. வைஃபை (WiFi) → | அருகலை |
| 6. டிவிட்டர் (Twitter) → | கீச்சகம் |
| 7. யூடியூப் (Youtube) → | வலையொளி |
| 8. ஆன்லைன் (online) → | இயங்கலை |
| 9. ஆஃப்லைன் (offline) → | முடக்கலை |
| 10. சிசிடிவி (CCTV) → | மறைகாணி |
| 11. ஸ்கேனர் (scanner) → | வருடி |
| 12. ஹார்டுடிஸ்க் (Hard disk) → | வன்தட்டு |
| 13. 3டி (3D) → | முத்திரட்சி |
| 14. ப்ரொஜக்டர் (Projector) → | ஒளிவீச்சி |
| 15. இன்ஸ்டாகிராம் (Instagram) → | படவரி |

மாணவர் : லாவண்யா | ஆசிரியர் : அசோக் நாகராஜன்

தலைப்பு : தஞ்சை பெரிய கோவில் | நிலை : 3A



• தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், ராஜராஜ சோழன் அரசரால் கிபி 984-1010 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
• இக்கோவில் 130,000 டன் கிரானைட்டால் கட்டப்பட்டது.
• இந்த கோவிலின் கோபுரம் 216 அடி உயரம் கொண்டது உச்சியில் 80 டன் எடை கொண்ட ஒரே கல்லில் ஆன விமானம் அமைக்கப்பட்டது
• இக் கோபுரத்தின் நிழல் கீழே விழாதவாறு அமைக்கப்பட்டது அதிசயம்.
• ஒரே கல்லில் செதுக்கப்பட்ட பெரிய நந்தி சிலை உள்ளது.

ஆயிரம் வருடம் பழமையான இக்கோவிலை நாம் ஊருக்கு செல்லும் போது தரிசிப்போம்.

மாணவர் : இராகுல் | ஆசிரியர் : அசோக்குமார்

---

தலைப்பு : அதியமான் - ஔவையார் நட்பு | நிலை : 3அ

## அதியமான் - ஔவையார் நட்பு

அதியமான் சங்ககால மன்னர்களில் ஒருவர். அவர் இராஜ்ஜியத்தில் மக்கள் மகிழ்ச்சியுடனும், கவலை இல்லாமலும் வாழ்ந்து வந்தார்கள். தமிழக கர்நாடக எல்லையை அவர் ஆட்சி செய்து வந்தார்.

தகடூர் அவரது தலைநகரம். இவருடைய இயர்பெயர் நெடுமான் அஞ்சி. அவரிடம் யார் வந்தாலும் அவர் இல்லை என்று சொல்லமாட்டார்.

தமிழ் புலவர்களில் ஔவையாருக்கு ஒன்பதாவது இடம். அதியமானும் ஔவையாரும் சிறந்த நண்பர்கள்.

ஒருமுறை அதியமானுக்கு அரிய நெல்லிக்கனி ஒன்று கிடைத்தது. அதை உண்டால் நீண்டகாலம் உயிர் வாழலாம்.

அப்பழத்தை அவர் உண்ணாமல் ஔவையாருக்கு கொடுத்தார்.

தான் நெடுங்காலம் வாழ்வதைவிட, தமிழ் வாழவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

மாணவர் : ஆதித்யா குமரன் | ஆசிரியர் : தேவகி செல்வன்

---

தலைப்பு : தமிழ் மன்னர்கள் | நிலை : 3அ

சங்க காலத்தில் தென்னிந்தியாவை சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்தனர். மேற்கே சேரர்களும் தெற்கே பாண்டியர்களும், வடகிழக்கே சோழர்களும் ஆட்சி செய்தனர். சேரர்கள் வில் கொடியையும், பனம் பூ மாலையையும் தங்களுக்குரிய சிறப்புச் சின்னங்களாகப் பெற்றிருந்தனர். சேரர்களின் தலைநகரம் வஞ்சி ஆகும். தொண்டியும், முசிறியும் இவர் தம் துறைமுகங்களாக விளங்கின. சேரர்கள் இன்றைய கேரளம், சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களை ஆட்சி செய்தனர். சோழர்கள் புலிக் கொடியையும் அத்திப் பூ மாலையையும் தங்களுக்குரிய சிறப்புச் சின்னங்களாகப் பெற்றிருந்தனர். இவர்களுடைய தலைநகரம் உறையூர் ஆகும். காவிரிப்பூம்பட்டினம் இவர்களின் துறைமுகமாக விளங்கியது. சோழர்களின் பேரரசு சித்தூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர் ஆகிய நிலப்பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. பாண்டிய அரசர்கள் மீன் கொடியையும், வேப்பம் பூ மாலையையும் சிறப்பு அடையாளங்களாகப் பெற்றிருந்தனர். மதுரை இவர்களின் தலைநகரமாகும். கொற்கை இவர்களது துறைமுகமாக விளங்கியது. பாண்டியர்கள் இன்றைய மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை திருநெல்வேலி ஆகிய பகுதிகளை ஆட்சி செய்தனர்.

மாணவர் : ஹரிணி அனந்தராமன் | ஆசிரியர் : தேவகி செல்வன்

---

தலைப்பு : பிரகதீசுவரர் கோயில் (தமிழினத்தின் பெருமை) | நிலை : 3அ

தஞ்சாவூரில் இருக்கும் பிரகதீசுவரர் கோயில் உலகத்தில் உள்ள ஏழாவது மிக பெரிய கோயில் ஆகும். இது கிட்டதட்ட 1000 ஆண்டுகளுக்கு முந்தைய கோயில். இது ஒரு சிவன் கோயிலாகும். இக்கோயில் தமிழர் கட்டிடக்கலைக்கு சான்றாகும். கிபி 10 ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்ற தமிழ் மாமன்னர் முதலாம் இராசராச சோழன் கட்டுவித்தார். 1003-1004 ஆம் ஆண்டு தொடங்கி 1010 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டஇந்த கோயிலுக்கு 2010 ஆவது ஆண்டு 1000 ஆண்டு நிறைவடைந்தது. 1987 ஆம் ஆண்டு UNESCO உலக பாரம்பரிய சின்னமாக இக்கோயிலை அறிவித்தது. இக்கோயிலின் சிவ லிங்கத்தின் உயரம் 12 அடி - உயிர் எழுத்துக்கள், சிவலிங்கத்தின் பீடம் 18 அடி - மெய் எழுத்துக்கள். கோபுரத்தின் உயரம் - 216 அடி - உயிர்மெய்எழுத்துக்கள் சிவலிங்கத்திற்கும் நந்திக்கும் உள்ள இடைவெளி 247 - தமிழ் மொழியின் மொத்த எழுத்துக்கள் ஆகும். இக்கோயில் நம் ஒவ்வொரு தமிழனின் பெருமை ஆகும்.

மாணவர் : கவின் மீனாட்சி சுந்தரம் | ஆசிரியர் : தேவகி செல்வன்




| தலைப்பு : சுபாஷ் சந்திர போஸ் | நிலை : 3அ |
|---|---|

நேதாஜி என்ற சுபாஷ் சந்திர போஸ் ஜனவரி 23, 1897 இல் பிறந்தார். இந்தியாவில் ஒரிசா (இன்றைய ஒடிசா) மாநிலத்தில், கட்டாக் எனும் இடத்தில் வாழ்ந்தார். இவர் 1945 ஆகஸ்ட் 18 அன்று தைவான் நாட்டில் ஒரு விமான விபத்தில் இறந்தார். நேதாஜி இந்திய போராட்டத் தலைவரானவார். அவர் தீவிரமாக சுதந்திரத்திற்-கான தனது போர்க்குணமிக்க அணுகுமுறை மற்றும் பொது நலக்கோட்பாடு கொள்கைகளுக்கான உந்துதலுக்காக அறியப்பட்டார். இரண்டாம் உலகப் போரில் கைதிகளாய் இருந்த நூற்றுக்கணக்கான இந்தியர்களை ஒன்றுதிரட்டி இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்கினார். அவர் அப்போது ஆங்கிலேயரை எதிர்த்து போர் நடத்தினார். அதற்கு முன், காந்தி தலைமையில், போஸ் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார். கொள்கை வேறுபாடுகள் காரணமாக அவர் ஃபார்வர்ட் பிளாக் கட்சி அமைத்தார். அவர் நடவடிக்கைகளுக்கு காரணமாக டிசம்பர் 1921 இல் சிறைவாசத்திற்கு வழிவகுத்தன. பிறகு கல்கத்தா மாநகராட்சியின் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இரகசிய புரட்சிகர இயக்கங்களுடன் தொடர்பு சந்தேகிக்கப்பட்டதால் அவர் பர்மாவுக்கு (மியான்மர்) நாடு கடத்தப்பட்டார். அவர் தனது இல்லத்திலிருந்து தப்பி ஜெர்மனி மற்றும் பிறகு ஜப்பானுக்குச் சென்றார். இந்தியாவில் தேசிய தொந்தரவுகளை கேள்விப்பட்டபின், அவர் தேசிய ராணுவத்தை உருவாக்கி நம் நாட்டில் சுதந்திரத்திற்காக கடுமையாகப் போராடினார்.




| மாணவர் : ஷேஹா கபீர் | ஆசிரியர் : தேவகி செல்வன் |
|---|---|

| தலைப்பு : ஏ.பி.ஜே. அப்துல் கலாம் | நிலை : 3அ |
|---|---|

ஏ.பி.ஜே. அப்துல் கலாம் 1931 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் இராமேஸ்வரத்தில் பிறந்தார். அவர் இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர். இந்தியாவின் 11 வது குடியரசு தலைவராக ஜூலை 25 ஆம் நாள் 2002ல் பதவியேற்றார். அவர் பத்ம பூஷன், பத்ம விபூஷன், பாரத ரத்னா, வீர் சவர்கார் விருது, அறிவியல் கவுரவ டாக்டர் பட்டம், ஹூவர் மெடல், சுவாரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது, முதலிய விருதுகளை பெற்றார். அவர் அக்னி சிறகுகள், இந்தியா 2020 போன்ற நூல்கள் எழுதிஉள்ளார். அவரது எளிமையான வாழ்கையும், இனிமையான பேச்சும் எல்லோரையும் கவர்ந்தது. "எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில்", என்ற அவர் "கனவு காணுங்கள்! அந்த கனவை நினைவாக்க பாடுபடுங்கள்" என்னும் வாக்கியத்தை இளைஞர்களின் மனதில் வேரூன்ற செய்தவர்.

| மாணவர் : வர்ஷா சிவகுமார் | ஆசிரியர் : தேவகி செல்வன் |
|---|---|

| தலைப்பு : தமிழ் | நிலை 3A |
|---|---|

**தமிழ் = [தம் + இழ்]**

**தம் = தன், தன்னுடைய, என், என்னுடைய**

**இழ் = வாழ்வு, வாழ்க்கை, வழி, உண்மை [தத்துவம்], அறம், உரிமை, இறையாண்மை.**

தமிழர்கள் தங்கள் மொழியை முக்கிய திராவிட மொழிகளில் தூய்மையானதாக கருதுகின்றனர். தமிழ் ஒரு பிரபலமான மொழி அல்ல, எனவே தமிழ் பேசுபவர்களுடன் நாடுகள், வர்த்தகத்திற்கு தமிழ் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது, தமிழ் குறித்த புள்ளிவிவரங்கள், தமிழ் மொழி அரசாங்கத்தை எவ்வாறு பாதக்குறடு, தமிழ் கலாச்சாரம் மற்றும் தமிழ் மொழியின் பரிணாமம் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளப் போகிறேன். தமிழ் மிகவும் தனித்துவமான மற்றும் பழைய மொழி. தமிழ் உலகம் முழுவதும் மிகவும் பிரபலமான மொழி அல்ல, ஆனால் இது இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் பிரபலமான மொழியாகும். மொரீஷியஸ் மற்றும் கனடாவிலும் தமிழ் மொழி பிரபலமாக உள்ளது. இந்த நாடுகளில் தமிழ் பேசப்படுவதைத் தவிர, ஆப்பிரிக்காவின் சில பகுதிகளிலும் இது பேசப்படுகிறது. இந்த எல்லா நாடுகளிலும் தமிழ் ஒரு உத்தியோகபூர்வ மொழி. எனவே தமிழ் மொழி மிகவும் பிரபலமாக இல்லை என்றாலும், அது இன்னும் உயிருள்ள மற்றும் இருக்கும் மொழியாகும், இது உலகின் பெரும்பாலான பகுதிகளில் மிகவும் பிரபலமாக இல்லை. இது இலங்கையின் மொத்த இறக்குமதியில் இருபது சதவிகிதத்திற்கும், மொத்த ஏற்றுமதியில் ஆறு சதவீதத்தை உறிஞ்சும் இலங்கை தயாரிப்புகளுக்கான மூன்றாவது பெரிய ஏற்றுமதி இடமாகவும் உள்ளது. இரு நாடுகளின் பொருளாதார நிலைக்கு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகம் முக்கியமானது. தமிழ் இந்தியா மற்றும் இலங்கையின் உத்தியோகபூர்வ மொழி. எனவே, நாடுகளுக்கு இடையே மொழித் தடை இல்லாததால் வர்த்தகம் சாத்தியமானது. தமிழ் மொழி பேசுபவர்களும் கடல் வர்த்தகத்தைப் பயன்படுத்தி ஐரோப்பியர்களுடன் வர்த்தகம் செய்கிறார்கள். தமிழ் பேசுபவர்களுக்கும் பிற நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் குறித்த தகவல்களைக் கண்டுபிடிப்பது கடினம். வர்த்தகம் ஒவ்வொரு நாட்டிற்கும் இன்றியமையாதது, எனவே தமிழ் பேசுபவர்களுக்கும் பிற இடங்களுக்கும் இடையிலான வர்த்தகம் பற்றிய தகவல்களைக் கண்டுபிடிப்பது கடினம் என்றாலும், வர்த்தகம் நடைபெறுகிறது என்பதை நாங்கள் அறிவோம். தமிழ் மிகவும் பிரபலமான மொழி அல்ல, அது இன்னும் பலரால் பேசப்படுகிறது. அவர்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசுவதால் அவர்கள் எளிதாக தொடர்பு கொள்ள முடியும். பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தில் தமிழ் மிகவும் பணக்காரர். தமிழ் மக்கள் திராவிட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ் மக்கள் தங்கள் கலாச்சாரத்தில் பெருமை கொள்கிறார்கள் மற்றும் அவர்களின் பழைய வரலாற்றைப் பாதுகாக்க முயற்சி செய்கிறார்கள். பல ஆண்டுகளாக, தமிழ் மொழி மாறிவிட்டது. பழங்காலத் தமிழ் கல்வெட்டுகள் கிமு 500 க்கு முந்தையவை. பழைய தமிழ் மொழி கடந்த கால மற்றும் என்ற இரண்டு காலங்களில் எழுதப்பட்டதாகத் தொடங்கியது. மத்திய தமிழ் மொழி மாறியது மற்றும் தற்போதைய பதட்டத்தைப் பயன்படுத்தத் தொடங்கியது. மத்திய தமிழ் மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கியது.



| மாணவர் : அதிதி லட்சுமிநாராயணன் | ஆசிரியர் : முருகபூபதி |
|---|---|

| தலைப்பு : அமைதி | நிலை : 3அ |
|---|---|

அமைதி என்பது நாம் அனைவரும் தேடும் ஒன்று,
அது இல்லாதபோது, நாம் பலவீனமாக உணர்கிறோம்.
அமைதி ஆழமாக வேரூன்றியிருப்பதால்,நாம் அனைவரும் அமைதியுடன்
நெருக்கமாக இருக்க விரும்புகிறோம்.
அமைதி என்பது நாம் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் ஒன்று,
அது நியாயமானது, மகிழ்ச்சியாக இருப்பது,
நாம் அதைக் கண்டுபிடிக்கும்போது, அமைதி இனிமையானது,
அது நம் வாழ்க்கையை முழுமையாக்கும்.

அமைதி என்பது நாம் அனைவரும் வாங்க முடியாத ஒன்று,
நாம் அதை வானத்திலிருந்து பிடிக்க முடியாது.
அமைதி என்பது நாம் உருவாக்க வேண்டிய ஒன்று

அமைதி இல்லாமல், அன்றாட வாழ்க்கை மிகவும் கடினமானதாகவும்,
நிலையான போராட்டமாகவும் மாறக்கூடும்.
நாம் அனைவரும் சமூகத்தில் அமைதி வளர,
முதல் படி சமூக ஒற்றுமை உருவாக்க வேண்டும்.



| மாணவர் : அமிரா கான் | ஆசிரியர்: முருக பூபதி |
|---|---|

| தலைப்பு: வீரபாண்டிய கட்டபொம்மன் | நிலை: 3அ |
|---|---|

இந்தியாவின் சுதந்திரத்திற்காக போராடிய தமிழ் நாட்டு மன்னர்களில் வீரபாண்டிய கட்டபொம்மன் மிகவும் மகத்துவம் வாய்ந்தவர். சுதந்திரத்திற்கான முதல் போராடத்துக்கு ஆறு தசாப்தங்களுக்கு முன்பே ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடினார். ஜெகவீர கட்டபொம்மனுக்கும் ஆறுமுகத்தம்மாளுக்கும் பிறந்த கட்டபொம்மன், திருநெல்வேலியின் அருகில் உள்ள பாஞ்சாலங்குறிச்சியின் நாற்பத்தி ஏழாம் பாளையக்காரராக அரியணை பொறுப்பை ஏற்றார். இதே சமயத்தில் ஆங்கிலேயர்கள் பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியை தொடங்கினார்கள். இக்கம்பெனி திருநெல்வேலியிலும் உருவாகி ஆங்கிலேயர்களின் நேரடி ஆட்சி துவங்கியது. இக்காரணத்தால் திருநெல்வேலியை சுற்றியுள்ள அனைத்துப் பாளையக்காரர்களின் மேல் அதிக வரி விதிக்கப்பட்டது. மக்களுக்கு துன்பம் விளைவிக்கின்ற இந்த புதிய விதிகள் கட்டபொம்மனுக்கு கோபம் அளித்தது. சுதந்திர உணர்வை தூண்டியது. ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்துவதிலோ, அவர்களின் எந்த முயற்சியிலும் உதவுவதிலோ அவருக்கு ஈடுபாடு இல்லை. அக்கணத்திலிருந்து கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் போராட்டம் துவங்கியது. கட்டபொம்மன் வரியை செலுத்த மறுத்ததால் ஆங்கிலேயர்கள் கட்டபொம்மனின் கோட்டையை தாக்கினார்கள். கட்டபொம்மன் இந்த தாக்குதலுக்கு தயாராக இல்லாது இருந்தாலும் கடுமையான போரை மிகுந்த தைரியத்தொடு எதிர் கோண்டார். ஆனால், ஆங்கிலேயர்கள் வீழ்ச்சி அடைவதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. ஆகையால் கட்டபொம்மன் புதுக்கோட்டையின் மன்னரிடம் தஞ்சம் அடைந்தார். ஆனால் ஆங்கிலேயர்களுக்கு பயந்து கட்டபொம்மன் இருக்கும் இடத்தை அவர் கூறி விட்டார். ஆங்கிலேயர்கள் கட்டபொம்மனை கைதி செய்து அவருக்கு மரண தண்டனை வழங்கினார்கள். ஆனால் தூக்கிலிடப்பட்ட கட்டபொம்மன் இந்தியாவின் சுதந்திர போராட்டத்தில் பெரும் தியாகியாக இடம் பிடித்தார். இன்றும் அவரின் தைரியம், தியாகம், மற்றும் வீரம் யாராலும் மறக்க முடியாது. ஆகவே, அவரின் நினைவை போற்றும் வகையில் இந்திய அரசாங்கம் பல நினைவுச்சின்னங்களை எழுப்பி வருகிறது. நாமும் இம்மாபெரும் வீரனை நன்றியுடன் நினைவில் நிறுத்துவோம்!

| மாணவர்: திரந்தரா | ஆசிரியர்: முருகபூபதி |
|---|---|

| தலைப்பு : விவசாயிகள் | நிலை : 3அ |
|---|---|

விளைநிலங்களில் உழுது, விதை விதைத்து, நீர் பாய்ச்சி, உரமிட்டு, அல்லும் பகலும் அயராது உழைத்து பயிரை காத்து நமக்கு உணவு அளிப்பவரே விவசாயிகள். அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் நமக்கு உணவு அளிப்பதற்காக பாடுபடுகிறார்கள்.

விவசாயிகளுக்கு உணவு உற்பதி செய்ய நல்ல விளைநிலம், அதல் நல்ல நீர் பாய்ச்சல் இருக்கு வேண்டும். அந்த நிலத்தில் உழுது பயிர் செய்ய பல இயந்திரங்களும் தேவைப்படும். பின் அந்த நிலத்தில் விதைக்க விதைகள், பூச்சிகள் பயிரை தாக்காமல் இருக்க, பூச்சிக்கொல்லி மருந்துகள் இவைகளும் தேவை. இன்றைய காலங்களில் விவசாயிகள் இரசாயண உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் தவிர்த்து இயற்கை உரங்களையும் பூச்சிக் கொல்லிகளையும் பயன்படுத்துகிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது.

வாழ்க விவசாயி
வளர்க வையகம்!



| மாணவர் : சித்தார்த் சரவணன் | ஆசிரியர் : திரு. முருகபூபதி |
|---|---|





யாமினி ராஜாஜி (ஆ), சஹானா அம்பலவாணன், சவிதா சாமிநாதன், நிக்கித்தா பிரபாகரன்,
சங்கவி சாமிநாதன், நிஷா கஸ்தூரி, சுகிதா விஜயகுமார், ஜெயலட்சுமி ரவிகுமார் (ஆ)


அறிவுடைநம்பி துரைசாமி (ஆ), ரோஹன் சுரேஷ், நியந்த்ரி தியாகராஜன், ரேவந்த் ரெங்கசாமி கார்த்திகேயன்,
ஆகேஷ் யோகநாதன், ஸ்ரேயஸ் வல்லபன், க்ரித்திக்ராஜ் கிருஷ்ணராஜ்,
நந்திகா இளங்கோவன், அக்ஷிதி நாராயணன்

தாரகேஸ்வரன் சுரேஷ், பவித்ரன் பசுபதி, அரவிந்த் சுனில்குமார், வினய் நாகராஜன், நிதின் ஜெகதீசன்,
ஸ்ரீதீக்ஷித சுரேஷ் குமார், தான்யா விஜயகுமார், ஓவியா அறிவுடைநம்பி, யாழினி இளங்கோவன்

தலைப்பு : பாரதியார் கவிதை

நிலை : 3ஆ

மனதிலுறுதி வேண்டும்,
வாக்கினிலே இனிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமும் இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்.
கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்;
பெண் விடுதலை வேண்டும்,
பெரிய கடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்கு தென்பட வேண்டும்;
உண்மை நின்றிட வேண்டும்.
ஓம் ஓம் ஓம் ஓம்




மாணவர் : அக்ஷதி நாராயணன் | ஆசிரியர் : திரு. நம்பி

---

தலைப்பு : எனது இந்திய பயணம்

நிலை : 3ஆ



எனது கோடை விடுமுறையில் இந்தியா சென்றேன். திருச்சி, பொடி, திருவனந்தபுரம், மூணார், கன்னியாகுமாரி, திருச்செந்தூர் சென்றது சந்தோசமாக இருந்தது. எனது உறவினர்கள் அனைவரையும் அங்கு சந்தித்தேன். சிற்றுண்டி சாலையில் கூம்பு வடிவ தோசை சாப்பிட்டேன். நான் பல உணவுகள் சிற்றுண்டி மற்றும் டீ டாய் சாப்பிட்டேன். இந்தியாவில் உள்ள பெரிய துணிக் கடைகள் எனக்கு பிடித்திருந்தது.

மாணவர் : அரவிந் சுனில்குமார் | ஆசிரியர் : நம்பி துரைசாமி

---

தலைப்பு : ஏன் கோவிலுக்கு போகிறோம்

நிலை : 3B




ஏன் கோவிலுக்கு போறோம்?

நாம் கோவிலுக்கு சாமி கும்பிட போகிறோம். இன்னொரு காரணம் நம்மளும், நம் குடும்பத்தினரும் வாழ்கை நன்றாக இருக்கும் மற்றும் எல்லா தடைகளும் அகன்றுவிடும். பெரியவர்களோடு பழகி நல்லவற்றை கற்றுக் கொள்ளலாம்.

மாணவர் : பழநியப்பன் அருணாச்சலம் | ஆசிரியர் : அறிவுடைநம்பி

---

தலைப்பு : வீரமங்கை வேலுநாச்சியார்

நிலை : 3ஆ

ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் முதல் பெண் வீராங்கனை.



கி. பி. 1730-1796

பெற்றோர்: செல்ல முத்து விஜயரகுநாத சேதுபதி. சக்கந்தி முத்தாத்தாள்

பதினேழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் சிவகங்கைப் பகுதியை ஆண்ட ராணி வேலுநாச்சியார். கி.பி.1730 ஆம் ஆண்டு, ஒரே பெண் மகளாகப் பிறந்தாலும் ஆண் வாரிசு போல வளர்க்கப்பட்டவர். தற்காப்புக் கலைகள், வில்வித்தை, வாள் வீச்சு, குதிரை சவாரி மற்றும் பலவகையான ஆயுதங்களை கையாளவும் பயிற்சி பெற்றவர். பல மொழிகளை கற்றுத் தேர்ந்தவர். தனது கணவர் முத்து வடுகநாதத் தேவரை நயவஞ்சகமாகக் கொன்று நாட்டைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பல ஆண்டுகளாக அவர் தொடர்ந்து போராடி, அவர்களை தோற்கடித்து, தன் நாட்டைக் கைப்பற்றி வெற்றிகரமாக ஆட்சி புரிந்தார். இந்த வீரமங்கையின் துணிவையும், திறமையையும் பெருமைப்படுத்தும் விதமாக இந்திய அரசு 'ராணி வேலுநாச்சியார்' நினைவு தபால்தலையை கி.பி. 2008 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

மாணவர் : ஆனந்தி செல்வராஜ் | ஆசிரியர் : ஜெயலட்சுமி

ஜிவிரா
3 B
ஜெயலட்சுமி

# எங்கள் ஊரு திருத்தேரு!!

எங்கள் ஊரில் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் தேர்த்திருவிழா மிக சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

ஊர் மக்கள் அனைவரின் முழு ஒத்துழைப்புடன் தொடர்ந்து பத்து நாட்களுக்கு மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது.




தலைப்பு : ஜல்லிக்கட்டு | நிலை : 3B

ஏறு தழுவல் மஞ்சு விரட்டு அல்லது ஜல்லிக்கட்டு (சல்லிக்கட்டு) என்பது தமிழர்களின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றாகும். ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும். மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அடக்குவது, அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதுதான் விளையாட்டு. இந்த ஜல்லிக்கட்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

வேலி ஜல்லிக்கட்டு – ஒரு திடலில் காளைகளை அவிழ்த்து விடப்படுகின்றன. கட்டுப்பாடு இல்லாமல் ஓடும் காளைகளை இளைஞர்கள் விரட்டி பிடிப்பார்கள்

வாடிவாசல் ஜல்லிக்கட்டு – ஒரு திறப்பின் வழியாக வெளியேறும் காளைகளை இளைஞர்கள் விரட்டிச் சென்று அதன் திமில் மீது தொங்கியபடி சிறிது தூரம் செல்வார்கள்.

வடம் ஜல்லிக்கட்டு – 20 அடி நீளக்கயிற்றால் காளையைக் கட்டி இருபுறம் காளையை ஆண்கள் இழுத்துப் பிடிக்க ஒருவர் மட்டும் அதன் முன்னே நின்று கொம்பில் உள்ள பரிசை எடுக்க முயல்வர்.



மாணவர் : ரோஹான் சுரேஷ் | ஆசிரியர் : ஜெயலஷ்மி ரவிகிரன்

# தைப்பொங்கல்

பெயர்: யாழினி இளங்கோவன்
ஆசிரியர்: ஜெயலட்சுமி
வகுப்பு: 3ஆ

பொங்கல் பண்டிகையானது, அறுவடைத் திருநாளாக தைமாதம் முதல்நாளில் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது, ஆடி மாதத்தில் விதைத்த பயிர்களின் விளைச்சலை மார்கழி மாதத்தில் அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தைமாதம் ஆகும், இந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியை வெல்லம், பால், நெய் சேர்த்துப் புதுப்பானையில் இட்டு, புத்தடுப்பில் கொதிக்க வைத்து, பொங்கல் சோறாக்கிச் சூரியனுக்கும் (இயற்கைக்கும்), உழவிற்கு பயன்பட்ட மாடுகளுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் பண்டிகையாகும்.



தலைப்பு : மகாகவி பாரதியார் | நிலை : 3ஆ




வாழிய செந்தமிழ்

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திருநாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம்வளர்ந் திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்திரை நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

பெயர்: சுப்பையா (எ) சுப்பிரமணியன்
பிறப்பு: டிசம்பர் 11, 1882
பிறந்த இடம்: எட்டயபுரம், தமிழ்நாடு
மற்ற பெயர்கள்: முண்டாசுக் கவிஞன், சக்தி தாசன், பாரதியார், மகாகவி
பணி: கவிஞர், எழுத்தாளர், விடுதலை போராட்ட வீரர், பத்திரிக்கையாசிரியர்
பெற்றோர்: சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள்.
முக்கிய படைப்புகள்: கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் மற்றும் பல.

மாணவர் : புவனேஷ் செந்தில் | ஆசிரியர் : கலைச்செல்வி




தலைப்பு : உடற்பயிற்சி தரும் பயன்கள் | நிலை : 3அ



நாம் தினமும் இருபத்தி ஐந்து நிமிடம் உடற்பயிற்சி செய்தால் நம் வாழ்நாள் கூடிக் கொண்டு வரும் என்றும். உடற்பயிற்சி நம் உடல் கவலை மற்றும் நம் வெளித்தோற்றத்தை அதிகரிக்கிறது. உடற்பயிற்சி நாள்பட்ட புற்று நோய் மற்றும் இருதைய நோய்களை குறைக்க உதவிகிறது. உடற்பயிற்சி செய்வது தசையை உயர்த்தி கொழுப்பு குறைக்கிறது. நீ உடற்பயிற்சி செய்தால், உன்னுடைய நோய் எதிர்ப்பு அமைப்பு சிறப்பாக வேலை செய்ய உதவுகிறது.

மாணவர் : ஜீவா கலைவாணி | ஆசிரியர் : கலைச்செல்வி




தலைப்பு : தமிழ் குறுக்கெழுத்து | நிலை : 3B

கண்டு பிடிக்க முடியுமா ?

மேலிருந்து கீழ் :
1. wreath
2. celebration
3. sun
4. festival
5. 1,330
6. need
7. schools
8. moon
9. decoration
10. affection
11. affection

இடமிருந்து வலம் :
9. care
12. Plants
13. hall
14. son
15. welcome
16. mind
17. ball
18. must
19. coconut tree
20. circle

மாணவர் : சஹானா அ. | ஆசிரியர் : கலைச்செல்வி




தலைப்பு : தமிழ் எண்கள் | நிலை : 3B

| | | |
|---|---|---|
| 1 | க | ஒன்று |
| 2 | உ | இரண்டு |
| 3 | ங | மூன்று |
| 4 | ச | நான்கு |
| 5 | ரு | ஐந்து |
| 6 | சா | ஆறு |
| 7 | எ | ஏழு |
| 8 | அ | எட்டு |
| 9 | கூ | ஒன்பது |
| 10 | ௦ | பூஜ்யம் |

மனப்பாடம் செய்யும் முறை :

கடுகு உளுந்து நனைத்து
சமைத்து ருசித்து சாப்பிட்டேன்
என அவன் கூறினான்
௦(சு) என்றேன்

மாணவர் : சுகிதா விஜயகுமார் | ஆசிரியர் : கலைச்செல்வி




தலைப்பு : பாண்டியாட்டம் | நிலை : 3அ

தொழில்நுட்பம் நம்மை வசப்படுத்தும் முன்பு கோடைக்காலத்தில் நாம் விளையாடிய விளையாட்டுகள் இன்று கனவாகி போகிவிட்டது. தெருக்களில் சிறுவர் சிறுமிகள் விளையாடிய காலம் மாறி இன்று தெருக்களும் வெறுச்சோடி கிடக்கிறது. நாம் மறந்த தமிழ் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று தான் பாண்டியாட்டம். சிறுமிகள் தெருக்களில் விளையாடும் விளையாட்டு இது. ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும் எட்டு தொடர் பெட்டியை தரையில் வரைந்து கொள்ள வேண்டும். போட்டியாளர்கள் முதல் பெட்டியில் கல்லை போட்டு அந்த பெட்டியையும் கோடுகளையும் தொடாமல் நொண்டி அடித்து கடைசி பெட்டி வரை சென்று திரும்ப வர வேண்டும். பெரும்பாலும் அனைத்து சிறுமிகளும் விளையாடும் மிக பிரபலமான விளையாட்டு இது. ஆனால் தற்போதைய சூழலில் குழந்தைகளை வெளியில் விளையாட அனுப்புவதே ஆபத்தாக அமைகிறது.

மாணவர் : தான்யா விஜயகுமார் | ஆசிரியர் : கலைச்செல்வி சேகுமார்

தலைப்பு : சங்க இசைக் கருவி - மிருதங்கம் | நிலை : 3ஆ

மிருதங்கம் தென்னிந்தியாவில் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய ஒரு பாரம்பரிய இசைக்கருவி. பழமையான இந்திய தாள வாத்தியத்தின் இரு முனைகளிலும் கைகள் மற்றும் விரல்களால் வாசிக்கப் படுகின்றன.



பீப்பாய் போல வடிவமைக்கப்பட்டுள்ள இதன் வலது தலை இடது புறத்தை விட சற்று சிறியது. இன்று, இந்த கருவி பலாப்பழ மரத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. மிருதங்கத்தில், திறப்புகள் ஆடு தோலால் மூடப்பட்டிருக்கும் மற்றும் மரத்தினால் பட்டைகள் கொண்டு மூடப்படுகின்றன. மிருதங்கத்தை பெரும்பாலும் இசையின் கர்நாடக கிளையில் பயன்படுத்தப்படுகிறது.

மாணவர் : வினய் நாகராஜன் | ஆசிரியர் : கலைச்செல்வி ரா ஆர்

---

தலைப்பு : கொன்றை வேந்தன் | நிலை : 38

## கொன்றை வேந்தன்

கடவுள் வணக்கம்

ஔவையார் இயற்றியது

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயந் தொழுவது சாலவும் நன்று
இல்லற மல்லது நல்லற மன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்துங் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினுஞ் செய்வன செய்
ஒருவனைப் பற்றி ஒரகத் திரு
ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு
அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு

மாணவர் : நிக்கித்தா பிரபாகரன் | ஆசிரியர் : திரு. ராதா கிருஷ்ணன்

---

தலைப்பு : அசோகச் சக்கரம் | நிலை : 3ஆ



அசோகச் சக்கரம் அசோகரின் பல சிற்பங்களில் காணப்படும் ஆர் 24 கோல்களைக் கொண்ட சக்கர வடிவ சின்னமாகும். இது பௌத்தர்களின் எட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அசோகர் பயன்படுத்தியமையால் இது அசோகச் சக்கரம் என்று அழைக்கப்படுகிறது. புகழ்பெற்ற சாரநாத்தில் உள்ள சிங்க தலைகள் பதித்த அசோகத்தூணில் உள்ள இந்தச் சக்கரம் இந்திய தேசியக் கொடியில் மையப்பகுதியில் கடற்படை நீலத்தில் இடம் பெற்றுள்ளது. அசோகத்தூணில் உள்ள சிங்கத்தலைகள் இந்தியக் குடியரசின் இலச்சினையாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மாணவர் : நியந்த்ரி தியாகராஜன் | ஆசிரியர் : ராதாகிருஷ்ணன் அழகப்பன்

---

தலைப்பு : திருவள்ளுவர் | நிலை : 3b



திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர். எக்காலத்துக்கும் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறியுள்ளார். வான்புகழ் வள்ளுவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர் முதலிய பல சிறப்புப் பெயர்கள் இவருக்கு உண்டு.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறள்பாக்களைக் கொண்டுள்ளது. "திருக்குறளில் இல்லாததும் இல்லை, சொல்லாததும் இல்லை" என்னும் வகையில் சிறந்து விளங்குகிறது. திருக்குறளுக்கு உலகப் பொதுமறை, வாயுறை வாழ்த்து முதலிய பல சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மாணவர் : பவித்ரன் பசுபதி | ஆசிரியர் : ராதா கிருஷ்ணன்

தலைப்பு : காவடி வழிபாடு | நிலை : 3ஆ

## காவடி வழிபாடு

முருகன்! தமிழர்கள் போற்றி வணங்கும் தமிழ்க்கடவுள் பழந்தமிழ் இலக்கியங்களில் தோளில் தாங்கிச்செல்லும் சுமையைக் குறிக்க 'கா' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது 'காவுதல்' என்று பொருள்.



மாணவர் : ஸ்ரீதீக்ஷிதா | ஆசிரியர் : ராதாகிருஷ்ணன் அழகப்பன்

---

தலைப்பு : தமிழின் சிறப்பு | நிலை : 3ஆ

தமிழ் கலாச்சாரம் என்பது தமிழ் மக்களின் கலாச்சாரம். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மற்றும் உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் கலை மற்றும் வாழ்க்கை முறைகளில் தமிழ் கலாச்சாரம் வேரூன்றியுள்ளது. மொழி, இலக்கியம், இசை, நடனம், நாடகம், நாட்டுப்புற கலைகள், தற்காப்பு கலைகள், ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு வகைகள், உடைகள், கொண்டாட்டங்கள், தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள், அமைப்புகள், அறிவியல், மற்றும் தொழில்நுட்பம். அகத்தியார், தமிழ் இலக்கியத்தின் முதல் சங்க காலக் கவிஞர். தமிழர்கள் தமிழ் மொழியுடன் வலுவான இணைப்பைக் கொண்டுள்ளனர் (இது தடையற்ற சார்பு என்றும் குறிப்பிடப்படலாம்), இது பெரும்பாலும் இலக்கியத்தில் "தமிழன்னையாய்", "தமிழ் தாய்" என்று வணங்கப்படுகிறது. இது வரலாற்று ரீதியாக இருந்து வருகிறது, இன்னும் பெரிய அளவில் தமிழ் அடையாளத்தின் மையமாக உள்ளது. தென்னிந்தியாவின் பிற மொழிகளைப் போலவே, இது ஒரு திராவிட மொழியாகும், இது வட இந்தியாவின் இந்தோ-ஆரிய-ஐரோப்பிய மொழிகளுடன் தொடர்பில்லாதது.

மாணவர் : தாரகேஸ்வரன் சுரேஷ் | ஆசிரியர் : ராதாகிருஷ்ணன்

---

தலைப்பு : தமிழ் தாய் வாழ்த்து | நிலை : 3B



நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

-மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை

மாணவர் : ஆகேஷ் யோகநாதன் | ஆசிரியர் : யாமினி ராஜ்

---

தலைப்பு : என்னைக் கவர்ந்த தலைவர் | நிலை : 3ஆ



| | | |
|---|---|---|
| பிறப்பு | : | அக்டோபர் 15 இராமேஸ்வரம் |
| சமயம் | : | இஸ்லாம் |
| துறை | : | வான்வெளிப் பொறியியல் |
| தொழில் | : | வான்வெளிப் பொறியாளர் |
| | | பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு |
| | | இந்திய விண்வெளி ஆய்வு மையம் |
| எழுதிய நூல்கள் | : | 1. அக்னிச் சிறகுகள் 2. இந்தியா 2020 |
| | | 3. பற்ற வைக்கப்பட்ட மனங்கள் |
| | | 4. ஊக்கப்படுத்தும் யோசனைகள் ...... |
| விருதுகள் | : | 1. பத்ம பூஷன் (1981) 2. பத்மவிபூஷண் (1990) |
| | | 3. பாரத் ரத்னா (1997) 4. வீர் வர் பதக்கம்(மனை) |
| பதவி | : | 11வது இந்திய குடியரசுத்தலைவர் |
| இறப்பு | : | 27 ஜூலை 2015, சில்லாங், இந்தியா. |

மாணவர் : ஸ்ரேயஸ் வல்லபன் | ஆசிரியர் : திருமதி. யாமினி ராஜ்



ஸ்ரீராம் குமார், ஹேமந்த் சுதாகரன், இனியன் சுப்ரமணியன், சந்தீப் செந்தில்குமார்,
ஷ்ரீயா புகழேந்தி, சியாமளா கிருஷ்ணன் (ஆ)
ரூபாக் ராஜசேகர், அனித் சஜீவன், கிரிடி நந்தகுமார், திவாகர் பிரபு மகேஷ்,
நிர்மல் சந்திரன், சரண் சரவணன் (ஆ)
சந்தோஷினி ராதாகிருஷ்ணன், வினிதா ஹரிணி ரவிவர்மா, மஹதி சுந்தரராஜன், ஷ்ரவன் சுப்பிரமணியன்,
ரித்தின் வேல்மணி, அருண் இளஞ்செயன், மகேஷ்வர் முருகேசன்
சாருலதா குருபரன் (ஆ), சுசித்ரா தானுமலையான், ஷ்ருதி சுரேஷ், சோனிகா சங்கர்,
ஸ்ருதிகா ரவிசங்கர், அன்ஜூம் ஷபியுல்லாஹ் ஹரான், சசி ஹரிதாஸ் (ஆ)

தலைப்பு : ராஜராஜ சோழன் | நிலை : 4அ

ராஜராஜ சோழன் சோழ நாட்டின் மிக சிறந்த மன்னர். அவர் கிபி 985-1014 காலத்தில் ஆண்டார். ராஜராஜ சோழன் தமிழ்நாட்டில் இருந்து ஆண்டாலும், அவருடைய ஆட்சி வட இந்தியா, இலங்கை, மால தீவு மற்றும் கிழக்கு ஆசியா வரை பரவி இருந்தது. அவர் சோழ நாட்டை பெரிய சக்தி வாய்ந்த வல்லரசாக மாற்றினார்.

ராஜராஜ சோழனின் மற்ற பெரிய சாதனை தஞ்சை பெரிய கோயில் கட்டியது ஆகும். பிரகதீஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படும் அக்கோயில் கிபி 1010 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட சிவன் வழிப்பாடு கோயில் ஆகும். இந்த கோயிலின் கோபுரம் உலகிலே மிக உயரமானது. கிபி 2010 ஆம் ஆண்டில் இந்த கோயில் கட்டி 1000 ஆண்டுகள் ஆகின. தஞ்சை பெரிய கோயில் தமிழ்நாட்டின் மிக முக்கிய சுற்றுலா தளமாகும். இது யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமாகவும் உள்ளது.




தஞ்சை பெரிய கோயில்

மாணவர் : அனீத் சஜீவன் | ஆசிரியர் : திரு. சரண் சரவணன்

தலைப்பு : மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் | நிலை : 4அ

தமிழ்நாட்டில் முதன் முதலில் அமைக்கப்பட்ட கட்டுமானக் கோயில் மாமல்லபுரம் கடற்கரை கோயில் ஆகும். இது இராஜசிம்ம பல்லவனால் கட்டப்பட்டது. மாமல்லபுரத்தில் வங்காள விரிகுடா கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளதால் இது மாமல்லபுரம் கடற்கரை கோயில் என்று அழைக்கப்படுகிறது. இது கி.பி. எட்டாம் நூற்றாண்டு, 700-728 முதல் கருங்கற்களைக் கொண்டு கட்டுமானம் செய்யப்பட்ட கோயிலாகும். இக்கோயிலின் உருவாக்கத்தின் போது இந்த இடமானது ஒரு செயல்பட்டுக் கொண்டிருந்த துறைமுகமாக இருந்தது. அப்போது இந்த இடத்தை பல்லவ அரசமரபின இரண்டாம் நரசிம்மவர்மன் ஆண்டு கொண்டிருந்தார்.



மாணவர் : திவாகர் பிரபு | ஆசிரியர் : சரண் சரவணன்

தலைப்பு : திருவள்ளுவர் | நிலை : 4அ



தலை சிறந்த தமிழ் அறிஞர்களில் திருவள்ளுவர் முதன்மையானவர். இவர் தமிழ்நாட்டில் உள்ள மைலாப்பூரில் கி.மு 300ல் பிறந்தார் என்று கருதப்படுகிறது.

இவர் உலக பொதுமறையான திருக்குறளை எழுதியுள்ளார். அது 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டுள்ளது.





இவரை பெருமைப்படுத்த இந்திய அரசு அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது. இவருக்கு மைலாப்பூரில் ஒரு கோயில் உள்ளது.

இவர் நினைவாக சென்னை நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டம் என்ற ஓர் அருமையான கலைக்கூடம் கட்டப்பட்டுள்ளது.





இந்தியாவின் தென்கோடி குமரிமுனையில் 133 அடி உயரத்தில் இவருக்கு ஒரு பிரமாண்டமான சிலை அமைக்கப்பட்டுள்ளது.

லண்டனின் ரஸ்ஸல் சதுக்கத்தில், ஓரியண்டல் பள்ளி மற்றும் ஆப்பிரிக்க ஆய்வகத்தின் வெளியே திருவள்ளுவருக்கு சிலை அமைக்கப்பட்டுள்ளது.



மாணவர் : கிரிடி நந்தகுமார் | ஆசிரியர் : திரு. சரன் சரவணன்

## பொய்க்கால் குதிரை

4A

பொய்க்கால் குதிரை ஒரு பழமையான, பாரம்பரியமிக்க கிராமிய கலை ஆகும். அதில் ஆண் பெண் இருவரும் பங்கு ஏற்பார்கள். இது தஞ்சை மாவட்டத்தில் மிக பிரபலமான ஒரு நடனம். பொய்க்கால் குதிரையை அட்டை, சணல் போன்ற பொருட்களை பயன் படுத்தி செய்வார்கள். அதன் நடுவில் உள்ள ஓட்டை வழியாக உள்ளே சென்று கட்டை காலை அணிந்து உற்சாகத்துடன் நடனம் செய்து அனைவரையும் மகிழ்விப்பர்.

கோயில் திருவிழாவின்போது அனைவரும் கண்டு மகிழ பொய்க்கால் குதிரை நடனக் கலைஞர்களை அழைத்து ஆட வைப்பார்கள். இது காவல் தெய்வமான ஐய்யனாரை வழிபடுவதாக தொன்று தொட்டு வழக்கத்தில் உள்ளது. கலைஞர்கள் ராஜா ராணி வேடம் போட்டு ஆரவாரத்துடன் நடனம் புரிந்து அனைவரையும் மகிழ்விப்பர். இவர்கள் கூட சேர்ந்து தவில், நாதஸ்வரம், பம்பை, தாளம் போன்ற கருவிகளையும் வாசிப்பார்கள்.

தற்போது, இந்தியாவின் தலைநகரத்தில் குடியரசு தின நிகழ்ச்சியில் பொய்க்கால் குதிரை நடனம் கலைஞர்கள் தமிழ்நாட்டிலிருந்து செல்வார்கள். இந்த பாரம்பரிய கலை வடிவத்தை செய்ய திறமையும் பயிற்சியும் தேவை.




மஹதி சுந்தராஜன்

சரண் சரவணன்

தலைப்பு : கல்லணை கட்டிய கரிகாலன் | நிலை : 4A

உலகிலேயே பழமையான அணையை கட்டிய கரிகாலன் சோழனின் வரலாற்றை இங்கு பார்ப்போம். கரிகாலனை பற்றி சங்ககால நூல்கள் பட்டினப்பாலை, பொருநராற்றுப் படை, கலிங்கத்துப் பரணி, பழமொழி நானூறு ஆகியவை சில குறிப்புகள் தருகின்றன. ஆனால் அவரைப் பற்றி முழு விவரம் இன்னும் கிடைக்கவில்லை. கரிகால சோழன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டை சேர்ந்தவர். அவருக்கு ஐந்து வயது இருக்கும்போது அவர் தந்தையான சோழ மன்னன் இளஞ்சேட்சென்னி இறந்துவிட்டார். நாட்டில் குழப்பம் நிலவியது அப்போது அண்டை நாட்டு அரசர்கள் அவனை சிறையில் அடைத்து ஆட்சியை எடுத்துக் கொண்டனர். சிறைக்கு தீ வைத்தனர். தப்பி ஓடும்போது காலில் தீ கருகிவிட்டது. அதனால் அவருக்கு கரிகாலன் என்று பெயர் வந்தது. சிலகாலம் கழித்து பிடர்த்தலை என்னும் பட்டத்து யானை அவனை அடையாளம் கண்டு அரச மாலை சூடியது. அதன் பின் வெண்ணி என்ற இடத்தில் பல நாட்டு மன்னர்களை வீழ்த்தி மூவேந்தர்களுக்கு தலைவன் ஆனான். பின்பு இமயம் வரை சென்று பல நாடுகளை வென்றான். கரிகாலனை இன்றும் நம் மனதில் இருக்கச் செய்வது அவர் கட்டிய கல்லணை. காவிரியின் தண்ணீரை பாசனத்திற்கும், வெள்ளத் தண்ணீரை வழி நடத்துவதற்கும் இந்த அணை கட்டப்பட்டது. திருச்சிக்கு அருகில் உள்ள இந்த அணை இன்றும் பயன்படும் நிலையில் இருப்பதை உலகமே பார்த்து வியக்கிறது. இத்தகைய பேரரசரை நெஞ்சில் நினைத்துப் பெருமை கொள்வோம்.





மாணவர் : நிர்மல் சந்திரன் | ஆசிரியர் : சரன் சரவணன்

---

தலைப்பு : தஞ்சை பெரிய கோவில் | நிலை : 4A

தஞ்சை பெரிய கோவில் என்று அழைக்கப்படும் தஞ்சாவூர் ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயம் சோழ பேரரசன் இராஜராஜ சோழனால் 1010 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. தஞ்சை பெரிய கோவிலில் இருக்கும் 13 அடி உயர நந்தி சிலை ஒரே கல்லால் ஆனது என்பது மிகவும் வியக்கத்தக்கது. இராஜராஜேஸ்வரம் என்று அழைக்கப்பட்ட இக்கோவிலின் 216 அடி உயர கோபுரம், 12 அடி உயர சிவலிங்கம், மற்றும் கோபுரத்தின் உச்சியில் உள்ள 80 டன் எடையுள்ள முகப்புக்கல் ஆகியவை நம்மை மேலும் பிரமிக்க வைக்கின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியம் மற்றும் தமிழர் கலைகளின் சிறப்பை பறைசாற்றும் விதமாக விளங்கும் இக்கோவில் தமிழர்களாகிய நமக்கு பெருமை சேர்க்கிறது.



மாணவர் : ஷ்ரியா புகழேந்தி | ஆசிரியர் : சரண் சரவணன்

---

தலைப்பு : உடற்பயிற்சியும் வளமான வாழ்க்கையும்!! | நிலை : 4A

முன்னுரை:

உடற்பயிற்சி என்பது உடல் நிலையும், நலத்தையும் மேம்படுத்தும் உடல் செயல்பாடுகள் ஆகும். நடத்தல், ஓடுதல், நீந்துதல், பளு தூக்கல், மிதிவண்டி ஓட்டுதல், விளையாடுதல், நடனம் ஆடுதல், யோகாசனம் செய்தல், உடலுழைப்பு என எல்லாம் உடற்பயிற்சிகளே. இப்போது அத்தகைய உடற்பயிற்சியினால் உடலுக்கு ஏற்படும் நன்மைகளை பார்க்கலாம்.

பொருளுரை: "மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று."

மருத்துவர் நூலோர் சொல்லும் வாதம், பித்தம், சிலேட்டுமம் என எண்ணிய மூன்றும் மிகுந்தாலும், குறைந்தாலும் நோய் உண்டாகும். மேலும் சரியான உடற்பயிற்சி மேற்கொள்ளாமல் அதிக அளவு உணவு உண்பதால் அவரது உடலில் இரத்த சர்க்கரை, கொழுப்பு, மற்றும் உடல் எடை அதிகரிக்கிறது.

உடற்பயிற்சியின் பயன்கள்:

* இதய நோய், சர்க்கரை நோய், உடற்பருமன் போன்ற குறைகளை உடற்பயிற்சியால் கட்டுப்படுத்த இயலும்.
* உடற்பயிற்சி மன வளத்தை மேம்படுத்தும், மன அழுத்தத்தை குறைக்கும், தன்னம்பிக்கையை ஊட்டி உடல் தோற்றத்தை மேம்படுத்துகின்றது.
* உடற்பயிற்சி மூலம் அளவற்று இருக்கும் கொழுப்புகளை கரைக்கலாம்.
* பதற்றத்தின் அளவு கட்டுப்பாடில் இருக்கும். மனம் அமைதியாய் இருக்கும்.
* யோகா போன்ற சில உடற்பயிற்சிகள் மன நலனுக்கு உதவுகிறது.
* தினசரி 30-45 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தால் மனம் மற்றும் மூளை புத்துணர்வுடனும் ஆரோக்கியமாகவும் இருக்கும். புதிய நியூரான்களையும் உருவாக்க உதவுகிறது. உடற்பயிற்சி இயன்முறை மருத்துவத்தில் பெரும் பங்கு வகிக்கிறது.

முடிவுரை:

ஒழுங்கான உணவு மற்றும் உடற்பயிற்சியின் கலவை தான் நல்ல கட்டமைப்போடு இருக்கும் உடல். இந்த அவசர உலகத்தில் பலருக்கும் வேலை செய்வதற்கு தான் நேரம் உள்ளது. ஆனால், தன் உடலை பராமரிக்க நேரம் கிடைப்பதில்லை. இதனால் பாதிக்கப்படுவது நம் உடல் தான். ஆகவே உடற்பயிற்சி செய்வதற்கு நேரம் ஒதுக்குவது மிக அவசியமான ஒன்று!


"வளமான வாழ்க்கைக்கு உடற்பயிற்சி அவசியம்!!"


மாணவர் : சுசித்ரா தாணுமாலயன் | ஆசிரியர் : அ. சரவணன்

---

தலைப்பு : தமிழ் கலாச்சாரத்தில் உணவுகள் | நிலை : 4A

தமிழ் கலாச்சாரத்தில் தீபாவளி, பொங்கல், மற்றும் தமிழ் புத்தாண்டு போன்ற பண்டிகைகள் உள்ளன. இந்த பண்டிகைகளை மக்கள் புத்தாடை உடுத்தியும் உறவினர் மற்றும் நண்பர்களுடனும் இணைந்து கொண்டாடுவர். பலவகையான உணவுகளையும் உண்டு மகிழ்வர். தீபாவளியன்று வகைவகையான இனிப்புகளும், பொங்கலன்று வெண் மற்றும் சர்க்கரை பொங்கலும் தமிழ் புத்தாண்டன்று பாயாசம் சமைத்தும் பிறருக்கு அளித்தும் மகிழ்ச்சி கொள்வர். இந்த உணவுகள் நிறைந்த பண்டிகைகளை நாம் மகிழ்ச்சியாக கொண்டாட உதவுகின்றன என்றால் அது மிகையில்லை.





மாணவர் : அஞ்சும் சபியுலா கான் | ஆசிரியர் : சாருலதா குருபரன்

தலைப்பு : பாரதியார் | நிலை : 4அ

பாரதி என்ற பெயரில் உள்ள இந்த கட்டுரைகளுக்கு பாரதி என்பதைப் பாருங்கள் சின்னசுவாமி சுப்பிரமணிய பாரதி. ஒரு கவிஞர், எழுத்தாளர்; பத்திரிக்கையாசிரியர் விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவர். இவரைப் பாரதியார் என்றும் மகாகவி என்றும் அழைக்கின்றனர் பாரதி, தமிழ் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை கொண்டு, நவீனத் தமிழ்க் கவிதைகள் முன்னோடியாகத் திகழ்ந்தார்.



"பல வேடிக்கை மனிதரைப் போலே நான் வீழ்வேனென்று நினைத்தாயோ?"

மாணவர் : ஜேமந்த் | ஆசிரியர் : சாருலதா

---

தலைப்பு : உழவு – வேளாண்மை | நிலை : 4அ

நாம் சாப்பிடும் உணவு எங்கிருந்து வருகிறது? உழவர்கள் இல்லாமல் மானிடமே இல்லை திருவள்ளுவர் என்ன சொல்லியிருக்கிறார், பார்ப்போமா?

குறள் 1: உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

முவ கருத்து: உழவு செய்ய முடியாமல் உயிர் வாழ்கின்றவர், எல்லாரையும் தாங்குவதால், உழவு செய்கின்றவர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்.

குறள் 2: சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

முவ கருத்து: உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது

குறள் 3: உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

முவ கருத்து: உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

குறள் 4: உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

முவ கருத்து: உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

மாணவர் : ரூபக் ராஜசேகர் | ஆசிரியர் : சாரு குருபரன் அவர்கள்

---

தலைப்பு : பொங்கல் | நிலை : 4அ

தை முதல் நாளில் கொண்டாடப்படும் தமிழர் திருவிழா. அறுவடையை ஒட்டிய கொண்டாட்டம் உழைக்கும் மக்கள் சூரியன், மற்றும் மாடு முதலிய உயிர்களுக்கும் தொல்லும் ஒரு நன்றியறிதலாக கொண்டாடப்படுகிறது, போகி, வீட்டு பொங்கல், மாட்டு பொங்கல், காணும் பொங்கல், வீரவிளையாட்டு என்று ஒரு தொடர் விழாவாக நடைபெறும் திருவிழா.

போகி: போகிப் பண்டிகை மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது. பொக்கி என்பதுதான் மருவி, போகி என்றாகி விட்டது. அதாவது பழைய கழிதலும், புதியன புகுதலும் என்று அழைப்படுகிறது. அசுத்தங்களைப் போக்கி சுத்தத்தை வரவேற்பது என்பது இந்த பண்டிகையின் தாத்பர்யம்.

பொங்கல் பண்டிகை: இந்தப் பண்டிகை சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படும் பண்டிகையாகும்.

மாட்டுப் பொங்கல்: இதுவும் உழவர்கள் நன்றி தெரிவிக்கும் பண்டிகைதான். உழவர்கள் ஆண்டு முழுவதும் தங்களுக்காக உழைத்த மாடுகளுக்கு நன்றி தெரிவித்து அலங்கரித்து பூஜை செய்யும் நாள்.

காணும் பொங்கல் : பொங்கல் கொண்டாட்டத்தின் கடைசி நாள் நிகழ்வு காணும் பொங்கல். உற்றார் உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்டோரைக் கண்டு அன்புகளை வழங்கி மகிழ்ச்சியை பரிமாறிக் கொள்வது இதன் நோக்கம்.



மாணவர் : சந்தோஷினி ராதாகிருஷ்ணன் | ஆசிரியர் : சாருலதா குருபரன்

---

தலைப்பு :- காமராஜர் | நிலை :- 4அ

தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராக கருதப்படுபவர், 'பெருந்தலைவர் காமராஜர்'. தமிழகத்தை ஒன்பது ஆண்டு காலம் ஆட்சிசெய்த இவருடைய காலம், தமிழக அரசியல் வரலாற்றில் "பொற்காலமாக" கருதப்படுகிறது. பள்ளிக்குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு திட்டத்தினை ஏற்படுத்தி, ஏழை எளிய மக்களின் கல்வியில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தினார்.

காமராஜர் அவர்கள், 1903 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் நாள், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள "விருதுநகரில்" குமாரசாமி நாடாருக்கும் சிவகாமியம்மாவுக்கும் மகனாக பிறந்தார். அவருக்கு ஆறு வயதிருக்கும் பொழுது, அவருடைய தந்தை இறந்ததால், அவரின் தாயாரின் நகைகளை விற்றுக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தன்னுடைய பள்ளிப்படிப்பை தொடரமுடியாத நிலைக்கு தள்ளப்பட்ட காமராஜர், தன்னுடைய மாமாவின் துணிக்கடையில் வேலைக்குச் சேர்ந்தார்.

டாக்டர் வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்தர முதலியார் மற்றும் ஜார்ஜ் ஜோசப் போன்ற தேசத்தலைவர்களின் பேச்சுக்களில் கவரப்பட்ட காமராஜர் சுதந்திரப் போராட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். 1920 ஆம் ஆண்டில், தனது 16வது வயதில் சேர்ந்தார்,1953 ஆம் ஆண்டு தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றார்.

முதல்வரான பின்னர், தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் சமூகத்தொண்டு செய்வதிலேயே அர்பணித்துக்கொண்ட காமராஜர் அவர்கள், 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி தன்னுடைய 72 வது வயதில் காலமானார். அதற்கு அடுத்த ஆண்டு, இந்திய அரசின் மிக உயரிய விருதான "பாரத ரத்னா" விருது மத்திய அரசால் அவருக்கு வழங்கப்பட்டது. இந்தியாவின் மதிக்கத்தக்க இரண்டு பிரதமர்களை உருவாக்கி, 'இந்தியாவின் கிங்மேக்கராகத்' திகழ்ந்த பெருந்தலைவர் காமராஜர், 'பகைவர்களும் மதிக்கும் பண்பாளராகவும்', 'படிக்காத மேதையாகவும்', 'கல்வியின் நாயகனாகவும்', 'மனிதநேயத்தின் மறுஉருவமாகவும்' திகழ்ந்தார்.



மாணவர் :- ஸ்ருத்திகா ரவிசங்கர் | ஆசிரியர் :- சாருலதா

தலைப்பு : தமிழ் பேச்சு | நிலை : 4A

என்னுடைய தாய்மொழி தமிழ். தமிழ் ஒரு இந்திய மொழி. சென்ற வருடம் வரை எனக்கு தமிழ் பேசுவது மிகவும் கடினமாக இருந்தது. ஏனென்றால் நான் தமிழில் பேச அதிகம் முயற்சி செய்யவில்லை தப்பு செய்து விடுவேனோ என்று கூச்சப்பட்டேன். ஆனாலும் இந்தியாவில் உள்ள என் குடும்பத்தினருடன் ஒவ்வொரு வாரமும் பேசுவேன். நாளடைவில் என் தமிழ் பேச்சின் முன்னேற்றத்தை என் அப்பா அம்மா கவனித்தார்கள். இப்பொழுது எல்லோருடனும் என்னால் தமிழில் பேச முடிகிறது.

மாணவர் : ஸ்ரீராம குமார் | ஆசிரியர் : Sarulatha Guruparan

---

தலைப்பு : பாரதியார் | நிலை : 4அ

சுப்ரமணிய பாரதியார் ஒரு தமிழ் கவிஞர். அவர் டிசம்பர் 11, 1882 எட்டயபுரத்தில் பிறந்தார். இவரது இயற் பெயர் சுப்பிரமணியன். சிறு வயதிலேயே பாரதியாருக்கு தமிழ் மொழி மீது சிறந்த பற்றும், புலமையும் இருந்தது. இவருடைய கவிப்புலமையை பாராட்டிய எட்டயபுர மன்னர், இவருக்கு "பாரதி" என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் "சுப்பிரமணிய பாரதியார்" என அழைக்கப்பெற்றார். சுதந்திரப் போரில், பாரதியின் பாடல்கள் உணர்ச்சி வெள்ளமாய், தமிழ்நாட்டை வீறுகொள்ளச் செய்தது. பாரதியை மக்கள், 'கவி', 'மானுடம் பாடவந்த மாகவி', 'புது நெறி காட்டிய புலவன்', என்றெல்லாம் புகழ்கின்றனர். உலகதமிழர் நாவில் மக்கள்கவி பாரதியாரின் பெயர் அடிக்கடி உச்சரிக்க படுகிறது என்றால் அது மிகையாகாது.

மாணவர் : வர்ஷிதா விஜயகுமார் | ஆசிரியர் : சாருலதா

---

தலைப்பு : பாரதியார் | நிலை : 4அ



மாணவர் : வர்ஷிதா விஜயகுமார் | ஆசிரியர் : சாருலதா

---

தலைப்பு : ராஜேந்திர சோழன் | நிலை : 4அ

ராஜேந்திர சோழன் தென் இந்தியாவின் மாபெரும்அரசன். அவர் ராஜராஜ சோழனின் மகன். அவர் 1014 கி.பி.யில் அரசன் ஆனார். மாபெரும் வீரராக திகழ்ந்த இவர் சோழ பேரரசை ஸ்ரீலங்கா, மலேசியா மற்றும் தாய்லாந்து வரை விரிவுபடுத்தினார்.

ஸ்ரீலங்கா தீவை கைப்பற்றுவதற்காக கி.பி 1018 இல் ராஜேந்திர சோழன் இலங்கை மீது படையெடுத்தார். அந்த போரில் வெற்றி பெற்று சிங்கள மன்னர் மஹிந்தாவை கைதியாக அழைத்துச் சென்றார். அதன் பிறகு முழு தீவையும் சோழ பேரரசு ஆண்டது.

அவர் மலேசியாவைக் கைப்பற்றியதால் கடாரம் கொண்டான் என்று அழைக்கப்பட்டார்.அவர் கங்கை நதி அருகே பல அரசுகளை வென்று, கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகரத்தை உருவாக்கினார்.

அவர் போரில் மட்டுமல்ல, கலைகளிலும் சிறந்து விளங்கினார். அவர் தனது அப்பாவைப் போலவே ஒரு கோவிலையும் கட்டினார். அவர் ஒரு சிவ பக்தன். சிவனை போற்றி பல பாடல்களை பாடியுள்ளார்.

ராஜேந்திர சோழன் ஒரு சிறந்த பேரரசர். தமிழ் பண்பாட்டை தென்கிழக்கு ஆசியாவிற்கு பரப்பினார். இதனால் இன்றும் கூட பல இடங்களில் தமிழ் மற்றும் இந்து முறைகள் வழக்கத்தில் உள்ளன.

மாணவர் : [illegible] | ஆசிரியர் : திருமதி. சுசி

தலைப்பு : கபடி | நிலை : 4R

## கபடி



கபடி அல்லது சடுகுடு அல்லது பலிச் சடுகுடு என்று அழைக்கப்படும் விளையாட்டு தமிழ்நாட்டினரால் பல காலமாக விளையாடப்படும் தமிழர் விளையாட்டுகளுள் ஒன்று. சல்லிக்கட்டு (ஏறு தழுவுதல்) ஏறு தழுவுதல் போல தமிழர்கள் செய்யும் பயிற்சிகளில் கபடி என்ற பெயரால் பல காலமாக விளையாடப்பட்டு வருகிறது. கபடி என்ற பெயரும் தமிழ்ப் பெயராக இருக்கும் என்று கூறப்படுகிறது. அதாவது கை-பிடி = கபடி. இது தெற்கு ஆசிய நாடுகளில் பரவலாக விளையாடப்படுகிறது.

மாணவர் : மகேஸ்வர் முருகேசன் | ஆசிரியர் : சசிகலா ஹரிதாஸ்

---

## சிலம்பம்

நிலை : 4அ



சிலம்பம் என்பது ஒரு தடியடி தமிழர் தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். வழக்கில் இவ்விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர். இது தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல் எனப் பல கூறுகளைக் கொண்ட சிறப்பான தற்காப்புக் கலை ஆகும்.

சிலம்பாட்டம் ஆடுவதற்கு நெருங்கி இருவர் வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே சிலம்பாட்டப் போட்டிகளில் விளையாடுவர், தற்காலத்தில் இருபாலரும் சிலம்பாட்டத்தைக் கற்று வருகின்றனர். திருவிழா, கோயில் விழாக்கள் சிலம்பாட்டம் இடம் பெறும்.

சிலம்பாட்டம் ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும். கம்பு எடுத்து சுற்றும் போது உடலின் அனைத்து பாகங்களான தோள், நெஞ்சு, தசைகளும் இயக்கப்படுகின்றன. உடலின் வலிமை, ஆற்றல், விரைவுத்திறன், உடல் நெகிழ்தன்மை ஆகியவற்றை அடைய சிலம்பப் பயிற்சி உதவுகிறது.

மாணவி : நேத்ரா அசோக்குமார் | ஆசிரியை : திருமதி-சசி

---

தலைப்பு : தமிழ் முன்னாள் முதல்வர் காமராஜர் | நிலை : 4a

**யார் இவர்?** குமாரசாமி காமராஜர் இந்திய தேசிய மாநாட்டின் நிறுவனர் மற்றும் தலைவராக இருந்தார். அவர் தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வராக இருந்தார். அவர் விருதுநகரில் ஜூலை 15, 1903 இல் பிறந்தார் மற்றும் சென்னையில் அக்டோபர் 2, 1975 இல் இறந்தார். பன்னிரண்டு வயதில், காமராஜர் பள்ளியை விட்டு வெளியேற வேண்டியிருந்தது, ஆனால் அவர் கல்வியை மிகவும் மதித்தார்.




**என்ன செய்தார்?** பதினொன்றாம் வகுப்பு வரை இலவச மற்றும் கட்டாயக் கல்வியை அறிமுகப்படுத்துவதன் மூலம் கல்வியறிவை ஏழைகளுக்கு காமராஜர் உதவினார். அவர் ஏழை பள்ளி குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு உணவையாவது வழங்க மதிய உணவு திட்டத்தையும் அவர் அறிமுகப்படுத்தினார்.

மாணவர் : ரிதன்யா நாகராஜா | ஆசிரியர் : Sasi Haridoss

---

தலைப்பு : தமிழர் திருநாள் | நிலை : 4ஒ




பொங்கல் என்பது தென்னிந்தியாவின் பல நாள் அறுவடை திருவிழா. இது தமிழ் சூரிய நாட்காட்டியின்படி தை மாத தொடக்கத்தில் காணப்படுகிறது. இந்த ஆண்டு பொங்கல் ஜனவரி பதினைந்து புதன்கிழமை தொடங்கி ஜனவரி பதினெட்டு சனிக்கிழமையன்று முடிவடையும். பொங்கல் பண்டிகையின் நான்கு நாட்கள் போகி பொங்கல், சூரியப் பொங்கல் மாட்டுப் பொங்கல் மற்றும் காணும் பொங்கல் என்று அழைக்கப்படுகின்றன. போகி பொங்கல் மக்கள் பழைய பொருட்களை நிராகரித்து புதிய உடைமைகளை கொண்டாடுகிறார்கள். சூரிய பொங்கல் குடும்பத்தினருடனும் கொண்டாடப்படுகிறது, சூரியனின் பார்வையில் ஒரு திறந்தவெளியில் ஒரு பாரம்பரிய மண் பானையில் பொங்கல் வைத்து கொண்டாடப்படுகிறது. மாட்டு பொங்கல், கால்நடைகள் அலங்கரிக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றன. காணும் பொங்கலில் பல குடும்பங்கள் இந்த நாளில் மீண்டும் ஒன்றிணைகின்றன மற்றும் சமூகங்கள் பரஸ்பர பிணைப்புகளை வலுப்படுத்த சமூக நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றன.

மாணவர் : சரவன் | ஆசிரியர் : சசிகலா


தலைப்பு : கோ. நம்மாழ்வார் | நிலை : 4அ

கோ நம்மாழ்வார் அவர்கள் ஏப்ரல் 6,1928 தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள இளங்காடு என்னும் ஊரில் பிறந்தார். இவர் தமிழ்நாட்டின் முதன்மை இயற்கை அறிவியலாளர்களில் ஒருவர் ஆவார். தமிழ்நாட்டில் இயற்கை வழி வேளாண்மை முறைகளை ஊக்குவித்தவர். இவர் பூச்சி கொல்லிகள், மீத்தேன் வாயு திட்டம், மரபணு சோதனைகள், விவசாய நிலங்களை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்துதல் ஆகியவற்றை எதிர்த்தார். பல்வேறு நடைப்பயணங்கள் மேற்கொண்டும் பல அமைப்புகளையும் உருவாக்கி இயற்கை விவசாயத்தை மக்களிடம் வலியுறுத்தினார். அவருக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், இவருக்கு சுற்றுச் சூழல் சுடரொளி விருதினை வழங்கியது. இவர் 30 டிசம்பர், 2013 அன்று பட்டுக்கோட்டை அருகே அத்திவெட்டியில் மீத்தேன்வாயு திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்த சென்றிருந்த போது உடல் நலக்குறைவு நலக்குறைவு ஏற்பட்டு காலமானார்.

மாணவர் : இனியன் சுப்ரமணியன் | ஆசிரியர் : ஷ்யாமளா

தலைப்பு : மதுரை மீனாட்சி கோவில் | நிலை : 4A

## மதுரை மீனாட்சி கோவில்



மதுரை மீனாட்சி கோயில் மன்னர் குலசேகர பாண்டியனால் கட்டப்பட்டது. இக்கோயில் வரலாற்று வேர்களைக் கொண்டிருந்தாலும், தற்போதைய வளாகத்தின் பெரும்பகுதி 14 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு மீண்டும் கட்டப்பட்டது. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், முஸ்லீம் தளபதி மாலிக் கஃபூர் தலைமையிலான டெல்லி சுல்தானேட்டின் படைகள், கோயிலைக் கொள்ளையடித்து, அதன் விலைமதிப்பற்ற பொருட்களைக் கொள்ளையடித்து, தென்னிந்தியாவின் பல கோயில் நகரங்களுடன் மதுரை கோயில் சைவ மத மரபுக்குள் ஒரு முக்கிய புனித யாத்திரை தலமாகும். இது மீனாட்சி தேவி மற்றும் சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கோயிலில் விஷ்ணு பல கல்வெட்டுகள் சிற்பங்கள் மற்றும் சடங்குகளில் அடங்குவார், ஏனெனில் அவர் மீனாட்சியின் சகோதரராக கருதப்படுகிறார்.

மாணவர் : மாதவ் கார்த்திகேயன் | ஆசிரியர் : ஷாமளா

தலைப்பு : ராஜ ராஜ சோழன் | நிலை : 4அ



ராஜ ராஜ சோழன் இரண்டாம் பராந்தக சோழனின் மகன். அவர் கிபி 947 ஆண்டு பிறந்தார். ராஜ ராஜ சோழன் தஞ்சாவூரில் உள்ள பிரிஹதீஸ்வரர் கோயிலைக் கட்டினார். அவர் அருல்மொழி வர்மன் என்றும் அழைக்கப்படுகிறார். ராஜ ராஜ சோழன் மனைவி பெயர் வானதி. ராஜ ராஜ சோழன் இடைக்கால சோழர்களைச் சேர்ந்தவர், அவர் எல்லா மன்னர்களின் ரத்தினும் ஆவார். அவர்கள் பொ.ச. 848 முதல் பொ.ச. 1070 வரை ஆட்சி செய்தார்.

மாணவர் : சந்தீப் | ஆசிரியர் : ஷியாமளா

தலைப்பு : மாட்டுப்பொங்கல் | நிலை : 4அ

மாட்டுப்பொங்கல் தைப்பொங்கலுக்கு மறுநாள் கொண்டாடப்படுகிறது. மாடுகளுக்கு நன்றி தெரிவிப்பதற்காக இது கொண்டாடப்படுகிறது. அன்று மாடுகளை அலங்காரம் செய்வார்கள். மாடுகள் கட்டும் தொழுவத்தினைச் சுத்தம் செய்வார்கள். மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு வண்ணம் பூசி கூரான கொம்பில் சலங்கை கட்டி விடுவார்கள். அலங்காரம் செய்தும் தாம்பாளத் தட்டுகளில் தோட்டம் தட்டுகளில் தோட்டம், காடுகளில் விளைந்த பயிர் பச்சைகளை வைத்தும் தேங்காய், பூ, பழம், நாட்டுச் சர்க்கரை என எல்லாம் பூஜைக்காக எடுத்து வைப்பார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனைக் காட்டப்படும். இதன் பின் பசு, காளை, எருமை என அனைத்து கால் நடைகளுக்கும் பொங்கல் பழம் கொடுப்பார்கள்.



மாணவர் : ஸ்ருதி சுரேஷ் | ஆசிரியர் : ஷ்யாமளா கிருஷ்ணன்

தலைப்பு : மாத்ரிமந்திர் | நிலை : 4-அ

# மாத்ரிமந்திர்

ஆரோவில், தமிழ் நாடு






ஜூன் 1965 - 'உலக அம்மா' என்று அழைக்கப்படும் மிரா அல்பாசாவிற்கு அர்பணிக்கப் பட்டது

1968 ஆண்டின் ஆரம்பத்தில் - உலக அம்மா பன்னிரண்டு மாத்ரிமந்திர் தோட்டங்களுக்குப் பெயர்களைக் கொடுத்தார் (அவை மேலே உள்ள படத்தில் குறிப்பிட பட்டுள்ளது)


பிப்ரவரி 1971 - மாத்ரிமந்திருக்கான இறுதி மாதிரிக்கு உலக அம்மா ஒப்புதல் அளித்தார்

பிப்ரவரி 21, 1971 - மாத்ரிமந்திர் கட்டுமானத் தொடக்கத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது

2008 - மாத்ரிமந்திர் கட்டிடம் திறக்கப் பட்டது

மாணவர் : சோனிகா சங்கர் | ஆசிரியர் : சியாமளா கிருஷ்ணன்

தலைப்பு : சென்னையின் அறிமுகம் | நிலை : 4A



சென்னை தமிழ்நாட்டின் தலைநகரமும் இந்தியாவின் நான்காவது பெரிய நகரமும் ஆகும். 1966 ஆம் ஆண்டுக்கு முன்னர இந்நகரம் மெட்ராஸ் என்று அழைக்கப்பட்டு வந்தது. சென்னை, வங்காள விரிகுடாவின் கரையில் அமைந்த துறைமுக நகரங்களுள் ஒன்று. சுமார 10 மில்லியன் (ஒரு கோடி) மக்கள் வாழும் இந்நகரம், உலகின் 35 பெரிய மாநகரங்களுள் ஒன்று. சென்னை தென்னிந்தியாவின் வாசலாகக் கருதப்படுகிறது. சென்னை நகரில் உள்ள மெரினா கடற்கரை உலகின் நீளமான கடற்கரைகளுள் ஒன்று. சென்னை கோலிவுட் என அறிப்படும் தமிழ்த் திரைப்படத் துறையின் தாயகம் ஆகும். பல விளையாட்டு அரங்கங்கள் உள்ள சென்னையில் பல விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறுகின்றன.

சென்னையின் பொருளாதாரம் பலதரப்பட்ட தொழில்களைச் சார்ந்தது. ஊர்தி, தகவல் தொழில்நுட்பம், வன்பொருள் தயாரிப்பு, மருத்துவம் போன்ற பல துறைகளைக் கொண்டது. ஊர்தி மற்றும் ஊர்திகளின் உதிரி பாகங்கள் உற்பத்தியில் நாட்டின் 35 விழுக்காடு சென்னையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் நாட்டில் இரண்டாம் இடத்தில் உள்ளது.



மாணவர் : வினிதா ரவிவர்மா | ஆசிரியர் : ஷியாமலா கிருஷ்ணன்





சாரங்கா ராஜகோபாலன், வருண் கோவிந்தராசன், ஜெயப்பிரகாஷ் முருகேசன் (ஆ),
தயாநிதி ரங்கன் மகேஷ், பூர்வஜா சந்திரமௌலி, தன்யா பாலசுப்ரமணியன்,
ஆர்ணி பங்குராஜ், ஆனந்தி ஸ்ரீநிவாசன், அம்ரிதா செல்வராஜ்

**தலைப்பு :** அமேசான் மழைக்காடு | **நிலை :** 4ஆ

## அமேசான் மழைக்காடு

அமேசான் மழைக்காடு உலகின் மிகப்பெரிய வெப்பமண்டல மழைக்காடாக இருக்கிறது. இது அதன் பல்லுயிர் பெருக்கத்திற்கு புகழ் பெற்றது. அமேசான் மழைக்காடுகள் "கிரகத்தின் நுரையீரல்" என்றும் அழைக்கப்படுகின்றன. ஏனென்றால் இது உலகின் 20%க்கும் அதிகமாக ஆக்ஸிஜனை உற்பத்தி செய்கிறது. மனிதனுக்குத் தெரிந்த சுமார் 10 மில்லியன் வகையான விலங்குகள், தாவரங்கள் மற்றும் பூச்சிகள் உள்ளன, அவற்றில் பாதிக்கும் மேற்பட்டவை மழைக்காடுகளை வீடு என்று அழைக்கின்றன. வெப்பமண்டல மழைக்காடுகளின் சராசரி வெப்பநிலை 70 முதல் 85°F வரை உள்ளது. வெப்பமண்டல மழைக்காடுகள் அதன் பெயரைப் போலவே மிகவும் மழைக்காலம். ஒரு வருடத்தில் மழை 400 அங்குலங்கள் வரை வரக்கூடும். ஆனால் அமேசான் மழைக்காடு தீ மேலும் மேலும் அடிக்கடி நிகழ்கிறது. இதன் விளைவாக பூமி அதன் முக்கிய ஆக்ஸிஜன் மூலத்தை இழக்கிறது.

அதனால் தான் அமேசான் மழைக்காடுகளை நாம் சேமிக்க வேண்டும்.



**மாணவர் :** அம்ரிதா செல்வராஜ் | **ஆசிரியர் :** ஜெயபிரகாஷ் முருகேசன்

---

**தலைப்பு :** சுப்பிரமணிய பாரதியார் | **நிலை :** 4ஆ

மகாகவி பாரதியார், சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும், 1882 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் மகனாக பிறந்தார். அவருக்கு தம் பெற்றோர்கள் இட்ட பெயர் சுப்பிரமணி. 5 வயதிலேயே தன் தாயை இழந்த பாரதியார், ஏழு வயது முதலே கவிதையால் கர்ஜிக்க தொடங்கினார். இவருக்கு 11 வயது இருக்கும்போது இவரது கவிபாடும் ஆற்றலையும் புலமையையும் பாராட்டி இவருக்கு பாரதி என்ற பட்டத்தை வழங்கினார் எட்டையபுர மன்னர். அன்றில் இருந்து இவர் பெயர் சுப்பிரமணிய பாரதியார் என்றானது. 14 வயது மட்டுமே நிறைவடைந்த அவருக்கு 7 வயது சிறுமியான செல்லம்மாளோடு நடந்தேறியது பால்ய திருமணம். பின்னாளில் தன் கவிதைகள் மூலம் பால்ய திருமணத்திற்கு எதிராக பொங்கி எழுந்தார். 16 வயதில் தன் தந்தையையும் இழந்த பாரதியார் அதன் பிறகு வறுமையில் வாடித் தவித்தார். பிறகு எப்படியோ கஷ்டப்பட்டு காசிக்கு சென்று அலகாபாத் பல்கலை கழகத்தில் சமஸ்கிருத மொழியையும், இந்தி மொழியையும் கற்றார். இது தவிர ஆங்கிலம், வங்காளத்திலும் தனிப் புலமை பெற்றார். 4 ஆண்டுகள், காசியில் இருந்து விட்டு தமிழகம் திரும்பினார். எட்டயபுர மன்னரின் அழைப்பை ஏற்று அரசவை கவிஞராக பணியாற்றினார். 1905 ஆண்டு முதல் அரசியலில் ஆர்வம் காட்டினார் மகாகவி பாரதியார். 1907ஆம் ஆண்டில் "இந்தியா" என்னும் வார ஏட்டையும் "பாலபாரதம்" என்ற ஆங்கில இதழையும் நடத்தினார் பாரதியார். கடையத்தில் இருந்த காலகட்டத்தில் பாரதியாரை வறுமை மீண்டும் சூழ்ந்துகொண்டது. வீட்டில் தன் மனைவி சமைக்க வைத்திருக்கும் சிறிதளவு அரிசியை கூட காக்கைகளுக்கும், குருவிகளுக்கும் வாரி இறைத்து விட்டு, தான் பசியோடு வாழ்ந்த நாட்கள் ஏராளம். அவர் யானை தந்த அதிர்ச்சியில் இருந்து மீண்டபோதும் வயிற்று கடுப்பு நோயால் பாதிக்கப்பட்டார். மருந்துகளை சாப்பிட மறுத்த அவர் தனது 39 வது வயதில், 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார். பாரதியார் எழுதிய நூல்களில் சில பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, சின்னஞ்சிறு கிளியே, தேசிய கீதங்கள், ஞான ரதம். இன்னும் பல உள்ளன.

**மாணவர் :** அனந்தி சீனிவாசன் | **ஆசிரியர் :** ஜெயபிரகாஷ் முருகேசன்

---

**தலைப்பு :** தண்ணீரின் முக்கியத்துவம் | **நிலை :** 4ஆ

நம் வாழ்க்கையில் தண்ணி மிகவும் முக்கியம். தண்ணீர் இல்லாமல் நம் வாழ முடியாது. தண்ணீர் நம்மளுக்கு நிறைய சக்தி தரும். தண்ணீர் உடல் இருக்கும் ரசாயனங்கள், எல்லாம் வெளியேறும். அதனால் நாம் தினமும் நிறைய தண்ணீர் குடிக்கனும். ஒரு நாளில், ஒருவருக்கு குறைந்து, பத்து லிட்டர் தண்ணீர் குடிக்கவேண்டும். அப்பொழுது தான், நம் உடம்பில் இருக்கும் ரசாயனங்கள் போகும். மற்றும் தண்ணீர் நிறைய குடித்தால், உடம்பில் இருக்கும் சூடு போய்விடும். மற்றும் நிறைய நோய்கள் வராது. சரியா தண்ணீர் குடித்தால் எந்த வியாதியும் வாராது. மற்றும் நிறைய தண்ணீர் குடித்தால், தலைமுடி கருப்பாக இருக்கும். நிறைய தண்ணீர் குடித்தல், உடம்பின் எடை குறையும்.

**மாணவர் :** துயாநிதி | **ஆசிரியர் :**





பத்மநாபன் சரவணன், நித்தின் ஹரிதாஸ், அமிழ்தன் இளங்கோவன்

ரதிஸ்ரீ சீனிவாசன், குரு குரபரன் (ஆ), அந்த்ரா விவேக்

# சிலப்பதிகாரம் (சிலம்பு + அதிகாரம்)

சிலம்பு காரணமாக விளைந்த கதையானதால், இந்நூல் சிலப்பதிகாரம் என்றழைக்கப்படுகிறது. இந்நூல் தமிழில் எழுதப்பட்ட ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகும். இந்நூல் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் இளங்கோவடிகள் என்பவரால் எழுதப்பட்டது.

இக்கதை, தமிழகத்தில் புகார் நகரில் வாழ்ந்த கோவலன் மற்றும் கண்ணகி என்ற தம்பதியினரின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்கிறது. பெரும் வணிகனான கோவலன், மாதவி என்ற நடனமங்கையின் அழகில் மயங்கி, கண்ணகியைப் பிரிகிறான். பின்பு தனது தவறை உணர்ந்து, தன் பொருட்களை இழந்து கண்ணகியுடன் மீண்டும் சேர்கிறான். அதன்பின்பு மீண்டும் பிழைப்பிற்காக கண்ணகியின் கால் சிலம்பினை விற்கச் சென்ற இடத்தில், பாண்டிய மன்னரின் காவலர்களால் சந்தேகத்தின் பேரில் பிடிபட்டு அக்காலச்சிலம்பு அரசியினுடையது என்று தவறுதலாக கருதப்பட்டு அவன் பாண்டியனால் கொலை செய்யப்படுகிறான். இந்த அநீதியால் ஆத்திரமடைந்த கண்ணகி நீதிமன்றத்திற்குச் சென்று அவளது சிலம்பு மாணிக்கங்களைக் கொண்டிருப்பதைக் காட்டி, கோவலன் நிரபராதி என்பதை நிரூபிக்கிறாள். ஏனெனில் அரசியின் கால்சிலம்பு முத்துக்களாலானது. தான் தவறாக நீதியுரைத்ததை உணர்ந்த பாண்டிய மன்னன் அவையிலேயே உயிர்துறக்கிறான். அதீத [illegible] மதுரை நகரை கண்ணகி தீக்கிரையாக்குகிறாள் என்று கதை முடிகிறது.



அமுதன் இளங்கோவன்
திரு குருபரன்
5A

அனிஷா சிவயோகன் வகுப்பு 5ஆ ஆசிரியர் திரு குருபரன்

## இரணைமடு நீர்த்தேக்கம்

எமது ஆசிரியர் அடிக்கடி கல்லணை பற்றிக் கூறுவார். அது இந்தியாவில் உள்ளதால் அதனைப் பார்க்கும் சந்தர்ப்பம் குறைவு. அதனால் அதுபற்றிய வியப்பும் ஈர்ப்பும் என்னிடம் வருவதில்லை. இலங்கையிலும் கல்லணையைப்போன்று பல அணைக்கட்டுகளும் நீர்த்தேக்கங்களும் உள்ளன.

நான் இங்கு எழுதுவது இரணைமடு என்ற நீர்த்தேக்கத்தைப் பற்றியதாகும். இது ஈழத்தின் மத்தியிலுள்ள கிளிநொச்சி என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது இலங்கைத் தீவின் 7 ஆவது பெரிய நீர்த்தேக்கம் ஆகும். இது அமைந்துள்ள இடம் தொல்லியல் மையமாகவும் உள்ளது. 3000 ஆண்டு தொன்மையான தொல்பொருட்கள் அங்கு கண்டெடுக்கப்பட்டன. இது கனகராயன் ஆற்று நீரைத் தேக்கி நெற்செய்கைக்காக கட்டப்பட்டதாகும். அதற்கான ஆரம்பத் திட்டங்களை 1885 இல் ஆங்கிலேய ஆட்சியாளரான சேர் ஹென்றிபாட் உருவாக்கினார். பின்னர் குமிரெனன் என்ற பொறியியலாளரால் 1900 இல் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் பெரும் பணிகளுக்கு தேவையென்பதால் கிளிநொச்சி நகரில் குடியேறுமாறு மக்கள் குடியிருப்பை நிறுவினார். அங்கு குடியேறிய தமிழ் மக்களின் முழுமையான வியர்வையால் கட்டப்பட்டதாகும்.

1920 இல் 19 இலட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவில் முதல் கட்டமாக முழுமையாக்கப்பட்டது. அப்போது இரணைமடுவின் கொள்ளளவு 44 ஆயிரம் ஏக்கர் அடி. ஆழம் 22 அடி ஆகும். 1954 இலும் 1975 இலும் மீளஅமைக்கப்பட்டு தற்போது அதன் கொள்ளளவு 106,500 ஏக்கர் அடியாகவும் ஆழம் 34 அடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இது கனகராயன் ஆறு, கரமாரி ஆறு என இரு ஆறுகளின் மூலம் நீரைப் பெறுகிறது. இதன் அணை 2 கி.மீ நீளம் கொண்டது. இதன்மூலம் 21,000 ஏக்கர் நிலப்பரப்பு பயன் பெறுகிறது. இந் நீர்த்தேக்கத்துக்கு அருகில் விடுதலைப் புலிகளின் முதலாவது பயிற்சி முகாமும் விமானத்தளமும் இருந்தமையால் மிகவும் முக்கியமான இடத்தைச் சரித்திரத்தில் பிடிக்கிறது. எனது கட்டுரையின் மூலம் பலர் இரணைமடு நீர்த்தேக்கம் பற்றி அறிவார்கள் என எண்ணுகிறேன்.

தலைப்பு : ஐம்பெரும் காப்பியங்கள் நிலை : 5அ

தமிழ் இலக்கியத்தில், காப்பியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் அமைந்ததே காப்பியம் எனப்படும். இவற்றை அடிப்படையாக கொண்டு சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெரும் காப்பியங்கள் தோன்றின.




இந்த ஐந்தினுள் சிறந்து விளங்குவது சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆகும். இந்த இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்றும் கூறுவர். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சமகாலத்தில் தோன்றின. மற்ற மூன்று காப்பியங்களும் சோழர் காலத்தில் தோன்றின. சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதல் காப்பியம் ஆகும். தமிழில் நமக்கு கிடைத்துள்ள தொன்மையான சமயக் காப்பியம் மணிமேகலை ஆகும். சீவக சிந்தாமணியோ காலத்தால் முதன்மை என்ற பெருமை பெற்றது. நான்காவதாக வளையாபதியில் விருத்தப்பாவின் முன்னைய வளர்ச்சி நிலையை காணலாம். இறுதியாக குண்டலகேசி சமயப்பூசல் அடிப்படையில் தோன்றியது.

ஐம்பெரும் காப்பியங்கள்
- சீவக சிந்தாமணி
- வளையாபதி
- மணிமேகலை
- சிலப்பதிகாரம்
- குண்டலகேசி

மாணவர் : அந்த்ரா விவேக் ஆசிரியர் : திரு. குருபரன்

தலைப்பு: M.S. சுப்புலட்சுமி
மாணவர் பெயர்: மதுமிதா . கேசா

கட்டுரை:

செப்டம்பர் 16, 1916ல் மதுரையில் பிறந்த பெண்மணி அவர் கர்நாடக இசை திறமைகளால் தமிழ்நாட்டை மட்டுமில்லாமல் ஒட்டு மொத்த ஆசியாவையும் கவர்ந்தார். சுப்புலட்சுமி முதலில் அவர் தாய் சண்முகவடிவு அம்மாள், பின்பு செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயர் முடிவில் நாராயணராவ் வியாசாரிடம் கர்நாடக சங்கீதத்தை கற்றார். பெண்களின் இடம் அடுப்பங்கரை தான் என்றும் காலத்திலேயே பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக இவர் பல சாதனைகளை படைத்துள்ளார். உதாரணத்திற்கு: பாரத் இரத்னா பரிசு, இரமோன் மாக்சேசே விருது. மற்றும் அவர் லண்டன், நியூயார்க், கனடா, இரஷ்யா போன்ற பல்வேறு இடங்களில் கச்சேரி நடத்தியுள்ளார். 10 வயதிலிருந்தே தமிழ்நாட்டிற்கு இவர் பெருமை சேர்க்கத் தொடங்கினார். இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு கூட இவர் மீது அதிக மரியாதை கொண்டு பாராட்டியுள்ளார். இவர் தமிழ்நாட்டின் மாணிக்கம் அல்லவா?

"சாதனைப் பெண்ணே, சாதனைப் பெண்ணே,
இவ்வுலகமே உன்னை வணங்குமே"

என்ற பாடலுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் இவர் என்றால் மிகையாகாது.

**தலைப்பு :** எனக்குப் பிடித்த சங்க காலப் பாடல் | **நிலை :** 5அ

தண்டாமரையினுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டூகம்
வண்டோ கானத்திடையிருந்து வந்து கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார் புல்லர் நல்லோரை
கண்டே களித்து உறவாடி தம்முள் கலப்பர் கற்றோரே!

தவளையானது குளிர்ந்த தாமரையினுள் பிறந்தாலும், அது அத்தாமரையிலுள்ள குளிர்ந்த இனிய தேனை உண்ணாது; வண்டோ, தூரத்திலுள்ள காட்டின் நடுவிலிருந்து வந்து, அந்தத் தேனை உண்ணும்;

அதுபோல, கல்லாதவர்கள் கற்றவர்களுடன் பல காலம் பழகியிருந்தாலும் கற்றவர்களின் பெருமையை உணரமாட்டார்கள்; ஆனால், கற்றவர்கள் மற்ற அறிவுடையவர்களின் பெருமையை அவர்களைக் கண்டவுடன் உணர்ந்து அவர்களுடன் உறவாடி மகிழ்வர்.



தண்டாமரை - குளிர்ந்த தாமரை
தண்டேன் - குளிர்ந்த தேன்
நுகரா - உண்ணாத
மண்டூகம் - தவளை
புல்லர் - கல்லாதவர்
கானம் - காடு
கமல மது - தாமரையின் தேன்

**மாணவர் :** நித்தின் ஹரிதாஸ் | **ஆசிரியர் :** குருபரன்

---

**தலைப்பு :** வீர பாண்டிய கட்டபொம்மன் | **நிலை :** 5அ

பிரிட்டிஷ் கிழக்கு இந்தியா கம்பெனியை எதிர்த்து போராடிய தமிழ் மன்னர், மற்றும் முதல் சுதந்திர போராட்ட வீரர் வீர பாண்டிய கட்டபொம்மன். அவரின் இயற்பெயர் கெட்டி பொம்மு நாயக்கர். இவர் பாஞ்சாலங்குறிச்சியின் 47வது மன்னர் ஆவார். பாஞ்சாலங்குறிச்சிக்கு வருவாய் அளித்து வந்த வளமான நிலம் திருவைகுண்டம் ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் சென்றதால் கட்டபொம்மனால் வரியை கட்ட முடியவில்லை. பாஞ்சாலகுறிச்சி அருகில் இருக்கும் திருநெல்வேலிப் பகுதியின் கலெக்டர் ஜாக்சன் துரை கட்டபொம்மனிடம் வரி கேட்டபோது, சண்டை அவர்களுக்கு ஏற்பட்டது.

ஆங்கில படை பாஞ்சாலங் குறிச்சியின் மீது படை எடுத்தது. கட்டபொம்மன் ஆங்கிலேயர்களின் வீரமும் விவேகமும் கொண்டு எதிர்த்து போரிட்டபோதும் ஆங்கிலேயர்கள் கோட்டையை கைப்பற்றினார்கள். அதனால், கட்டபொம்மன் புதுக்கோட்டை மன்னன் தொண்டைமானிடம் அடைக்கலத்திற்கு கேட்டார், ஆனால் தொண்டைமான் ஆங்கிலேயர்களிடம் காட்டி கொடுத்தார்.

கட்டபொம்மன் வரிகட்டாமல் மற்றும் ஆங்கிலேயர்களை போரிட்டதால், தூக்கிலிடப்பட்டார். கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார். மற்ற பாளையக்காரர்கள் போல் ஆங்கிலேயர்களுக்கு அடிபணியாமல் வீரமாக போரிட்டு உயிரை கொடுத்ததால் கட்டபொம்மன் சுதந்திரப் போராட்ட வீரராக கருதப்படுகிறார். அவரின் தியாகத்தை போற்றி நினைவுச்சின்னங்களை இந்தியா அரசு எழுப்புகிறது.

**மாணவர் :** பத்மநாபன் சரவணன் | **ஆசிரியர் :** திரு குரு குருபரன்

---


பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு

பெயர்: ருக்மிணி சீனிவாசன்
வகுப்பு: 5அ
ஆசிரியர்: குருபரன்

“தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

என்று தேன் சுவை சொட்டும் பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர் ‘பாவேந்தர் பாரதிதாசன்’ அவர்கள். பெரும் புகழ் படைத்த பாவலரான பாரதிதாசன் அவர்கள், ‘புரட்சிக்கவி’ என்றும் ‘பாவேந்தர்’ என்றும் அழைக்கப்பட்டார். தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சைவ சித்தாந்த வேதாந்தங்களை முறையாகக் கற்று தமிழ் மொழிக்கு அருட்தொண்டாற்றியவர், பாரதிதாசன் அவர்கள். தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி, திரைக்கதாசிரியர் எழுத்தாளர், என்று பல்வேறு துறைகளில் தமிழ் மொழியின் இனிமையை மக்களிடம் எடுத்துச் சென்றவர் என்று சொன்னால் அது மிகையாகாது. தனது படைப்புகளுக்காக, ‘சாகித்ய அகாடமி விருது’ பெற்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்மொழியில் இன்றளவும் நிலைத்து நிற்கும் அவரது தலைசிறந்த படைப்புகள் பல.

1891 - புதுவையில், ஏப்ரல் மாதம் இருபத்தி ஒன்பதாம் தேதி 1891 ஆம் ஆண்டில் கனகசபை முதலியார் மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.
1919 - காரைக்காலைச் சேர்ந்த அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராகப் பதவி பெற்றார்.
1920 - பழநி அம்மையார் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.
1954 - புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
1960 - சட்டமன்ற தேர்தலில் தோல்வியைத் தழுவினார்.
1964 - ஏப்ரல் மாதம் இருபத்தி ஒன்றாம் தேதி, 1964 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.
1970 - அவரது மரணத்திற்குப் பின், அவரது ‘பிசிராந்தையார்’ நாடகத்திற்காக அவருக்கு ‘சாகித்ய விருது’ வழங்கப்பட்டது.
2001 - அக்டோபர் மாதம் ஒன்பதாம் தேதி, சென்னை தபால் துறை மூலமாக ஒரு நினைவு அஞ்சல்தலை அவரது பெயரில் வெளியிடப்பட்டது.





ஆருத்ரன் சிவப்பிரகாஷ், ஷிவாலி இராஜேந்திரன், சுகுமார் பொன்ராம் (ஆ)
அனுஶ்ரீ ஜெயக்குமார், அர்ச்சனா அண்ணாதுரை, பரத் ராமமூர்த்தி (ஆ)
தீத்தாரப்பன் மந்திரமூர்த்தி (ஆ), ஜோ டேனிகா இனிகோ, சிந்து சண்முகம், திரிஷா பாரத்

ஆரணி பரங்குரான்
ஜெயபிரகாஷ் 4B

# பொங்கல் 2020

வழக்கம்போல் இந்த வருடமும் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாட நான் தயாராகிக் கொண்டிருக்கிறேன். தமிழ்ச் சங்கம் சார்பாக இந்த வருடம் பொங்கல் விழாவின் பொழுது உழவின் பெருமையை பற்றிய அற்புதமான காட்சியை வடிவமைக்க உள்ளோம். பணிகள் சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. நான் இந்த குழுவில் இருக்கிறேன். மேலும் அன்று அனைவரின் முன்பாக பொங்கல் பொங்கிவர "பொங்கலோ பொங்கல்" என்று ஆர்ப்பரிக்க ஆவலாக காத்திருக்கிறேன். அன்று இரவில் நிகழ்ச்சிகளில் நான் கரிகாலனின் சிறப்பை பற்றிய ஒரு நாட்டிய நாடகத்தில் நடிக்க உள்ளேன். இந்த 2020 வருடம் பொங்கல் நான் என் வாழ்க்கையில் ஒரு மறக்க முடியாத நாளாக இருக்கும் என்று நம்புகிறேன்.

ஆவலுடன் ஆரணி

---

2019

வகுப்பு: 4அ
ஆசிரியர்: சிவயோகன்
மாணவர் - அவனிஷ் விஜயகுமார்

# துடுப்பாட்ட கோப்பை



2019 ஐ.சி.சி கிரிக்கெட் உலகக் கோப்பை 12 வது உலகக் கோப்பையாக இருந்தது. இது ஒவ்வொரு 4 வருடங்களுக்கும் நடைபெறுகிறது. ஐ.சி.சி உலகக் கோப்பை இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் வழங்கப்பட்டது, இது மே 30 முதல் ஜூலை 14 வரை வழங்கப்பட்டது. இந்த போட்டியில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, வேஸ்ட் இந்திஸ், தென்னாப்பிரிக்கா, ஆப்கானிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய 10 அணிகள் இருந்தன. 6 வார ஒரு போட்டிகளுக்குப் பிறகு அரையிறுதி தொடங்கியது. அரையிறுதியில் இந்தியா வெர்சஸ் நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா வெர்சஸ் இங்கிலாந்து ஆகிய 2 போட்டிகள் இருந்தன. நியூசிலாந்து இந்தியாவை வீழ்த்தியது, இங்கிலாந்து ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது. இறுதிப் போட்டியில் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து ஆகியவை இருந்தன, அதில் இங்கிலாந்து ஒரு சூப்பர் ஓவர் மூலம் வென்றது.

---

**தலைப்பு :** மலாலா - முள்ளில் பூத்த மலர் | **நிலை :** 4ஆ

பல நாடுகளில் பெண்கள் கல்வி கற்பதற்கும், முன்னேறுவதற்கும் பல தடைகளைத் தாண்டவேண்டியுள்ளது. இந்நிலையில் தீவிரவாத அச்சுறுத்தல் நிறைந்த நாடுகளில் பெண்களின் நிலையைப் பற்றி கேட்கவே வேண்டாம். இப்படிப்பட்ட இடத்திலிருந்து பூத்த மலர் தான் மலாலா.

தீவிரவாதிகளின் பிடியில் சிக்கியுள்ள பகுதியை சேர்ந்தவர் தான் மலாலா. அங்கு, பெண்கள் பள்ளிக்கூடம் இழுத்து மூடப்பட்டது. இங்குள்ள பெண்களின் நிலை குறித்து இணையத்தளத்தில் எழுத ஆரம்பித்தார் மலாலா. பி.பி.சி அவர் எழுத்துக்களுக்கு உயிரோட்டம் தர முன் வந்தது.

முதன்முறையாக தொலைக்காட்சியில் பேட்டி அளித்த மலாலா உலகத்துக்கு அறிமுகமானார். தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியிலிருந்து இப்படி ஒரு பெண் துணிவுடன் செயல்படுவதை தீவிரவாதிகள் விரும்பவில்லை. பல மிரட்டல்களுக்கு இடையிலும் மலாலா பள்ளி செல்வதை நிறுத்தவில்லை. இதனால் ஆத்திரமடைந்த தீவிரவாதிகள் மலாலாவைச் சுட்டனர். தீவிர சிகிச்சைக்கு பிறகு மீண்டுவந்த மலாலா, இங்கிலாந்தில் அவர் படிப்பை தொடங்கினார். மருத்துவராக விரும்பிய மலாலா போராளியாகி பெண்களுக்காக போராட முடிவு செய்தார். "மலாலா ஃபவுண்டேஷன்" என்ற அமைப்பை பெண்குழந்தைகளின் படிப்புக்காக தொடங்கி சேவை செய்கிறார்.

2014 ஆம் ஆண்டில் மலாலாவிற்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்தது. சிறுவயதிலேயே நோபல் பரிசு பெற்றவர் இவர் தான். அது மட்டுமல்லாமல் நோபல் பரிசு வாங்கிய முதல் பாகிஸ்தானியரும் இவர்தான்.

"கல்வி ஒன்றே அடிமை படுத்தப்பட்ட பெண்களின் தலையெழுத்தை மாற்ற முடியும்," என்பதை உணர்ந்து ஒட்டுமொத்த பெண்களின் ஒற்றை குரலாக ஒலிக்கிறார் மலாலா.

**மாணவர் :** தன்யா பாலசுப்ரமணியன் | **ஆசிரியர் :** நா. சிவயோகன்

---

**தலைப்பு :** நாட்டுப்புறக் கலைகள் | **நிலை :** 4ஆ

நாட்டுப்புறக் கலைகள் நம் தமிழக மக்களின் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக திகழ்கின்றன. இவை பல்வேறு பாடல் மற்றும் ஆடல் வகையாகவும் வெளிப்படும். நாட்டுப்புற நாடகங்கள் இவை இரண்டையும் கலந்து தொகுக்கப்படும். நாட்டுப்புற பாடல்கள் தாலாட்டு, கொண்டாட்டம், பக்தி, ஒப்பாரி என்று வெவ்வேறு வகைப்படும். அதே போல் கும்மி, கோலாட்டம், பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், காவடியாட்டம், சிலம்பாட்டம், கரகம் என்று பலவகையான நடனங்களும் உள்ளன. நாடகங்களில் வீதி நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம் போன்ற நாடகங்களும் தொகுக்கப்படுகின்றன. இதிகாச புராண வரலாற்றுக் கதைகளே ஒயிலாட்டத்தில் பாடப்படும். கும்மியாட்டம் தமிழகமெங்கும் நிகழும் ஒரு முக்கிய நடனமாகும். கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் நாற்பது கூத்து குழுக்கள் உள்ளன. காவடியாட்டம் சமய உணர்விற்காகவும், பொழுது போக்கிற்காகவும் நிகழ்த்தப்படுகிறது. வில்லுப்பாட்டு நாட்டுப்புறக் கலைகளில் மிகச் சிறந்தது. இப்பாடல்களின் மூலம் பல்வேறு கதைகளை தொகுத்து வழங்குவர். நாட்டுப்புற பாடல்கள் எதுகை, மோனை, இயைபு, இரட்டைக் கிளவி என்ற யாப்பிலக்கணத்தின் கட்டுக் கோப்பில் அமைக்கப் படுகின்றன. தாய்மை உணர்வின் வெளிப்பாடே தாலாட்டுப் பாடல்கள் ஆகும். கொண்டாட்ட பாடல்கள் மனிதனின் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகும். இவை அகப்பாடல், புறப்பாடல் என்று பிரிக்கப்படும். ஒரு நாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் அச்சமூகத்தினை பிரதிபலிக்கும் கருவியாகும். நாட்டுப்புற கலைகளின் மூலம் நமது முன்னோர்களின் நம்பிக்கை, எண்ணம், பழக்க வழக்கம் ஆகியவற்றை அறியமுடிகிறது.







**மாணவர் :** பூர்வஜா சந்திரமௌலி | **ஆசிரியர் :** நா. சிவயோகன்

சு. சஹானா 4 ஆ
நா. சிவயோகன்

# துளசி

துளசி ஒரு மூலிகை செடியாகும். துளசி இலை : மன இறுக்கம், நரம்புக் கோளாறு, ஆஸ்துமா, இருமல் மற்றும் சில தொண்டை நோய்களை உடனுக்குடன் குணமாக்கும் சக்தி உண்டு. துளசி இலைச் சாறில் தேன், இஞ்சி முதலியவை கலந்து ஒரு தேக்கரண்டி அருந்தலாம். மூலிகைகளின் ராணியான துளசி அதன் மருத்துவ குணத்தால் ஆயுர்வேத மருத்துவத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் இதன் இலைகள் மட்டுமின்றி, அதன் பூக்களிலும் எண்ணற்ற மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளது. துளசியின் மற்ற பெயர்கள் : ஷோதுமாய், திவ்யா, பிரியா, துளவம், மாலலங்கல், பிருந்தா மற்றும் ஸ்ரீ துளசி. தினமும் காலையில் வெறும் வயிற்றில் துளசி இலையை சாப்பிட்டு வந்தால் அவை இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தி, இதய நோய் வரும் அபாயத்தைக் குறைக்கும். நீரிழிவு நோயாளிகள் துளசி இலையை சாப்பிட்டு வந்தால், அதனால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைந்து, இன்சுலின் சீராக சுரக்கப்பட்டு நீரிழிவை கட்டுப்பாட்டுடன் வைக்கும். துளசி இலையின் சாறு எடுத்து அதில் சிறிது தேன் சேர்த்து கலந்து குடித்து வந்தால் சிறுநீரக கற்கள் மற்றும் சிறுநீரக பாதையில் ஏதேனும் தொற்று இருந்தாலும் குணமாகும்.



(துளசி இலைகள்)

உடலில் வெப்பம் அதிகம் இருந்தால், தலை வலி வரக்கூடும் என்பது தெரியுமா?

ஆம், அப்படி வரும் தலை வலிக்கு துளசி மிகவும் சிறப்பான நிவாரணி. அதற்கு துளசியை அரைத்து, அதில் சந்தனப் பொடி சேர்த்து கலந்து, நெற்றியில் பற்று போட்டு வந்தால் நல்ல நிவாரணம் கிடைப்பதோடு உடல் சூடும் குறையும்.

துளசி இலைகளை சாப்பிட்டால் நமது உடல் நன்றாக இருக்கும். துளசி சாப்பிடுவது பல வழிகளில் நமக்கு நன்மை அளிக்கிறது, ஆரோக்கியமாகவும் நீண்ட காலம் வாழவும் உதவுகிறது.

---

| தலைப்பு : பொங்கல் திருவிழா | நிலை : 4 ஆ |
|---|---|

## பொங்கல் திருவிழா

பொங்கல் திருவிழா நான்கு தினங்களுக்கு கொண்டாடப்படும். முதல் நாளில் போகி பண்டிகை. அன்று வீடுகளை சுத்தம் செய்து, வண்ணங்கள் அடித்து, மற்றும் பழைய துணிகளும், மண் பாண்டங்களும் தீயிலிட்டு கொளுத்துவோம்.

இரண்டாம் நாள் பொங்கல் பண்டிகை ஆகும். இது தை மாதத்தின் முதல் நாள் அன்று வாசலில் பெரிய வண்ணக்கோலங்கள் இட்டு பரங்கிக்காய் மற்றும் பூசணிக்காய் ஆகியவை வைப்போம். வாசலில் மண் அடுப்பில் பானைகளை வைத்து, அதன் மேல் மஞ்சள் கொத்தை கட்டிவிடுவோம். பானையில் பால் விட்டு, அரிசியை போட்டு, பொங்கி வரும்போது, "பொங்கலோ பொங்கல்" என்று சொல்லுவோம்.

மூன்றாம் நாள் மாட்டுப் பொங்கல். அன்று மாடுகளை குளிப்பாட்டி, அதன் கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி, அழகு அழகாய் நெட்டி மாலை போட்டு கொண்டாடுவோம்.

இறுதி நாள் காணும் பொங்கல். அன்று ஜல்லிக்கட்டு விளையாடுவார்கள். அன்று நிறைய மக்கள் கடற்கரைக்கு சென்று உறவினர்களுடன் சந்தோஷமாக கொண்டாடுவார்கள். இவை அனைத்தும் சேர்த்து நம் கலாசாரத்தின் பண்பாடு ஆகும்.




| மாணவர் : சாரங்கா ராஜகோபாலன் | ஆசிரியர் : சிவயோகன் நாகலிங்கம் |
|---|---|

---

| தலைப்பு : பழைய தமிழ் மொழி | நிலை : 4B |
|---|---|

மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காக குகைச்சுவர்களில் தன் எண்ணங்களை குறியீடுகளைப் பொறித்து வைத்தான். அந்த சுவர்களில் ஓவியம் வரைந்து சென்றான். பின்பு, அந்த ஓவியங்கள் எழுத்தாக மாறியது.

**தமிழ் எழுத்துக்கள்:**

தமிழ் எழுத்துகளின் பழைய வரிவடிவங்களை கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது. அதில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாக பிரிக்கலாம்.

வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும். தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரிவடிவம் ஆகும். சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன. பதினொன்றாம் நூற்றாண்டுக்கும் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.

| மாணவர் : வருண் கோவிந்தராசன் | ஆசிரியர் : திரு. சிவயோகன் |
|---|---|

---

| தலைப்பு : சிலப்பதிகாரம் கூறும் தமிழர் வாழ்வியல் | நிலை : 5B |
|---|---|

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினை சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்"

காலத்தால் அழியாத தமிழர்களின் ஐம்பெரும் காப்பியங்களில் தலையானதாக விளங்கும் சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது. இந்த நூல் சங்ககால தமிழர்களின் வாழ்வியல் கோட்பாடுகளையும் அறநெறிகளையும் வரையறுக்கும் நூலாக இருந்தாலும், 21'ஆம் நூற்றாண்டில் வாழும் நம் சமுதாயத்திற்கும் வழிகாட்டாக விளங்குகிறது.

சிலப்பதிகாரம் கூறும் நீதிகள் :

1. அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்றாகும் : மக்களை நல்முறையில் வழிநடத்திச் செல்லும் அதிகாரத்தில் இருக்கும் தலைவர்கள் ஆய்ந்து அறியாது தவறி நீதி வழுவினால் அதுவே அவர்களின் தண்டனையாக, முடிவாக விளங்கும்.
2. உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும் : பண்பிலும் குணத்திலும் சாலச் சிறந்த பத்தினிப் பெண்களை சமூகத்தின் பெரியவர்கள் தெய்வமாக உயர்த்தி வழிப்படுவார்கள்.
3. ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் : முன் பிறவியில் நாம் செய்த ஊழ் (கொடியப் பாவம்) வினைகள் (செயல்கள்) நம்மை இந்தப் பிறவியிலும் விடாது தொடர்ந்து வந்து வறுத்தும் (தீங்கு விளைவிக்கும்).

| மாணவர் : ஆருத்ரன் சிவப்பிரகாஷ் | ஆசிரியர் : சுகுமார் பொன்ராம் |
|---|---|

## என் தாய்நாட்டு பயணம்

பெயர்: ஷிவானி
வகுப்பு: 5ஆ
ஆசிரியர்: சுகுமார்

எனக்கு இந்தியாவிற்கு போக பிடிக்கும். அங்கே நான் என் தாத்தா, பாட்டி மற்றும் பிற உறவினர்களின் வீட்டிற்கு செல்வேன். நாங்கள் பல கோவில்களுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்து, பழந்தமிழர்களின் சிற்ப வேலைகளையும் கண்டு களித்தோம். மாலை பொழுதில் கடற்கரைக்கு சென்று, கடல் அலையில் விளையாண்டும், கிளிஞ்சல்கள் பொறுக்கியும் வங்காள விரிகுடா கடலின் அழகை கண்டு மகிழ்ந்தோம்.

சிதம்பரம் அருகில் உள்ள பிச்சாவரம் சென்று படகு சவாரி செய்து அங்கு உள்ள நீர்நாரைகள், மற்றும் பிற பறவைகளை பார்த்தோம். இங்கு உள்ள காடுகள் அலையாத்திக் காடுகள் அல்லது சதுப்புநிலக் காடுகள் வகையை சேர்ந்ததாகும். இதையே ஆங்கிலத்தில் மாங்ரோவ் காடுகள் என்று அழைக்கிறோம். அங்கிருந்து தரங்கம்பாடிக்கு சென்று, அங்கு உள்ள கோட்டை மதில் சுவரில் அமர்ந்து கடல் காற்றை இனிதே அனுபவித்தோம். கடலில் விளையாடினோம்.

கோவை அருகில் உள்ள ஆனைமலையில் பல வனவிலங்குகள் பார்த்துவிட்டு பிறகு பொள்ளாச்சி அருகில் உள்ள ஆழியார் சென்று, ஆழியார் அணை மற்றும் குரங்கு நீர் வீழ்ச்சி பார்த்தோம்.

உறவினர்களை சந்திப்பது, பல இடங்களுக்கு செல்வது மட்டுமல்லாமல் நுங்கு, இளநீர் முதலிய சுவையான உணவுகள் தமிழகத்தின் தனி சுவையாகும்.






# அறத்துப்பால் அகராதி

அ

அகத்தே = தம்முள்ளே
அகர = அ என்ற உயிரெழுத்து
அகழ்வாரை = தோண்டுபவரை
அடும் = வருத்தும், கொல்லும்
அடைக்குந்தாழ் = அடைக்கும் தாழ்ப்பாள்
அணி = அழகு
அல்லவை = பாவங்கள், தீய செயல்கள்
அவம் = பயனின்மை, வீண், கேடு
அவா = பேராசை
அரிது = கடினம், வாய்ப்புக் குறைவு
அருள்வெஃகி = அருளை விரும்பி
அல்லால் = அல்லாமல்
அழுக்காறு = பொறாமை
அளறு = குழைசேறு; நரகம்
அளாவிய = பிசைந்த
அற்றார் = பொருளில்லாதவர்; வறியவர்
அறம் = நன்மை தரக்கூடிய வழி
அறவாழி = அறக்கடல்
அறியார் = அறியாதவர்; அறிவில்லாதவர்
அன்பிலார் = அன்பில்லாதவர்
அஃதே = அதுவே

ஆ

ஆய = ஆகிய; பெற்ற
ஆங்கே = அப்பொழுதே, அவ்விடத்தே
ஆசையுட்பட்டு = ஆசை வலையில் அகப்பட்டு
ஆதி = முதல், ஆரம்பம்
ஆரா = நிரம்பாத; அடங்காத
ஆரிருள் = மிகுந்த இருள்; தீய வாழ்க்கை
ஆற்றின்கண் நின்றான் = நல்வழியில் நின்றவன்

இ

இகழ்வாரை = ஏளனம் செய்பவரை
இசைபட = புகழ் உண்டாக
இடும்பை = துன்பம்
இடை = இடையே
இம்மையும் = இந்த வாழ்க்கையிலும்
இம்மையும் = இப்பிறவியிலும்
இயல்பினான் = முறையோடு
இயற்கை = இயல்பு, தன்மை
இயன்றது = செய்யப்படுவது
இயைந்த = பொருந்த
இலர்பலர் = ஆற்றல் இல்லாதவர் பலபேர்
இல் = இடத்தில், இல்லறம்
இல் = பயன் இல்லை
இல்லாதான் = இல்லாதவன்
இல்லெனினும் = இல்லையென்றாலும்
இல்வாழ்வான் = இல்லறத்தோடு கூடி வாழ்பவன்
இல = இல்லை
இலான் = இல்லாதவன்
இன்சொல் = இனிமையான சொற்கள்
இன்னாச்சொல் = கடுஞ்சொல்
இனிது = நல்லது; இன்பமானது

ஈ

ஈகை = கொடை
ஈனும் = தரும்

உ

உடற்றும் = வருத்தும்
உடைத்து = கொண்ட; உள்ள; உரிய
உரைப்பான் = சொல்வான்
உவமை = இணையாகக் காட்டும் ஒப்புமை
உளவாக = இருக்கும்போது
உற்றநோய் = பெற்ற துன்பங்கள்

நிலை: 6அ மாணவிகள்: சிந்து சண்முகம், திரிசா பரத், டேனிகா ஜோ இனிகோ, லோரன் சேவியர்; ஆசிரியர்: தீத்தாரப்பன் மந்திரமூர்த்தி

## அறத்துப்பால் அகராதி

ஊதியம் = இலாபம், சன்மானம், சம்பளம்
ஊருணி = ஊரார் நீருண்ணும் குளம்
ஊன் = தசை, மாமிசம்

எ
எங்ஙனம் = எவ்வாறு, எப்படி
எச்சம் = மிச்சம், மீதி
எஞ்ஞான்றும் = எப்பொழுதும், நித்திய
எண்ணாது = பின் விளைவை எண்ணாமல்
எள்ளப்படும் = இகழப்படும்
எள்ளாமை = இகழப்படாமை
என்பும் = எலும்பும்
என்னாது = கருதாமல், எண்ணாமல்
எனின் = என்றால்

ஏ
ஏகினான் = சென்றான்
ஏதம் = குற்றம்
ஏதிலார் = அன்னியர், அயலார்

ஐ
ஐந்தவித்தான் = ஐந்து பொறிகளின்
வழிப்பிறக்கும் தீய
ஆசைகளை அழித்தவன்

ஒ
ஒருகால் = ஒரு காலத்தில்
ஒல்கார் = நீங்கார், சுருங்கார், குன்றார்
ஒல்கார் = தளராதவர்
ஒழுக்க = முறையாக, சீராக

ஓ
ஓர்த்துள்ளம் = தெளிய ஆராயும் உள்ளம்

ஔ

க
கணமேயும் = கண் இமைப்பதற்குள்
கடந்துவிடக் கூடிய காலம்
கள்ளாமை = களவு செய்யாமை
கன்றிய = மிக்க; மிகுந்த
காண்பு = தெரியும்; காண்பது
கால் = நேரம்; காலம்
குழையும் = வாடும்
கேண்மை = உறவு, நட்பு
கேடு = கெடுதல், தீமை
கேளிர் = உறவினர்
கைகூப்பி = கை குவித்து
கைம்மாறு = பிரதியுபகாரம்
கைப்பொருள் = செல்வம்
கொள்வர் = கருதுவர்
கோடாமை = சாயாமை
கோல்போல் = தராசு முள் போல

ச
சமன்செய்து = சமமாக நின்று
சால்பின் = பண்பின்
சான்றோர் = அறிவொழுக்கங்களால்
நிறைந்த பெரியோர்
சான்றோர் = நீதிபதி
சான்றோன் = அறிஞன்
சிவிகை = பல்லக்கு
சீர்தூக்கும் = குறையையும்,
நிறையையும் எடை போடும்
சீர்மை = மேன்மை, உயர்வு
செய்ந்நன்றி = செய்த நன்றி
சேர் = சேர்த்து; கூடி
சேரா = சேர்வதில்லை; கூடுவதில்லை
சொலின் = சொன்னால்

நிலை: 6அ மாணவிகள்: சிந்து சண்முகம், திரிசா பரத், டேனிகா ஜோ இனிகோ,
லோரன் சேவியர்; ஆசிரியர்: தீத்தாரப்பன் மந்திரமூர்த்தி

## அறத்துப்பால் அகராதி

ஞ
ஞாலத்தின் = உலகத்தின்

த
தக்கார் = நடுவு நிலைமை உடையவர்
தகவிலர் = நடுவு நிலைமை இல்லாதவர்
தலையென்ப = உயர்வான
தன்னூன் = தன் உடல்
தாள் = பாதம்
திண்மை = உறுதி, வலிமை
திரு = திருமகள், செல்வம்
தினைத்துணை = சிறிய உதவி
தீதுண்டோ = துன்பம் உண்டோ
தீப்பிணி = கொடிய நோய்
தீவினை = தீய செயல்
துப்பார்க்கு = உண்பவர்க்கு
துப்பாயார் = துணை நின்றவர்
துணை = ஆதரவு; உதவி; பாதுகாப்பு
துறந்தார் = பற்றுவிட்டவர்
துன்னியார் = நெருங்கிய உறவினர்
தெருளாதான் = ஞானமில்லாதவன்
தேய = குறைய
தூஉம் = பொழியும்
தொழார் = வணங்காதவர்
தொழும் = வணங்கும், வழிபடும்

ந
நகச்சொல்லி = மகிழுமாறு சொல்லி
நகச்சொல்லி = மகிழுமாறு பேசி
நகும் = கேலியாக சிரிக்கும்
நகை = சிரிப்பு
நட்டார்கண் = நண்பர்களிடத்தில்
நடை = நடந்து செல்லும் செயல்
நயன்தூக்கின் = நன்மை-தன்மை ஆராய்ந்தால்
நயனில = இனிமை இல்லாத
நயனுடையான் = நற்பண்புகளை உடையவன்
நற்றாள் = திருப்பாதம்
நாடி = தேடி
நின்றொழுகல் = நின்று நடந்து; வழியில் நடந்து
நீடு = நெடிய, நீண்ட
நீர்மை = நீரின் தன்மை (நீர் உயிர் காக்கும்)
நீர்மையுடையார் = நீரின் தன்மை உள்ளவர்
நுண்ணிய = நுட்பமான
நெறி = அடிப்படை விதி, முறை; வழி
நோக்க = காண்க; பார்க்க
நோன்மை = பொறுமை; பெருந்தன்மை
தோன்றல் = பொறுத்துக் கொள்ளுதல்

ப
பகச்சொல்லி = நீங்கும்படி சொல்லி
பகச்சொல்லி = புறங்கூறி
பதடி = பயனற்றவர், பயனின்மை, பதர்
பயன்தூக்கார் = பயனை கருதாமல்
பயனில = குறிக்கோளற்ற, வீண்
பயனென்கொல் = என்ன பயன்?
பல்லார் = பல மக்கள், பலர்
பனைத்துணை = பெரிய உதவி
பனுவல் = நூல்; புத்தகம்
பாத்தூண் = பகுத்து உண்ணும்
பாத்தூண் = பகிர்ந்து உண்ணும்
புகழ்பட = பாராட்டு உண்டாகுமாறு
புலால் = ஊன், மாமிசம்
புறங்கூறாமை = பிறர் பற்றி கோள் சொல்லாமை
புறங்கூறான் = பிறர் பற்றி கோள் சொல்லாதவன்
புன்கணீர் = துன்பத்தை காணும்போது வரும் கண்ணீர்
பூசல் = பூசுதல், படிதல்

*நிலை: 6அ மாணவிகள்: சிந்து சண்முகம், திரிசா பரத், டேனிகா ஜோ இனிகோ, லோரன் சேவியர்; ஆசிரியர்: தீத்தாரப்பன் மந்திரமூர்த்தி*

## அறத்துப்பால் அகராதி

பூண்டார் = மேற்கொள்பவர்
பெரிது = பெரியது
பேதைமை = அறியாமை, மடமை
பேரா = மாறாத; நிலையான
பிற = மற்ற
பீடு = பெருமை
புன்சொல் = கடுஞ்சொல்
பொய்தீர் = பொய்யற்ற
பொருள்வெஃகி = பொருளை விரும்பி
பொறி = கருவி, புலன்
பொறுத்தல் = தாங்கிக் கொள்ளுதல்
பொறை = பொறுமை
பொன்றுங்கால் = அழியும் காலத்தில்
பொன்றா = அழிவில்லாத

ம

மடமை = முட்டாள்தனம்; அறியாமை
மரீஇ = பழகி, பயின்று
மறுமையும் = மறுபிறவியிலும்
மன்னுயிர் = நிலைபெற்றஉயிர்
மன்னும் = நிலைபெற்ற
மாசறு = குற்றமற்ற, குற்றம் நீங்கிய
மாசற்றார் = குற்றம் நீங்கியவர்
மாணடி = இறைவனின் திருவடி
மாணப் பெரிது = மிகவும் பெரிது
மாந்தர் = மக்கள்
மாற்றல் = ஒன்று நீங்கி மற்றொன்று வருதல்
முகந்திரிந்து = முகம் வேறுபட்டு, முகங்கோணி
முதல = முதல், முதலாக; தொடக்கமாக
முந்தி = முன்னால், முன்பு; முதன்மை
முனிய = வெறுக்க
மெய்ப்பொருள் = உண்மைப்பொருள்
மெய்ப்பொருள் = நிலையான பொருள்
மேன்மை = உயர்வு
மோப்ப = வாசனையை மூக்கால் உணர

ய

யாக்கை = உடல்; தேகம்; மேனி
யாகாவாராயினும் = எவற்றை காக்காமல் இருந்தாலும்

வ

வற்றல் = வறண்ட
வளங்குன்றி = வளத்தில் குறைந்து
வன்சொல் = கடுமையான சொற்கள்
வன்பாற்கண் = வளங்குன்றிய பாலை நிலத்தில்
வாரி = வெள்ளம், கடல்
வாலறிவன் = பேரறிவு உடையவன்
வாழ்வாங்கு = வாழும் முறை
வானகமும் = விண்ணுலகமும்
விசும்பின் = விண்ணின், வானத்தின்
விருந்தோம்பல் = விருந்தினரை உபசரிக்கும் முறைமை
விரிநீர் = கடல் நீர்
விழுச்செல்வம் = மதிப்புமிகு செல்வம்
விழுமம் = துன்பம்
விழுப்பம் = மேன்மை, சிறப்பு
விழுமியார் = மேலோர், உயர்ந்தவர்
விற்றுக்கோள் = விற்று வாங்கிக் கொள்ளுதல்
வெகுளி = கடும் கோபம், அப்பாவி
வெஃகாமை = விரும்பாமை
வெஃகி = விரும்பி
வேளாண்மை = உபகாரம்
வையம் = நிலம்; பூமி; உலகம்
வையத்து = உலகத்து
வேண்டுதல் = விரும்புதல்
வேண்டுங்கால் = விரும்பினால்
வேண்டாமை = அவாவாமை

நிலை: 6அ மாணவிகள்: சிந்து சண்முகம், திரிசா பரத், டேனிகா ஜோ இனிகோ, லோரன் சேவியர்; ஆசிரியர்: தீத்தாரப்பன் மந்திரமூர்த்தி

| தலைப்பு : கல்வி திருக்குறள் | நிலை : 6ஆ |
|---|---|

அனுஶ்ரீ ஜெயக்குமார்
ஆசிரியர் : பாரத்
வகுப்பு : 6 ஆ

## கல்வி திருக்குறள்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு


→ தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.

→ மணலில் தோண்டிய நீர்க்கிணற்றில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். அது போல மக்களுக்கு கல்விகற்ற அளவிற்கு அறிவு ஊறும்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

→ எண்ணும் எழுத்தும் ஒருவர்க்கு இரு கண்களைப் போன்றது.

→ எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.




| மாணவர் : அனுஶ்ரீ ஜெயக்குமார் | ஆசிரியர் : பாரத் இராமமூர்த்தி |
|---|---|

| தலைப்பு : வாய்மொழி காயங்கள் | நிலை : 6ஆ |
|---|---|

பெயர்: அர்ச்சனா அண்ணாதுரை
வகுப்பு: 6ஆ
ஆசிரியர்: திரு பரத் ராமமூர்த்தி

# வாய்மொழி காயங்கள்



தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

அதாவது நெருப்பால் ஏற்படும் காயம் காலத்தால் குணமாகும், ஆனால் கொடுமையான வார்த்தைகளால் ஏற்படும் காயம் ஒருபோதும் குணமடையாது. 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட ஒரு திருக்குறள் இன்றும் பொருத்தமாக இருக்கிறது, ஏனெனில் மக்கள் பேசுவதற்கு முன்பு சிந்திக்க நினைவூட்டுகிறது. ஏனென்றால் எந்தவொரு உடல் காயமும் குணமடையக்கூடும், ஆனால் ஆத்மாவுக்கு ஏற்பட்ட காயம் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்.

யாரோ ஒருவர் எப்படி உணருகிறார் என்பது எங்களுக்கு தெரியாது. ஒரு சிறிய பாராட்டு அல்லது ஒரு புன்னகை கூட அவர்களை மிகவும் நன்றாக உணரக்கூடும். உங்கள் சொற்களை புத்திசாலித்தனமாகத் தேர்ந்தெடுப்பது, நீங்கள் மக்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

உதாரணத்திற்கு, ஒருவரிடம் அவர்கள் போதுமானவர்கள் இல்லை என்று சொல்வது மீண்டும் மீண்டும் அவர்களுக்கு உதவாது. அதற்கு பதிலாக, ஊக்கமும் உதவியும் உண்மையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தி அந்த நபரின் நம்பிக்கையை உயர்க்க உதவும்.





| மாணவர் : அர்ச்சனா அண்ணாதுரை | ஆசிரியர் : பாரத் இராமமூர்த்தி |
|---|---|



## தமிழ் ஓசை குழு:

ரேவதி கிருஷ்ணா, ஜெயப்பிரதா கிசன்சிங், திரிபுரசுந்தரி ராஜேந்திரன், ரேவதி இராஜாராம் பிரசாத்,
சங்கீதா மகேந்திரன், மாலா வேதையன், குரு குருபரன், ராமநாதன் பழனியப்பன்,
ராதாகிருஷ்ணன் அழகப்பன், பரத் ராமமூர்த்தி, சிவகுமார் மோனி, சுவாமிபிரசாத் கோபாலன்

தேவகி செல்வன், மங்கையற்கரசி தாயுமானவன், கீதா மீனாட்சி சுந்தரம்,
ராஜி சண்முகம், சரண் சரவணன், செந்தில்குமார் பாலசுப்ரமணியம்

## கேரி தமிழ்ப்பள்ளியின் "தமிழ் ஓசை" போட்டிகள்

அமெரிக்க வாழ் தமிழ்க் குடும்பங்களின் தமிழ்க் கல்வித் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் கேரி தமிழ்ப்பள்ளி திறம்பட செயலாற்றி வருகிறது. அப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் தங்கள் தமிழ்த் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள, கேரி தமிழ்ப்பள்ளி பல வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டுள்ளது. அதில் ஒரு வாய்ப்பாக, 2019-ஆம் டிசம்பர்த் திங்கள் 8-ஆம் நாளன்று “தமிழ் ஓசை” என்றழைக்கப்பட்ட போட்டிகளை நடத்தியது.

தமிழ் ஓசையில் மொத்தம் பத்து (10) விதமான போட்டிகள் இடம் பெற்றன. சின்னஞ்சிறாருக்கென்று ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டி, மாறுவேடப்போட்டி போன்ற போட்டிகளும், இடை நிலைகளில் பயிலும் மாணவர்களுக்கு சொற்கற்கள், தமிழ்த் தேனீ, தமிழோடு விளையாடு போன்ற போட்டிகளும், மேல் நிலைகளில் பயிலும் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, திருக்குறள் போட்டி, சங்க காலப் பாடல்கள் ஆகிய போட்டிகளும் நடத்தப்பட்டன.

முழுவதும் தன்னார்வலர்களாலேயே நடத்தப்பட்ட இப்போட்டிகள், ஆசிரியர் சரவணன் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டன. முன்னூறுக்கும் மேற்பட்ட மாணவர்களிடமிருந்து அறுநூறுக்கும் மேற்பட்ட பதிவுகளை உள்வாங்கி ஒரு நாள் முழுவதும் நடைபெற்ற இப்போட்டிகள் பெற்றோரிடையேயும் மாணவரிடையேயும் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளன.

போட்டிகள் குறித்த நேரத்தில் தொடங்கி குறித்த நேரத்தில் முடிந்தன. போட்டிகளில் பங்கேற்ற மாணவ மாணவியரை அவர்களின் பெற்றோர் பயிற்றுவித்து, இப்போட்டிகளின் குறிக்கோளான தமிழ்க்கல்வியினை அவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கினர் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரி தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களும், தமிழ் அறிந்த, தமிழ் மொழியில் ஆர்வமுள்ள பெற்றோர்களும் நடுவர்களாக சேவை செய்து போட்டிகளில் பங்கேற்றவர்களின் படைப்புகளை, மதிப்பிட்டார்கள். அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள். இவ்வாறான வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்கும் கேரி தமிழ்ப்பள்ளியின் சேவை மென்மேலும் தொடர எமது வாழ்த்துக்கள்.

நன்றி

தமிழ் ஓசை குழு

# தமிழ் ஓசை 2019 - போட்டி முடிவுகள்

| போட்டிகள் | நிலை | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| ஓவியப் போட்டி | மழலை | ஹஷ்வந்த் பார்த்திபன் | அத்வைத் மகேந்திரன் | பவன்யா சாந்தகுமார் |
| | 1 | ஸ்ரீசைலேஷ் ராமச்சந்திரன் | ஆரவ் பிரவீன் | குருசரண் ராம்குமார் |
| | | | கெனிஷா ஹரீஷ் | |
| | | | லக்ஷிதா கிருஷ்ணா | |
| | 1அ | ஸ்ரீராம் குமார் | யஷ்னா கண்ணன் | ஹர்ஷிதா ஹரிபாபு |
| | 1ஆ | தேஜேஷ் கார்த்திக் பிரபு | ஆண்யா அருண்குமார் | விஷி சரவணா குமார் |
| | | வர்ஷா நந்தகுமார் | | |
| பாட்டுப் போட்டி | மழலை | அச்சிரா மதியழகன் | அனிஷ் ஆத்திரேயா | நிவன் சிதம்பரநாதன் |
| | | ஹன்சினி பா தயாளம் | ஹர்ஷினி ராம்குமார் | |
| | | பிரணவ் பிரகதீஷ் | பிரித்திகா பிரேம்குமார் மலர்க்கொடி | சாய்சரண் மாரிச்செல்வம் |
| | | ஷிவின் தர்மேஷ் | | |
| | 1 | சஞ்சித் பிரவீன்குமார் | ஸ்ரீயா குமாரவேல் | நிஷிகா ரங்கநாதன் |
| | 1அ | நியதா ராமானுஜம் | ஸ்கந்தா ஐயர் | தக்கிய்யா முகம்மது ரியாஸ் |
| | | | | கிருத்திகா கேசவன் |
| | 1ஆ & 1அ/1ஆ | ஆண்யா அருண்குமார் - 1ஆ | மோஹித்தா சுரேஷ் - 1ஆ | வர்ஷா நந்தகுமார் - 1ஆ |
| மாறுவேடம் | மழலை | நிவன் சிதம்பரநாதன் | ஹன்சினி பா தயாளம் | ஷிவின் தர்மேஷ் |
| | 1 | மதுநிஷா வைரமுத்து | தாக்க்ஷயிணி சசிகுமார் அனு | பிரணிக்கா சுப்பிரமணியன் |
| | | | வித்யுத் கிருஷ்ணா பிரவீன் | |
| | 1அ | நியதா ராமானுஜம் | கவிமுகில் பரமசிவம் | ஷ்ரனவ் வினோத் |
| | 1ஆ | லித்திஷ் குமார் பிரகாஷ் | சாத்விகா சுரேஷ் | ஹரிஷ் கார்த்திக் மகேஷ்வரன் |
| தமிழ் தேனீ | 1ஆ & 1அ/1ஆ | காருண்யஸ்ரீ விக்னேஷ் - 1ஆ | மோஹித்தா சுரேஷ் - 1ஆ | லித்திஷ் குமார் பிரகாஷ் - 1ஆ |
| | | | | நந்திதா அனந்தராமன் - 1ஆ |
| | 2அ | அனிருத் உதயகுமார் | அமேண்டா ஜனார்த் | ருத்ரா ராமச்சந்திரன் |
| | | | | ஸ்ரீராம் கணேசன் |
| தமிழோடு விளையாடு | 1ஆ | காருண்யஸ்ரீ விக்னேஷ் | அகில் ராதாகிருஷ்ணன் | ஹன்ஷிகா சிவக்குமார் |
| | 2அ | முகுந்த் உதயகுமார் | கேஷவ் அருண் | அசிதா லட்சுமிநாராயணன் |
| | 2ஆ | ஜெய் சூர்யா கோபிநாத் | வமிக்க முத்துராஜி கிருஷ்ணா | ஷ்ரியா பிரகாஷ் |
| சொற்கற்கள் | 2அ | சித்தார்த் இராஜகோபால் | கௌதம் கார்த்தி | ஸ்ரீராம் கணேசன் |
| | | சான்விஸ்ரீ ராஜேஷ் - 1ஆ | ஸ்ரீநிதி ராதாகிருஷ்ணன் | கலைவர்தினி முத்துராமன் |
| | 2ஆ | பிரேர்ணா மீனாட்சி சுந்தரம் | மெலிசா மார்டோ | அம்ரிதா செந்தில்குமார் |
| | | கவுசிக் பாலாஜி | முகில் ராதாகிருஷ்ணன் | ஹரிணி நிர்மல்குமார் - 3அ |
| | 3அ | லாவண்யா கார்த்தி | ஹர்ஷினி மோகன்ராஜா | மாதினி சிவசைலம் |
| | | மிஷா பாரத் | கிருஷ்ணா குமரப்பன் | அனீஷ் பாஸ்கர் - 2அ |
| | 3ஆ & 4அ | ரோஹன் சுரேஷ் - 3ஆ | ஷ்ருதி சுரேஷ் - 4அ | |
| | | பவித்ரன் பசுபதி - 3ஆ | | |
| திருக்குறள் | 2அ | ஜெய்கிருஷ்ணா சிவகுமார் - 1ஆ | அமேண்டா ஜனார்த் | சித்தார்த் இராஜகோபால் |
| | 2ஆ | ஷ்ரியா பிரகாஷ் | ஜெய் சூர்யா கோபிநாத் | ஷிவானி ஐயர் |
| | 3அ | ஸ்ரீமதி பார்த்திபன் | மிஷா பாரத் | நிதீஷ் ஹரிபாபு |
| | 3ஆ முதல் 6ஆ வரை | தன்யா பாலசுப்ரமணியன் - 4ஆ | சுகிதா விஜயகுமார் - 3ஆ | சஹானா சுரேஷ் - 4ஆ |
| பேச்சுப் போட்டி | 2ஆ | ஷிவானி ஐயர் | ஹரிணி நாச்சியப்பன் | ஜெய்கிருஷ்ணா சிவகுமார் - 1ஆ |
| | 3அ | கிரிதரன் அனந்தராமன் | ஹரிணி நிர்மல்குமார் | ஹரிநந்தண் சதீஷ் குமார் நிர்மலா |
| | | | நிரந்தரா சிவக்குமார் | |
| | 3ஆ முதல் 6ஆ வரை | சுகிதா விஜயகுமார் - 3ஆ | சஹானா சுரேஷ் - 4ஆ | வினய் நாகராஜன் - 3ஆ |
| | | | மதுமிதா கோபிநாத் - 5அ | |
| கட்டுரைப் போட்டி | 3அ & 3ஆ | நித்திலா இளையராஜா - 3அ | பவித்ரன் பசுபதி - 3ஆ | ஸ்ரீமதி பார்த்திபன் - 3அ |
| | 4அ முதல் 6ஆ வரை | சுசித்ரா தானுமலையான் - 4அ | ஷுருதிக்கா ரவிசங்கர் - 4அ | அம்ரிதா செல்வராஜ் - 4ஆ |
| | | தன்யா பாலசுப்ரமணியன் - 4ஆ | | |
| சங்கத்தமிழ் பாடல்கள் | 4ஆ முதல் 6ஆ வரை | மதுமிதா கோபிநாத் - 5அ | ரோஹிதா தாரணா ஜெய் குமார் - 2ஆ | ஷிவாலி இராஜேந்திரன் - 5ஆ |
| | | | | நித்தின் ஹரிதாஸ் - 5அ |




தமிழ் மழை குழு:

ராகவன் ராமசுவாமி வெங்கட், நிவேதிதா ராகவன், ஜெயப்பிரதா கிசன்சிங், அருணா தர்மர், சங்கீதா பாலசுப்ரமணியன், ஹரீஷ் பாலகிருஷ்ணன், சக்திவேல் கார்த்திகேயன், அம்பலவாணன் சுப்பையா, கணேசன் மணி






CARY TAMIL SCHOOL


CARY TAMIL SCHOOL


கேரி தமிழ்ப்பள்ளி
CARY TAMIL SCHOOL










CARY TAMIL SCHOOL


CARY TAMIL SCHOOL




CARY TAMIL SCHOOL






CARY TAMIL SCHOOL






CARY TAMIL SCHOOL


CARY TAMIL SCHOOL




கேரி தமிழ்ப்பள்ளி
CARY TAMIL SCHOOL






கேரி தமிழ்ப்பள்ளி
CARY TAMIL SCHOOL








கேரி தமிழ்ப்பள்ளி
CARY TAMIL SCHOOL


கேரி தமிழ்ப்பள்ளி


கேரி தமிழ்ப்பள்ளி


கேரி தமிழ்ப்பள்ளி










**Cary Tamil School, Cary, North Carolina, USA**

கேரி தமிழ்ப்பள்ளி



# Cary Tamil School,

## Cary, North Carolina, USA

AdvancED ACCREDITED

https:/carytamilschool.org/